விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 03 ஞாயிற்றுக்கிழமை (18.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 335

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# 109 தமிழ்ப் பெண்கள் இராணுவத்தில் இணைப்பு

## ஆயுதப் பயிற்சி இவர்களுக்கு இல்லை

இலங்கை இராணுவத்துக்கு வடக்கின் தமிழ்ப் பெண்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை நேற்று கிளிநொச்சி பாரதிபுரத்தில் இடம்பெற்றது. இதன்போது 109 தமிழ்ப்பெண்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதாக கிளிநொச்சி பாதுகாப்பு படையணி தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தெரிவித்துள்ளார். இவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படமாட்டாது எனவும் அவர் கூறினார். (23ஆம் பக்கம் பார்க்க)



## 2-வது வாசிப்பு நிறைவேறியது

2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நிறைவேற்றப்பட்டது.

இதற்கு ஆதரவாக 156 வாக்குகளும், எதிராக 53 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அரசாங்கத்துடன் இணைந்து அதன் பங்காளிக் கட்சிகள் ஆதரவாகவும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஜனநாயக தேசிய முன்னணி ஆகிய எதிர்த்தும் வாக்களித்தன. (எ-11)


## கிணற்றுக்குள் விழுந்து முதியவர் உயிரிழப்பு

கிணற்றினுள் தவறி விழுந்த முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் கைதடி தெற்கில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த கந்தையா யோகம் (வயது 64) என்ற முதியவரே பலியானவராவார். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

குறித்த முதியவர் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் (23ஆம் பக்கம் பார்க்க)

## பால் தாக்கரே காலமானார்



இந்தியாவின் கடும்போக்கு இந்து அரசியல் தலைவர்களில் ஒருவரான சிவசேனை கட்சியின் நிறுவனத் தலைவர் பால் தாக்கரே நேற்று சனிக்கிழமை பிற்பகல் காலமானார். அவருக்கு வயது 86. நுரையீரல் (23ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தில் தமிழ்ப் பெண்கள் ஏன் அவசரஅவசரமாக இணைப்பு?

### சந்தேகம் வெளியிடுகின்றன பெண்கள் அமைப்புகள்

(கிளிநொச்சி)

தமிழர்களுக்குத் தேவையான முக்கிய விடயங்கள் எதனையும் பூர்த்தி செய்யாத நிலையில் இராணுவத்தில் மாத்திரம் அவசர அவசரமாக பெண்களைச் சேர்ப்பது குறித்து தமக்கு சந்தேகம் நிலவுவதாக சில் பெண்கள் அமைப்புகள் கூறியுள்ளன.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக 109 தமிழ் இளம் பெண்கள் இராணுவத்தில் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வைபவம் கிளிநொச்சி பாரதிபுரத்தில் கோலாகல வைபவமாக நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றிருக்கிறது.

18இற்கும் 22 இற்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள் இவ்வாறு இராணுவத்தில் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். சிவில் வேலைக்காகவே தம்மைச் (23ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிரமுகர் விநாயகம் கைது!

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான விநாயகம், பிரான்ஸில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பின் ஒரு பிரிவிற்கு விநாயகம் தலைமை வகிக்கிறார்.

புலிகளின் மற்றுமொரு சிரேஷ்ட தலைவரான பரிதி எனப்படும் றீகன் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் விநாயகம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரான்சின் (23ஆம் பக்கம் பார்க்க)

## தமிழில் பேசினார் ஜப்பான் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதுவர் நோபூகிதோ ஹெபோ யாழ்.மண்ணில் தமிழில் உரையாற்றினார்.

ஜப்பானுக்கும், இலங்கைக்கும் இடையிலான ராஜதந்திர உறவின் 60ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு ஜப்பானிய தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமாலை 4.30 மணியளவில் இசைநிகழ்ச்சி ஒன்று இடம்பெற்றது.

இதில் ஜப்பான் தூதுவர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இதன்போதே அவர் தமிழில் உரையாற்றினார்.

கடந்த 60 (23ஆம் பக்கம் பார்க்க)

## இறுதி யுத்தத்திற்கு முன் வன்னியில் வாழ்ந்த ஒரு இலட்சத்து 46 ஆயிரம் பேர் எங்கே?

### கேள்வி எழுப்புகிறது ஐ.நா பரிசீலனைக் குழு

வன்னி மக்கள் தொடர்பில் இறுதிக்கட்ட யுத்தத்தின் பின்னரும் அதற்கு முன்னரும் இலங்கை அரசாங்கத்தினால் பதியப்பட்ட தரவுகளை ஒப்பிட்டு பார்க்குமிடத்து 1 இலட்சத்து 46 ஆயிரத்து 676 பேர் கணக்கில் அடங்கவில்லை என்று ஐ.நா. உள்ளக பரிசீலனைக் குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் பின்னர்அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கைக்கும் யுத்தத்துக்கு முன்னர் வன்னியில் காணப்பட்டதாகக் கூறப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கைக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

இந்த முரண்பாடு தொடர்பில் குழுவின் உறுப்பினர்களிடையே வாதவிவாதங்கள் இடம்பெற்றதாகவும் இவ்வாறு கணக்கில் வராத மக்கள் தொகையினர் யுத்த காலகட்டத்தின்போது உயிரிழந்திருக்கலாம் என்றும் மேற்படி பரிசீலனைக் குழு குறிப்பிட்டுள்ளது.

2008 ஒக்ரோபர் காலப் பகுதியில் 4 இலட்சத்து 29 ஆயிரத்து 59 பேர் இருந்ததாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களால் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் எழுத்துமூலம் கையளிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் (23ஆம் பக்கம் பார்க்க)

சிங்கர் அறிமுகப்படுத்தும் அதிசிறந்த உறுதியான மோட்டர் சைக்கிள்கள்
விற்பனைக்கு பிந்திய இலவச சேவைகள்

SAFARI

72 CC 4 ஸ்ட்ரோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
சிவப்பு, நீலம், கறுப்பு, சில்வர் வர்ணங்களில்

GALAXY 100

100 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

CAMY 80

80 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
பாதுகாப்பு அலாம் மணி
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

SUPER CUP

4 Stroke 90cc Air Cooled Engine
Starting System : Electric/ Kick
Detachable Rear Seat
Alloy Wheels
Drum Brakes
Colours: RED/BLACK / GREEN
~~Rs. 145000/=~~
Rs. 130500/=

ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
சுன்னாகம், மானிப்பாய், சங்கானை, நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, கொடிகாமம், பரித்தித்துறை
தவணைக் கொடுப்பனவு வசதியும் உண்டு
சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரகசியமாக திட்டங்களை நிறைவேற்றுபவர் பிரபாகரன்

## தீபாவளி தினத்தன்று கே.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

பிரபாகரன் இரகசியமாக திட்டங்களை நிறைவேற்றக் கூடியவர். அதை வேறு எவரிடமும் பகிர்ந்து கொள்ள மாட்டார். ராஜீவ் காந்தி கொலை குறித்து அவர் எனக்கு எதனையும் தெரிவிக்கவில்லை என கே.பி. தெரிவித்துள்ளார்.

தீபாவளி தினத்தை முன்னிட்டு கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த மூன்று ஆண்டுகாலமாக இலங்கை அரசின் தடுப்புக் காவலில் இருந்த நான், என்றுமில்லாதவாறு இவ்வருடம்தான் மிகவும் சிறப்பாகவும், சுதந்திரமாகவும் தீபாவளியைக் கொண்டாடியதாக கூறினார் கே.பி. அதிலும் தீபாவளி அன்று காலையில் நேரோ அமைப்பில் உள்ள குழந்தைகளோடு தீபாவளியைக் கொண்டாடினேன். அவர்களுக்கு புத்தாடைகள் வழங்கி, அவர்கள் என்னை அப்பா அப்பா என அழைத்தனர்.

மதியவேளை அன்பு இல்லத்தில் இருக்கும் ஆண்களோடு ஆட்டுக்கறியுடன் சாப்பிட்டு தீபாவளி கொண்டாடினேன். மாலை பெண்கள் தங்கியுள்ள பாரதி இல்லத்தில் பலகாரங்களுடன் ஆடல் பாடல் என தீபாவளி கொண்டாடியதையும் என்னால் மறக்கவே முடியாது என்றார்.

மேலும் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பில் உங்களை இந்தியா தேடுதே என கேட்கப்பட்ட கேள்விக்கு கே.பி. பதிலளிக்கையில்,

ராஜீவ் காந்தி படுகொலை சம்பவத்தில் எனக்கு எந்தவித தொடர்பும் இல்லை. தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை பல்வேறு பிரிவுகள் இருந்தன.

அடுத்த பிரிவில் வேறொருவரும் தலையிட முடியாது. தமிழகத்திலிருந்து செயல் பட்டவர்கள் வேறு ஒருவரது தலைமையின் கீழ் செயல்பட்டனர்.

எனக்கு மட்டுமல்ல... இலண்டனிலிருந்த கிட்டுவுக்கும் கூட ராஜீவ் கொலைபற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. உண்மையைச் சொன்னால் கிட்டுவிடம், ராஜீவ் காந்தியுடனும் இந்தியாவுடனும் நல்ல உறவை மேம்படுத்துமாறுதான் பிரபாகரன் கூறியிருந்தார். காசி ஆனந்தன், பொருளாதார வல்லுநர் அர்ஜுன சிற்றம்பலம் போன்றோர் மூலம் இந்தியாவுக்கு சென்று ராஜீவை சந்திக்க கிட்டு ஏற்பாடுகளை செய்திருந்தார்.

ராஜீவ் காந்தியை கொலை செய்யும் படி உங்களுக்கு கட்டளையிட்டது யார் என கேட்கப்பட்ட கேள்விக்கு,

ராஜீவை கொலை செய்யும் திட்டத்தை பிரபாகரனும் பொட்டம்மானும் தான் திட்டமிட்டிருக்க வேண்டும். பிரபாகரன் இரகசியமாக திட்டங்களை நிறைவேற்றக் கூடியவர். அதை வேறு எவரிடமும் பகிர்ந்து கொள்ளமாட்டார்.

எனக்கு அப்படி பிரபாகரன் கட்டளை போடவில்லை. நானோ அல்லது என்னுடைய கே.பி.பிரிவோ இந்த நடவடிக்கையில் ஈடுபடவில்லை. என்னுடைய பணி என்பது இயக்கத்திற்கு ஆயுதங்களை கொடுப்பது என்பது தான்.

எந்தக்காலப்பகுதியில் இந்தியா உங்களை விசாரணைக்குட்படுத்தியது?

ராஜீவ் கொலை தொடர்பாக அண்மையில் ஊடகங்களில் வெளியானது போல் இப்போது என்னிடம் விசாரணை நடத்தப்படவில்லை நான் 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளிலேயே விசாரிக்கப்பட்டுவிட்டேன். சி.பி.ஐ.மற்றும் றோ அமைப்பு அதிகாரிகள் என்னிடம் விசாரித்தனர்.

2010, 2011 காலப்பகுதியில் விசாரணை செய்ததாக கூறுனீர்களே அவ்வாறெனில் இரு தடவைகள் விசாரிக்கப்பட்டுள்ளீர்களா? எங்கெங்கே நடைபெற்றன?

ஆம். இருதடவைகளும் இந்திய சி.பி.ஐ., றோ அமைப்பினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டேன். கொழும்பு பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் தனியறையில் விசாரணைக்கு அமர்த்தப்பட்டேன்.

முதல்தடவை ராஜீப் கொலை தொடர்பாகவும், இரண்டாவது தடவை பொதுவான அரசியல் முறைமை பற்றியுமே விசாரித்தனர்.

இதேபோல் இந்தியாவின் றோ அல்லது வெளியுறவுத்துறை அமைச்சரகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க லாம் என்னுடன் சிலர் ஆலோசனை நடத்தினர்.

விடுதலைப்புலிகள் இயக்க போராளிகளின் எதிர்காலம், புலம் பெயர் தமிழர்கள், புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள், ஆயுதப் போராட்டத்தின் எதிரொலி ஆகியவற்றை பற்றி விவாதித்தனர் என்று கே.பி. கூறியுள்ளார்.

இலங்கை அரசோ, இல்லை இந்திய அரசோ மீண்டும் எத்தனை தடவைகள் என்னை விசாரணைக்கு அழைத்தாலும் நான் பதிலளிக்க தயார் நிலையிலேயே இருக்கிறேன் என்றார் கே.பி.

உங்களின் உண்மையான பெயர் என்ன? தர்மலிங்கம் என்பது குடும்பப் பெயர். உங்களின் பெயர் சண்முகம்? குமரன்? எனக் கேட்டதற்கு, எனது பெயர் செல்வராசா பத்மநாதன் ஆனால் இன்டர்போல் பட்டியலில் சண்முகம் குமரன் தர்மலிங்கம் என்றுதான் குறிப்பிட்டுள்ளது எனக் கூறியுள்ளார்.

இன்டர்போல் பட்டியலில் உங்கள் பெயர் அதாவது சர்வதேசத்தால் தேடும் பயங்கரவாதி என இலங்கைக்கும் தெரியும். இப்போது இலங்கை உங்களை எப்படி பார்க்கிறது என வினவுகையில்,

நான் தற்போது மிகவும் சுதந்திரமாகவே நடமாடுகின்றேன். என்னைப்பற்றி இலங்கை அரசுக்கு முழுமையாக தெரிவித்துவிடடேன் என கூறினார் கே.பி. தொடர்ந்து அளித்த பேட்டியில்,

**கண்ணாடி பத்மநாதன்**

கே.பி.என்பதன் சுருக்கம் குமரன் பத்மநாதன் என்பது மருவிப் போய் இப்போது கண்ணாடி பத்மநாதன் என உருவெடுத்துள்ளது என கூறினார் கே.பி.

அண்மையில் ஒரு இராணுவ அதிகாரிதான் தன்னை அவ்வாறு அழைத்ததாகவும் அதுவே தனக்குப் பிடித்துள்ளதாகவும் இனி மேல் அவ்வாறே எல்லோரும் அழைப்பார்கள் எனவும் கூறிய கே.பி., முன்னர் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் சிலர் கே.பி. என்பதன் விளக்கப்பதம் கழுதை பத்மநாதன் என வர்ணித்து அவ்வாறு அழைத்ததாகவும் தெரிவித்துள்ளார். (எ-11)

# இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க சர்வதேச நாடுகள் முயற்சிக்கும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

(பிரிட்டன்)

பிரித்தானியாவைச் சேர்ந்த ஐ.நாவின் மூத்த அதிகாரியான சாள்ஸ் பெற்றி தயாரித்த அறிக்கையை கொண்டு சர்வதேச நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகிக்க விருப்பதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அதன் செயலாளர் வசந்த பண்டார கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் இறுதி யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகள் சபை பொது மக்களை பாதுகாக்க தவறி விட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும் இதனைக் கொண்டு இலங்கையில் யுத்தக் குற்றங்கள் தொடர்பிலும் மனித உரிமைகள் தொடர்பிலும் பல்வேறு ஆதாரங்களை ஐக்கிய நாடுகள் சபை சேகரித்துக் கொண்டுள்ளது.

இந்த நிலையில் இதனைக் கொண்டுஎதிர்வரும் காலங்களில் இலங்கை மீது சர்வதேச நாடுகள் பலவேறு அழுத்தங்களை கொடுக்க முடியும்.

எனினும் இது தொடர்பில் அரசாங்கம் அசட்டையாக நடந்து கொள்வதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை ஐ.நாவின் இரகசிய அறிக்கையில் சில பகுதிகளை கறுப்பு மையினால் அழித்தமை சரியானதே என ஐ.நாவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது தமிழர்களைப் பாதுகாக்க ஐ.நா தவறியமை தொடர்பான அறிக்கையில் சில பகுதிகளை கறுப்புமையினால் மறைக்கப்பட்டிருந்தமையை சரி என்றார் அவ் அதிகாரி.

ஐ.நா அமைப்பின் பணிப்பாளர்களை பாதுகாக்கவும் சில இரகசிய ஆவணங்களைப் பாதுகாக்கவும் மீளாய்வு அறிக்கையின் சில பகுதிகளை தணிக்கை செய்ததாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் உயரதிகாரி சுசனா மெல்கொரா தெரிவித்துள்ளார்.

சில தகவல்கள் உள்ளகத் தேவைகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டதாக அவற்றை பகிரங்கப்படுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளக அறிக்கைகளின் சகல விடயங்களையும் பகிரங்கப்படுத்துவது பொருத்தமான தீர்மானமாக அமையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சில தகவல்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பணியாளர்களின் பெயர்கள் குறிப்பிட்டுள்ளதாகவும் அவற்றை பகிரங்கப்படுத்துவது பொருத்தமாகாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பக்கச்சார்பற்ற வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிலும் இந்த அறிக்கையை பகிரங்கப் படுத்த வேண்டும் என்பதில் ஐக்கிய நாடுகள் அமைப்பு கூடுதல் சிரத்தை எடுத்துக் கொண்டதாக சுசனா மெல்கொரா மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## கால அவகாசம் கோரும் பிரதம நீதியரசர்

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க ஆறுவார கால அவகாசம் வேண்டும் என நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய் வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் முதல்நாள் அமர்வின் போது பிரதம நீதியரசரை எதிர்வரும் 23 ஆம் திகதி தெரிவுக்குழு முன் ஆயர் ஆகுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (எ-11)


**தவறிவிட்டது**

முத்துமாரி அம்மன் கோவில் வீதி, தும்பளை எனும் முகவரியினை உடைய தங்கராசா ரவிக்குமார் (ரவி ஆட்ஸ்) என்பவருடைய தேசிய அடையாள அட்டை (842103568V), வாகன சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வங்கி ATM காட் என்பன நெல்லியடிக்கும் தும்பளைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (C-1559)

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு : 077 6529250

ஆசிரியர் முத்துலிங்கத்தின்
**EASY ENGLISH**
விபரங்கள் + பெயர்பதிவு : 773212711 மூலம் (936)

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்




யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல சைவ உணவகத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- ✱ ரொட்டி தயாரிப்பாளர்.
- ✱ சமையல் ஆள்.

(C-1558)
**தேவை**
தங்குமிட வசதி வழங்கப்படும்.
தொடர்பு : 0772247505

**உடனடி வேலைவாய்ப்பு** (Management)
*(2013 January Batch)*

சர்வதேச ரீதியில் இயங்கும் நிறுவனத்திற்கு அதன் வட மாகாண யாழ்ப்பாணம்/கிளிநொச்சி/வவுனியா பிரிவுகளுக்கு O/L, A/L சித்தியடைந்த 18-25 வயதிற்குட்பட்டவர்களுக்கு முகாமைத்துவ பயிற்சியளிக்கப்படும். (ஆண்கள் மட்டும்)

- ❖ அனுபவம் அவசியமில்லை
- ❖ பயிற்சி இலவசமாக வழங்கப்படும்
- ❖ பயிற்சியின் பின்னர் தொழில் நிரந்தரமாக்கப்படுவதுடன் மாதாந்தம் 40000/- மேல் சம்பளம் பெறலாம்.

தொடர்புக்கு: 0777274795, 0244907449 (989)

**பிள்ளையார் இன்**

இன்றுமுதல் அதி விசேட 50 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

50% கழிவு

இன்றைய விசேட உணவு :-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ.70/-
பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ.70/-

(C-1516) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

**கையடக்க தொலைபேசி திருத்தும் விசேட DVD**

China வில் இருந்து நேரடியாக கொண்டுவரப்பட்ட கையடக்க தொலைபேசி திருத்தும் வீடியோக்கள் அடங்கிய **Special DVD**

◎ கையடக்க தொலைபேசி Repairing படிக்க விரும்பும், Repairing படித்தவர்கள், Repairing செய்பவர்கள், கையடக்க தொலைபேசி பற்றி அறிய விரும்புபவர்கள் எவரும் கட்டாயமாக வாங்க வேண்டிய DVD

◎ 210 வீடியோ காட்சி மூலம் Repairing செய்து காட்டப்படும். (3.6 GB)
◎ VPP மூலம் பெற்றுக்கொள்ள ரூ.1990/- மட்டும்

குறைந்தளவு DVDகளே கையிருப்பில் உள்ளதால் இப்போதே பெற்றுக்கொள்ளவும்.

(குறிப்பு :- இவ் DVD யை Copyright செய்யமுடியாது)

தொடர்பு : 077 613 1358
(C-1557)

**MOBILE PHONE REPAIRING COURSE**



*நீங்கள் பாடசாலை கல்வியை இடைநிறுத்தியவரா? சுயதொழில் ஒன்றை செய்ய எதிர்பார்ப்பவரா? வேலைசெய்து கொண்டு பகுதி நேரமாக வருமாணம் ஈட்ட வேண்டுமா?*

உங்கள் எதிர்காலத்திற்கு......
மாதம் 150,000/-க்கு மேல் வருமானம்
பெறும் நிரந்தர தொழில் வாய்ப்பு
சர்வதேச தரத்திலான டிப்ளோமா சான்றிதல்

திருத்தும்துறையில் பத்து வருடம் அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 1000 க்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதல்தர ஆசிரியர்
**Ganesh.K**
கட்டணம் 9500/=

- ☐ பாடநெறிக்கு செலுத்திய கட்டனத்தை முதல் மாதத்திலே சம்பாதித்துகொள்ள முடியுமா முதலீடு
- ☐ நவீனமான *MOBILE* போன் *REPAIR* பன்னும் முறைகள் பயிற்றுவிக்கப்படும்.
- ☐ மிககுறைந்த செலவில் மிக சிறிய இடத்தில் மிக குறைந்த முதலீட்டில் ஆரம்பிக்கக்கூடிய ஒரு சிறந்த சுயதொழில்

(சி-1556)

*4 Days Course* 5 வது நாளில் தொழிலை ஆரம்பிக்க உங்களுக்கு 100% நாங்கள் உத்தரவாதம் வழங்குவோம்.
*பதிவுகளுக்கு விரையுங்கள்*

28வது பிரிவு வவுனியாவில் ஆரம்பம்.
**SUN BRITISH COLLEGE**
No:-26, Station Road, Vavuniya.
T.P:-0770 58 46 58, 024 2226649

15வது பிரிவு யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்.
**IISEEES NALLUR CAMPUS**
No:-762, Point Petro road, Nallur,Jaffna.
T.P:-0777444225, 021 222 4728


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கராயன் ப.நோ.கூ.சங்க கிளைப் பொதுக்கூட்டங்கள்

அக்கராயன் பல நோ.கூ.சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக சங்க செயலாளர் அறிவித்துள்ளார். இதற்கமைய ஸ்கந்தபுரம் கிளைக்கான கூட்டம் ஸ்கந்தபுரம் இல 1 அ.த. க. பாடசாலையிலும் கோணாவில் கிளைக்கான கூட்டம் கோணாவில் அ.த.க பாடசாலையிலும் யூனியன் குளம் கிளைக்கான கூட்டம் யூனியன் குளம் அ.த.க பாடசாலையிலும் நடைபெறும்.

அக்கராயன் கிளைக்கான கூட்டம் அக்கராயன் மாகாவித்தியாலயத்திலும் வன்னேரிக்குளம் கிளைக்கான கூட்டம் வன்னேரிக்குளம் அ.த.க பாடசாலையிலும் ஆனைவிழுந்தான் கிளைக்கான கூட்டம் ஆனைவிழுந்தான் அ.த.க பாடசாலையிலும் நடைபெறும்.

ஊற்றுப்புலம் கிளைக்கான கூட்டம் ஊற்றுப்புலம் அ.த.க பாடசாலையிலும் கண்ணகைபுரம் கிளைக்கான கூட்டம் கண்ணகைபுரம் அ.த.க பாடசாலையிலும் ஸ்கந்தபுரம் மேற்கு கிளைக்கான கூட்டம் ஸ்கந்தபுரம் இல 11 அ.த.க பாடசாலையிலும் நடைபெறும்.(அ-9)

# கலைத்தூதுவின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்த பரிசில் தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் கலைத்தூது கலையகத்தில் நடை பெறவுள்ளது.

கலைத்தூது அழகியல் கல்லூரியின் உப அதிபர் அருள்பணி செ.அன்புராசா அடிகள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலைத்தூது அழகியல் கல்லூரி முன்னாள் அதி பர் திருமதி பி.எவ்.சின்னத்துரை, சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கி.அ.மோகன்றாஸ், சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபர் லு.மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ - 9)

# விபத்தில் ஒருவர் காயம்

உடுப்பிட்டி வல்லூட்டி பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.சம்பவம் தொடர்பில் தெரியவருவது, நேற்று நண்பகல் 12 மணியளவில் வல்லூட்டி ஊரிக்காட்டுப் பகுதியில் மோட்டார் சைக்கிள் அதிவேகமாக சென்றவேளை குறித்த குடும்பஸ்தவர் தவறி மோட்டார் சைக்கிளில் இருந்து விழுந்ததாலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.சம்பவத்தில் இப்பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் மதியரசன் (வயது-31) என்ற குடும்பஸ்தரே காயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(அ-3-24)

# வாரம் ஒரு தகவல்

## எது ஆன்மீகம்?

ஒருவன் அதிகாலையில் எழுந்து ஆற்றங்கரைக்கு சென்று குளிப்பான். அப்படியே அருகில் இருக்கும் ஆலயத்தினுள் நுழைந்து ஆண்டவனைத் தொழுவான். தன்னுடைய தேவைகளை கூறி முறையிடுவான்.

இது அவனுடைய அன்றாட வேலையாக அமைந்தது. இதைத் தொடர்ந்து அவதானித்து கொண்டிருந்த ஒரு பெரியவர் அவனை அழைத்து அருகில் அமரவைத்து " ஒரு கதை சொல்லுகின்றேன்...கேட்கிறாயா...?" என்று கூறினார்.

" சொல்லுங்கள்... கேட்கிறேன்! " என்றான்.

அவர் கதையைக் கூற ஆரம்பித்தார்." ஓர் ஊரில் ஒரு தத்துவ ஞானி இருந்தார்.

அவர் காலுக்குச் செருப்புக்கூட அணிவதில்லை.ஆனாலும் தொடர்ந்து தினமும் கடைவீதிக்குச் செல்வார்.ஒவ்வொரு கடையாக நின்று அவதானிப்பார்.

அங்கே என்னென்ன பொருட்கள் விற்பனையாகின்றன என்று பார்த்துக் கொள்வார்.எதையும் வாங்குவதில்லை.திரும்பி வந்து விடுவார். அவருடைய நண்பர் இதனை அவதானித்துவிட்டு " நீங்கள் ஏன் தினமும் கடைவீதிக்கு போகிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு அவர் "அங்கே எவ்வகையான பொருட்கள் விற்பனையாகின்றன என்பதை அவதானிப்பபதற்காக! " செல்கிறேன்.

" ஆனாலும் நீங்கள் எதையும் வாங்குவதாகத் தெரிவதில்லையே !"

"ஆமாம்" "பின்னர் எதற்காக அநாவசியமாக அங்கே போக வேண்டும்".

"அங்குள்ள பொருட்களில் எத்தனை பொருட்கள் இல்லாமல் நான் நிறைவோடு வாழ்ந்துகொண்டிருக்கின்றேன்...என்பதை புரிந்து கொள்வதற்காக...செல்கிறேன்!" பெரியவர் கதையை கூறி முடித்தார்.

" அது சரி ... இந்தக் கதையை எதற்காக என்னிடம் கூறினீர்கள்?"

" உனக்கு ஓர் உண்மைபுரிய வேண்டும் ,என்பதற்காக!"

"என்ன உண்மை?"

ஆன்மீகம் என்பது உனக்கு என்ன தேவை என்று அறிவதற்காக அல்ல.

"பின்னே"

" உனக்குத் தேவையற்றது எது என்பதைப் புரிந்து கொள்வதற்காகத்தான் அது!.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வரவு செலவு திட்டத்தை பார்வையிடலாம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டுக்கு கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவீன விபரங்களையும் உள்ளடக்கிய மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுதிட்டம் கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் ஒரு கிழமைக்கு பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இவற்றை யாழ்ப்பாணம் இல 585/5, பருத்தித்துறை வீதி, மாநகரசபை அலுவலகம், முற்றவெளி வீதி, பிரதான பொது நூலகம் ஆகிய இடங்களில் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியுமென யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் திருமதி யோ. பற்குணராசா அறிவித்துள்ளார். (அ-9)

# சிவப்பு மழைக்கு பக்றீரியாவே காரணம்

நாட்டில் சில பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்த சிவப்பு மழைக்கு ட்ரெசலோமனஸ் எனப்படும் ஒருவகை பாசிகள் நாணயங்களின் ஒரு பக்றீரியா என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

செவனகல, மனம்பிட்டிய, ஹிங்குராங்கொட ஆகிய பகுதிகளில் கடந்த சில நாட்களுக்கு முன்சிவப்பு மழை பெய்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மாகாணமட்ட பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தரம் 9 மாகாணமட்ட பொதுப்பரீட்சையின் நாளை திங்கட்கிழமை நடைபெறவிருந்த தமிழ்மொழி மற்றும் அழகியல் பாடங்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறும். ஏனைய பாடங்கள் அதேநேர அட்டவணைக்கமைய எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் நடை பெறுமென வலிகாமம் கல்விப்பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (அ-2)

# சூரசங்காரம்

(சிவநகர்)

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் சூரசங்கார நிகழ்வு நாளை திங்கட்கிழமை பி.ப.2மணியளவில் நடைபெறவுள்ளது.

மறுநாள் காலை செவ்வாய்கிழமை ஆலயத்தில் விசேட பூசைகள் நடைபெறும் என ஆலயபரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-3-254)

# இராசி பலன்

18.11.2012
(கார்த்திகை 03, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.09 மணிக்கு
பஞ்சமி மாலை 5.27 மணிவரை
பூராடம் முற்பகல் 7.56 மணிவரை
இராகுகாலம் 4.39-6.09 மணிவரை
சுபநேரம் 9.09-10.39 மணிவரை
திருவெண்ணாமலை கொடியேற்றம்
ஸ்கந்த பஞ்சமி

**மேடம்** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், நண்பர்கள் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், உற்சாகத்துடன் பணிபுரிந்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**இடபம்** தடைப்பட்ட காரியங்கள் மதியத்தின் பின் கைகூடும், இனத்தார் பகை மாறி உற்சாகம் பெறுவீர்கள், பிரியமான சிலரோடு ஏற்பட்ட பகைமை மாறும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எதிர்பாராத வகையில் விசுவாசமாக இருந்தவர்கள் கூட குறை கூறலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்** வராத உறவினர்கள் திடீரென உங்கள் வீடுகளுக்கு வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, வழிபாடுகளில் ஆர்வம் கூடும்.

**சிங்கம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், இனிமையான நாள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும்.

**கன்னி** மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புகள் கூடும், உதிரி வருமானங்கள் கைகூடும், பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரலாம், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**துலாம்** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், ஊக்கத்தோடும் பணி புரிவீர்கள், தெய்வ சிந்தனை மேலோங்கும்.

**விருச்சிகம்** உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர், பாராட்டும் புகழும் கூடும், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சுப செய்திகள் வந்து சேரும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**தனுசு** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பூர்வாங்கச் சொத்துக்களால் ஆதாயமுண்டு,வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.

**மகரம்** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், கொடுக்கல், வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.

**கும்பம்** பயணத்தால் பலன் கிடைக்கும், சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**மீனம்** நட்பு வட்டம் விரிவடையும், பணப்புழக்கம் அதிகரிக்கும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 180 | 130 |
| உருளைக்கிழங்கு | 80-100 | 100-120 | 110 |
| பச்சைமிளகாய் | 170 | 170 | 180 |
| தக்காளி | 80 | 90 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 90-100 | 110 | 120 |
| கரட் | 100 | 180 | 160 |
| பூசணி | 70 | 60 | 60 |
| புடோல் | 80 | 90 | 80 |
| வாழைக்காய் | 60-80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 120-130 | 110 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 240 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 | 80 |
| பயற்றங்காய் | 160 | 160 | 160 |
| லீக்ஸ் | 100 | 110 | 120 |
| பீற்றூட் | 55 | 90 | 140 |
| கறிமிளகாய் | 170 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 160 | -- |
| போஞ்சி | 170 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 160 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 20-30 | 30 | 30 |
| தேசிக்காய் | 180-200 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 | 30-35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு


சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் தென்மராட்சி கல்வி வலயத்தில் இவ்வாண்டு ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தென்மராட்சி கலை, கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழக தலைவர் லயன் எஸ்.மனோகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட உதவி ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட பிரதிச் செயலாளர் லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம், பிரதிப் பொருளாளர் லயன் கே.எம். பத்மநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி அ.சாந்தசீலன், சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் மாணவர்கள், வகுப்பாசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர் என லயன்ஸ் மாவட்ட ஊடகப்பிரிவுத் தலைவர் லயன் எஸ்கே.நவரத்தினம் தெரிவித்துள்ளார். (அ-3-29)




நன்றி: ஐலண்ட்

## மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் **மகளிர் தின** நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இதில் **பெண்ணின் சிறப்பு அலுவலகத்திலா? இல்லத்திலா? ஆன்மீகத்திலா?** எனும் தலைப்பிலான ஸ்ரீமதி செல்வி ஜெயமோகனின் சிறப்புச் சொற்பொழிவு , நடனம், நாடகம், கோலாட்டம் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அத்துடன் திருவிளக்குப் பூஜை செய்ய விரும்புவோர் குத்துவிளக்கு,திரி, எண்ணெய், பூ, குங்குமம், ஒருதட்டு ஆகியவற்றுடன் வருகை தருமாறு சேவா நிலையம் கேட்டுள்ளது. (அ-9)

## கந்தசஷ்டி திருவிழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள்ஆலயத்தில் கந்த சஷ்டி திருவிழா நடைபெற்று வருகின்றது.

நாளை திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு சூரசம்ஹாரமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு திருக்கல்யாண திருவிழாவும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.59 மணி தொடக்கம் 10.41 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இவற்றிற்கான கிரியைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும் என தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது. (அ-9)

## பயிற்சிப்பட்டறை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கருத்திட்ட அலுவலகம் யாழ். மாவட்டத் தொழில் அலுவலகத்தினூடாக இம்மாதம் 21,22,23 ஆம் திகதிகளில் நடத்தவிருந்த தொழில் ஸ்தாபனங்களில் ஆண், பெண் சமநிலை பேணல் சம்பந்தமான பயிற்சிப்பட்டறை தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண உதவித் தொழில் ஆணையாளர் அறிவித்துள்ளார். (அ-9)

# திறந்த பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் பல்தரக் கற்பித்தலின் குறுங்காலக் கற்கை நெறி (short course in multigrade teaching), விசேட தேவைகள் சார்பட்ட மேற்கல்வி டிப்ளோமா, சிறு வணிக முகாமைத்துவ கற்கைநெறி ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

ஆறுமாத கால குறுங்கால இக்கற்கை நெறியில் இணைய விரும்பும் ஆசிரியர்கள் தமது சுய விபரப்படிவத்தினை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.பிராந்திய நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும்.

விசேட தேவைகள் சார் பட்ட மேற்கல்வி டிப்ளோமாக் கற்கைநெறிக்கு,

கடந்த 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் பதவியினர் விண்ணப்பிக்க முடியும்.

இவ்விண்ணப்பப்படிவங்களை எதிர் வரும் டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

முகாமைத்துவ பட்டத்திற்கு இட்டுச் செல்லும் அடிப்படை கற்கைநெறியான வணிக முகாமைத்துவ சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப்பிப்போர் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு க.பொ.த(சா/த)இல் ஆறு பாடங்களில் சித்தியடைந்த 18 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

இவ்விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும்.

இவற்றுக்கான விண்ணப்பப்படிவங்களை முறையே நாளையும் நாளை மறுதினமும் யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார் . (அ-9)

## சாவ.நகரசபை முதலாமிடம்

(சாவகச்சேரி)

மாகாண உள்ளூராட்சி திணைக்களம் உள்ளூராட்சி சபைகளிடையே கடந்த ஆண்டு நடத்திய முகாமைத்துவ போட்டியில் நகர சபைகள் மட்டத்தில் சாவகச்சேரி நகரசபை மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தையும் மாகாண ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இதில் மாவட்ட ரீதியில் இரண்டாம் இடத்தை வல்வெட்டித்துறை நகரசபையும் மாகாண ரீதியில் முதலாம் இடத்தை வவுனியா நகரசபையும் மூன்றாம் இடத்தை மன்னார் நகரசபையும் பெற்றுக் கொண்டன.

பிரதேசசபைகளிடையே நடைபெற்ற போட்டியில் நல்லூர் பிரதேச சபை மாவட்ட மற்றும் மாகாண நிலைகளில் முதலாம் இடத்தையும் தனதாக்கிக் கொண்டது. (அ-3-29)




# காரைநகரில் கட்டாக்காலி கால்நடைகள் தொல்லை

## நடவடிக்கை எடுக்க சில விவசாயிகள் கோரிக்கை

(காரைநகர்)

காரைநகரில் கட்டாக்காலி கால் நடைகளின் தொல்லைகளினால் காலபோக நெற்பயிர்ச் செய்கை அழிவடைந்து வருவதாக காரைநகர் பிரதேச விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கால்நடை தொல்லை தொடர்பாக காரைநகர் கமநல சேவை நிலையம் மற்றும் கமக்கார அமைப்புக்கள் ஆகியவற்றில் முறையிடப்பட்டபோதும் அவற்றினை கட்டுப்படுத்தும் வேகம் குறைவாகவே உள்ளது.

இதனால் இரவு வேளைகளில் பயிர்ச் செய்கைக்குள் புகுந்து கட்டாக்காலி நாய்கள் பயிர்செய்கையை அழித்து வருகின்றன.

இதேவேளை இவ்வருட காலபோக நெற்செய்கையின் போது திடீரென பெய்த மழையினால் சில பகுதி விளைநிலங்கள் அழிவடைந்துள்ளன.

மழை பெய்த போதும் மழைநீர் செல்லும் வாய்க்கால்கள் திறந்து விடப்பட்டதனால் நீர் கடலுக்கு வழிந்து சென்று விட்டன.

ஆனால் இன்றுவரை அக்கதவுகள் மூடப்பட்டதனால் தற்போது விளை நிலங்களில் வரட்சியேற்பட்டுள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் கவனத்திற் கொண்டு இக்கதவுகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-246)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள சுவாமி பரமாத்மானந்தாவின் தியான மண்டபம், ஆன்மீக நூலகம் ஆகியவற்றின் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பொ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஒழுங்கமைப்பாளர் நா.ஏகாம்பரநாதன் கேட்டுள்ளார். (அ-9)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த குருநகர் II பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை சொலமன் வீதியிலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30மணி வரை கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்திலும் வைத்து வழங்கப்படும். (அ-9)

## கொமர்சல் வங்கி இடமாற்றம்

(சாவகச்சேரி)

கொமர்சல் வங்கியின் சாவகச்சேரி கிளை எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை இலக்கம் 87,கண்டிவீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள புதிய கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

வாடிக்கையாளரின் வசதி கருதி புதிய கட்டடத்தில் இயங்கவுள்ள இக்கிளையில் சகல வங்கி நடவடிக்கைகளையும் வாடிக்கையாளர்கள் பூர்த்தி செய்து கொள்ள முடியும் என வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார். (அ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையில்லாப் பிரச்சினை உக்கிரம்; இளைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றம்

## கிரியல்ல எம்.பி. குற்றச்சாட்டு

நாட்டில் வேலையில்லா பிரச்சினை உக்கிரமடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக இளைஞர்கள் உயிரைப் பணயம் வைத்து அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் செல்கின்றனர்.

தெற்கில் ஆயிரத்து 500 இளைஞர்களைக் காணவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.பலர் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ளனர்.

தமிழ்,சிங்கள பேதமின்றி உயிரைப் பணயம் வைத்து இவர்கள் அவுஸ்திரேலியா நோக்கி பயணம் செய்கின்றனர்.இது ஓர் பாரதூரமான பிரச்சினையாகும்.

அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம், நுரைச்சோலை அனல் மின் நிலையம் போன்ற பல்வேறு அபிவிருத்தி திட்டங்களில் சீனர்களே அதிகளவில் பணியாற்றி வருகின்றனர். சீன நாட்டு செல்வந்தர்கள் இலங்கைக்கு வந்து இலாப மீட்டிச் செல்கின்றனர்.

சீனா இலங்கையிடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்வதில்லை, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளே இலங்கையிடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்கின்றன.

மேற்குலக நாடுகளுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வெளிவிவகார அமைச்சர் முயற்சி எடுத்த போதிலும், ஆளும் கட்சியின் சில அமைச்சர்கள் மேற்குலக நாடுகளை கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்தால் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். எனினும் அரசாங்கம் இந்த விடயத்தில் ஆர்வம் காட்டத் தவறியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## பேருந்து விபத்தில் 25 பேர் காயம்

அக்கரபத்தனையில் இடம்பெற்ற பேருந்து விபத்து சம்பவமொன்றில் 25 பேர் காயமடைந்துள்ளனர். ஹற்றன் போடைஸ் வீதியில் நேற்றுக் காலையில் இந்தச் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தனியார் பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. பேருந்து விபத்தில் காயமடைந்தவர்கள் டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மாத்தறையிலிருந்து அக்கரபத்தனைக்கு சென்று மீண்டும் திரும்பியவர்களே இவ்வாறு விபத்தில் காயமடைந்துள்ளனர். (அ)


YARL Taxi

யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்

021 2221919/0759751919

(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-60/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)

இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்

36, கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம்.

E-Mail - Yarltaxi@gmail.com


# கனடாவின் முடிவையே பிரட்டனும் எடுக்க வேண்டும்

## பிரிட்டன் வெளிவிவகார குழு வலியுறுத்தல்

இலங்கையில் நடைபெறவுள்ள கொமன் வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாக கனேடியப் பிரதமர் எடுத்துள்ள நிலைப்பாட்டையே பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனும் எடுக்க வேண்டும் என்று பிரித்தானிய நாடாளுமன்ற வெளிவிவகாரக் குழுவின் தலைவர் றிச்சர்ட் ஒட்டாவே தெரிவித்துள்ளார்.

கனேடிய ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.அவர் கூறிய விடயம் வருமாறு, கனேடிய பிரதமரின் நிலைப்பாட்டை நாம் ஏற்கிறோம். மனிதஉரிமைகள்நிலைமைகளில்முன்னேற்றம் இல்லையென்றால் , மாநாட்டில் பங்கேற்கமாட்டோம் என்று அவர் கூறுவதற்கு உரிமை உள்ளது என்று நாம் நம்புகிறோம்.

கனேடிய பிரதமர் ஹாப்பருடன், பிரித்தானிய பிரதமர்டேவிட் கமரூனும் இணைந்து கொண்டால், இலங்கைப் படைகளால் இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து முறையான விசாரணை நடத்துவதற்கு இலங்கை அரசுக்கு உண்மையான அச்சுறுத்தலைக் கொடுக்கக் கூடியதாக இருக்கக்கூடும்.

மனித உரிமைகள் நிலையை முன்னேற்றாது போனால் நாம் கொமன்வெல்த் தலைவர்களின் மாநாட்டைப் புறக்கணிப்போம் என்று ஹாப்பருடன் இணைந்து கமரூன் குரல் கொடுப்பார் என்று நான் நினைக்கிறேன் என்று கூறியுள்ளார்.

எனினும் இலங்கை மனித உரிமைகள் நிலையை முன்னேற்றாது போனால் கொமன் வெல்த் தலைவர்களின் மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாக பிரித்தானியப் பிரதமர் அறிவிக்க வேண்டும் என்று பிரித்தானிய நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக்குழு முன்வைத்துள்ள கோரிக்கைக்கு டேவிட் கமரூன் இன்னமும் பதிலளிக்கவில்லை என தெரியவருகிறது. (அ-2)


IMMEDIATELY VACANCIES

முகாமையாளர்களை உருவாக்குவதில் 18 வருடம் அனுபவம் வாய்ந்த சர்வதேச நிறுவனமான INNOVAGE கம்பனியின் தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திறக்கப்படவிருக்கும் புதிய கிளைக் காரியாலயங்களுக்கு முகாமைத்துவ பயிலுனர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன.

தகைமைகள்:

⇨O/L அல்லது A/L ⇨வயதெல்லை (17-35)

⇨தங்குமிட வசதிகள் இலவசம்

குறிப்பு: விண்ணப்பிக்கும் 50 பயிலுனர்களுக்கு மட்டும் வாய்ப்பு உண்டு.

(சி-1551)

தொடர்புகளுக்கு: 0724269463, 0778543436



கரீனாவின் அழகிய சருமத்தின் இரகசியம் ....

ஆன் பிரேஞ்ஸ்

கெயார் ரிமூவர் கிறீம்

- சருமத்திலுள்ள தேவையற்ற உரோமங்களை மிகவும் இலகுவாக Anne French மூலம் அகற்ற முடியும்.
- Anne French கிரீமில் அடங்கியுள்ள விட்டமின் E ஆனது சருமத்திற்கு போஷணையனித்து பாதுகாப்பதுடன் அனைத்து விதசருமத்திற்கும் உகந்தது.
- ரோஜா, மஞ்சள், சந்தனம், லெமன் மற்றும் ப்ளோல் சாற்றினை கொண்ட 5 வாசனைகளில் Anne French கிரீமை பெற்றுக் கொள்ள முடியும்.

சர்மத்தில் காணப்படும் அனாவசியமான ரோமங்களை நீங்க நான் ஆன் பிரெஞ்ஸ் ஐ தினமும் பாவிக்கின்றேன். இதனை பாவிப்பது மிகச் சுலபம் அதேவேளை சிறந்த பலனை தருகின்றது....

Kareena Kapoor

Anne French*




ஹேஸ்பரல் மார்க்கடிங் (தனி) நிறுவனம்

0771 062 566 (980)



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1977 இந்து<br>நட்சத்திரம்:-ஆயிலியம் 3<br>உயரம்:-5'4"<br>கி.பா:-55<br>தொழில்/தகைமை:-Bsc ஆசிரியர்<br>B/553 | பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூராடம் 4<br>உயரம்: 5'2"<br>கி.பா:-68.25<br>தொழில்/தகைமை:-A/L maths Bsc (open university)<br>G/278 |
| பிறப்பு:- 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூரட்டாதி 4<br>உயரம்:-5'10"<br>கி.பா:-31<br>தொழில்:-A/L Accounting (சவுதி)<br>B/226 | பிறப்பு:- 1972 இந்து (செங்குந்தர்)<br>நட்சத்திரம்:- பூசம் 1<br>உயரம்: 5'9'<br>கி.பா:-47.25<br>தகைமை:-A/L Computer<br>G/608 |
| பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அனுசம் 1<br>உயரம்:-5'7"<br>கி.பா:-22<br>தகைமை:- கனடா றொரன்ரோ பல்கலைக்கழகத்தில் Soft ware<br>B/228 | பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- ரோகினி 3<br>உயரம்:-5'4"<br>கி.பா: 14.5<br>தகைமை:-பட்டதாரி Bsc ஆசிரியை<br>G/377 |
| பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அவிட்டம் 1<br>உயரம்:-5'3"<br>கி.பா:-53<br>தொழில்:-Computer Engineer<br>B/229 | பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சதயம்<br>உயரம்: 5'<br>கி.பா:-9.25<br>தகைமை:-A/L GAQ<br>G/654 |

சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல.144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசேவையில் சேர்.பொன். இராமநாதனின் வரலாற்றுப்பதிவுகள்

## நாளை அன்னாரின் 82 ஆவது குருபூசை தினமாகும்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஆதார சுருதியாக அமைந்திருக்கும் பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுநரும் ஈழத்துச் சைவத் தமிழ் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றியவருமான சேர்.பொன். இராமநாதனின் 82 ஆவது குருபூசைத் தினமாக நாளைய நாள் அமைந்துள்ளது.

**நன்றி மறக்கும் கயமையை முறியடிப்போம்** என்ற வலம்புரி ஆசிரியர் தலையங்கத்தின் செயற்றின்களில் ஒன்றாக எமது பல் கலைக் கழகத் தோற்றுவாய்க்கு வித்திட்ட இராமநாதவள்ளல் பெருந்தகையினை நினைவுகூர்ந்து அவருக்கு ஆற்றும் நன்றிக் கடனாக பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபையும் யாழ். பல்கலைக்கழக ஸ்ரீபரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபையும் இந்து மன்றமும் இணைந்து எடுக்கின்ற குருபூசை தின நிகழ்வு இதுவாகும்.

இந்நிகழ்வின்பால் நாளை யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் வழிபாட்டுப் பிரார்த்தனைகள், அபிஷேக அர்ச்சனைகளுடன் நடைபெறுவது எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருளாகும்.

கீழைத்தேய ஆன்மீக சிந்தனையாளர் வரிசையில் சிறப்பிடம் பெற்று விளங்குவர்களில் சேர். பொன். இராமநாதனும் ஒருவர்.

ஈழத்து மக்கள் அனைவரினதும் சைவப் பணிகளிலும் சரி, கல்விப் பணிகள், தமிழ்மொழி வளர்ச்சி, கலைப் பண்பாட்டு மேம்பாடு, அரசியல், சமுதாய சீரமைப்பு எனப் பல்துறை வளர்ச்சிப் பரிமாணங்களிலும் இராமநாதன் தன்னிகரற்ற சேவைகளையாற்றி தனக்கென ஒரு தனியான முத்திரை பதித்த பெருமகனார்.

தஞ்சாவூரைச்சேர்ந்த அருட்பரானந்த சுவாமிகளின் சீடராகி சைவ வாழ்வியல், சித்தாந்த மெய்யியற் துறைகளிலும் பணி செய்து அனைத்தையும் சிவப்பணியாகவே ஆற்றினார்.

சேர். பொன் இராமநாதனது சிவசேவை, சமுதாயசேவை என்றும் பல்துறை பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஈழத்துச் சித்த மகாபுருசர்களான செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகளின் ஆசிகளும் உந்துசக்தியாயிற்று.

ஈழமாகிய சிவபூமியில் சைவ சித்தாந்த மெய்யியலை வாழ்வியற் சிந்தனையாக்கி அதுகூறும்சரியை, கிரியை, யோக, ஞான சாதனைகளின் வழிநின்று அன்னார் ஆற்றிய திருக்கோயிற் பணிகள், பாடசாலைகள் அமைக்கும் பணிகள், பகவத் கீதை, ஆத்திசூடி போன்ற நூலாக்கப் பணிகள், இன, மத, பேதம் பாராது அனைவருக்கும் அரசியல் விடுதலைப் பணிகள், சிறுவர் இல்லம், சைவாசிரிய கலாசாலை உருவாக்கம் என அவரது சேவை நெறிகள் விரிந்து பரந்து சென்றன.

சைவநெறி, அன்பு நெறி, தொண்டு நெறி என்ற பரிமாணத்திற்கேற்ப அன்னார் தாமும் வாழ்ந்து காட்டியதுடன் மக்களையும் அத்தகைய நன்னெறியில் அழைத்துச் சென்றார். சுவாமி விவேகானந்தர், அரவிந்தர், வேதாந்தத்தைப் பரப்பியது போன்று சேர்.பொன். இராமநாதன் ஆங்கில மொழிமூலம் சைவசித்தாந்த மெய்யியலை அமெரிக்க நாடுகளிலும் பிரசாரம் செய்து அதன் சிறப்பினை உலகறியச் செய்த தலைமகனாகவும் தனது சிவசேவையை விரிவாக்கம் செய்தவர்.

அக்காலத்திலே ஆறுமுகநாவலர் அவர்களால் மிகவும் நேசிக்கப்பட்ட நம்பிக்கை நட்சத்திரமாகவும் அன்னார் விளங்கினார்.

சைவப் பண்பாட்டு வாழ்வியலில் ஈழமக்கள் நிலை பெறவேண்டும் என்ற எண்ணக்கருவினால் உந்தப்பட்டு தன்னால் நிறுவப்பட்ட இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரிகளில் வழிபாட்டிற்கென சிவாலயங்கள் கட்டுவித்தார்.

இத்தகைய அவரது பணியானது இக்கல்வி நிலையங்களில் அறிவுத்திறன், அறிவியற் கல்வியுடன், அறநெறிப்பட்ட வாழ்வுடன் கூடிய தமிழ், சைவ மெய்யியற் கல்வியும் ஒன்றிணைய வேண்டுமென்ற அன்னாரின் உயரிய சிந்தனையின் வெளிப்பாடாகும்.

திருக்கோயில்களுக்கு அருகிலே பாடசாலைகளை அமைத்தது மட்டுமன்றி கல்லூரிகளுக்குள்ளேயும் திருக்கோயில்கள் உருவாக்கியமையானது மக்களிடமும் கல்வி பயிலும் மாணவர்களிடமும் சைவ கலாசார ஒழுக்க விழுமியங்களையும் கல்வியுடன் இணைந்து பண்பாட்டுச் சீர்மியங்களை இளைய சமுதாயத்தினரிடம் வலுப்பெறச் செய்ய வேண்டுமென்ற உன்னத குறிக்கோளையும் கொண்டிருந்தது.

தற்கால அறிவுசார் பொருளாதார, தகவல் தொழில்நுட்ப கல்வித்துறை வளர்ச்சியில் சமய, பண்பாட்டு விழுமியங்கள் இளைய தலைமுறையினர் பலரிடமிருந்தும் விலகிச் செல்லும் நிலையினை காணும் போது சேர். பொன். இராமநாதன் போன்ற தீர்க்கதரிசிகளின் சிந்தனைகள்- ஒழுக்கமேம்பாடுகள் மீண்டும் தமது கல்வித் திட்டத்தினூடாக வலிமை பெறச் செய்து வளம்பெற வைத்து வாழ்வியலாக்குவதே அத்தலைமகனுக்கு அன்னாரால் நிறுவப்பட்ட கல்லூரிகளும் பல்கலைக் கழகம் செய்யவேண்டிய நன்றிக் கடனாகும்.

*பேராசிரியர்*
*கலைவாணி இராமநாதன்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

வருடந்தோறும் பெரியார்களின் சேவைகளையும் அர்ப்பணிப்புக்களையும் நினைவுகூர்ந்து கொண்டாடுவதுடன் அமையாது, இவ்விழாக்களின் வாயிலாக எதிர்காலச் சந்ததியினர், முன்னோர் ஆற்றிய சேவை நலன்களை அறியும் படியாகவும் உணரும் படியாகவும் செய்ய வேண்டும்.

அவ்வாறே சமுதாயத்தை நடக்கத் தூண்டுவதும் அடுத்த தலைமுறையினரிடத்து இப்பணிகளை கையளித்துப் போற்றிப் பேணுவதும் தமிழ் மக்களாகிய நமக்கு மிக முக்கிய வரலாற்றுக்கடமையாகும்.

இவ்வரலாற்றுக் கடமையும் கையளிப்பும் காலம் உள்ளளவும் தொடர வேண்டும். இதுவே எம்மை உயர்த்தியவர்களுக்கு நாம் செய்யும் கைமாறு.

# நீதிமன்றில் வழக்குகள் குவிவதால் தீர்ப்பு வழங்குவதில் தாமதம்

(கொழும்பு)

நீதிமன்றில் வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதால் பல வழக்குகளின் விசாரணைகள் தாமதமடைந்துவதாக சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பாலித பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் இடம்பெற்ற கனிஷ்ட சட்டத்தரணிகள் சம்மேளனக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இந்நிலையை மாற்றியமைக்க வேண்டுமாயின் நீதிமன்ற கட்டமைப்பிலும் மக்கள் நடத்தைகளிலும் மாற்றம் வர வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றில் வந்து குவியும் வழக்குகளை விசாரணை செய்து முடிக்க நாடு முழுவதும் நீதிமன்றம் அமைப்பதால் மாத்திரம் முடியாது என சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதிமன்றின் எண்ணிக்கைகளை அதிகரிப்பதற்கு முன்னர் சட்டத்தரணிகள் மற்றும் பொதுமக்கள் நடத்தைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# அபிமானமிக்க சேவையை பெறுவதற்கு பொலிஸாருக்கு பயிற்சி வழங்க வேண்டும்

## பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தெரிவிப்பு

பொலிஸ்உத்தியோகத்தர்களுக்கு சரியான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டுமென பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

அபிமானமிக்கதோர் பொலிஸ் சேவையை உருவாக்க வேண்டுமாயின் போதியளவு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

தொழில்சார் அடிப்படையிலும் மக்கள் தொழில்சாா அடிப்படையிலும் மக்கள் நட்புறவுடன் கூடிய வகையிலும் பொலிஸ் சேவையை உருவாக்குவதன் மூலம் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும்.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்கும் நோக்கில் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழத்துடன் இணைந்து விசேட பயிற்சி நெறியொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோன் தெரிவித்துள்ளார். (அ-2)



கட்டுவன் மேற்கு சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர் மற்றும் இளைஞர்கள் இணைந்து டெங்கு பரவுவதை கட்டுப்படுத்தும் முகமாக பொது இடங்கள் மற்றும் மக்கள் செறிவாக வாழும் இடங்களை இனங்கண்டு நிலைய ஏற்பாட்டில் சிரமதானம் மேற்கொண்டு வருகிறார்கள். அதன் ஒரு கட்டமாக அண்மையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அவர்கள் சிரமதான பணியில் ஈடுபட்டுள்ளதை படத்தில் காணலாம்.

# சட்டவிரோதமாக ஆஸிக்கு பயணித்த 104 பேர் கைது

(கொழும்பு)

இலங்கையிலிருந்து சட்ட விரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முற்பட்ட மேலும் 104 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது. கைதானவர்களில் 96 தமிழர்களும் 6 சிங்களவர்களும் 2 முஸ்லிம்களும் உள்ளடங்குகின்றனர்.

இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, புத்தளம், கொழும்பு, மன்னார், ஜா-எல, நீர் கொழும்பு,வத்தளை, ராகமை, கற்பிட்டி போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இன்றையதினம் அவர்கள் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சட்டவிரோதமாக வரும் தஞ்சக் கோரிக்கையாளர்கள் அனைவரும் உடனடியாக திருப்பியனுப்பப்படுவர் என அவுஸ்திரேலியா எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## காகிதக்காரரின் காவியம்

சின்னப்பெட்டி
அதற்குள் குட்டி வீடு
ஒட்டி வைத்த கிறுக்கல் தாளும்
கொட்டி உள்ளே கிடக்குது
பெட்டி படுக்கையுடன்
இடம்பெயர்பவன் போல்
கையில் கட்டுடன்
நிஜமனம் கிடைத்தும்
நீளத் திரிகின்றான்
வேலையில்லா வெட்டி
செல்லும் நீளத்தை விட
நகர்ந்து செல்கின்றான்
நண்பகல் ஆனமுன்னர்
பெட்டி படுக்கையை
இறக்கிவிட்டு தனது
காவியத்தை முடித்துக்கொண்டு
காரியாலயத்திற்குப் போகின்றான்
காகிதக்காரன்

ஜெயம் ஜெகன்

## புரியவில்லை

அவள் எப்போதும் போலவே
இப்போதும்
வந்துபோகின்ற
போதினிலும் இனிய நினைவுகளைத்
தவிர
எல்லாமே கசக்கின்றன

புரிதலுடன்
பின்னிப் பிணைந்த
நேசங்களுடன்
தொடர்ந்த பாசங்கள்
இடைவெளியில்
எப்படித்தான் தூரமாகின்றன என்ற
கேள்விகள்
விடைகாணா வினாவாய்
தொடர்ந்து கொண்டுதான்
இருக்கின்றன

நினைவுகள் என்னை
விழுங்கிக் கொள்ளும்
நிசப்தமான பொழுதுகளில்
உன்னைக்
கண்டுகொண்டதன்
தவறை உணர்ந்தவனாய்
விழிகள்
கண்ணீரை மட்டுமே
சொரிந்து கொள்கின்றன

ஆஷா, யாழ்ப்பாணம்

## பள்ளியின் பிரிவு

நட்பான உள்ளங்களில்
ஒலித்துக்கொண்டிருக்கும்
முகாரி இராகமாய் - நம்
நட்பின் பிரிவு
நண்பர்களாய் - ஓர்
குடும்பமாய் காலங்களை
கடத்திய மனங்களில்
பள்ளிப் பருவத்தின் நிறைவு
ஏனோ துன்பத்தை மட்டுமே
விதைத்துச் சென்றது
பழகிச் சென்ற காலங்கள்
ஏதோ ஒரு கணத்தில்
நினைவலைகளாய் தாக்குகின்றன
தனிமைப் பொழுதுகளில்
நண்பிகளின் முகங்கள்
வரிசையாய் வந்து
அவர்களுக்கான தேடலை
மேலும் மேலும்
கூட்டுகின்றது

[illegible]




## இமயம் தொட...


உன் உறவுகள்
உன்னை உதறியெறியும்போது
உன் இதயம் றணமாகும்
அப்போதும்
அவர் நலனுக்காய் மன்றாடு
அவர் வாழ்வுக்காய்
உன்னைத் திரியாக்கு
உலகம் ஆயிரம் பேசும்
உன் வழிமட்டும்
உண்மை வழி தொடரட்டும்

மாவை நா.கஜேந்திரன்

## மாரியின் அலங்காரம்

கார்மேகக் கூட்டத்தின்
கும்மிப்பாட்டும்
இருண்ட வானத்தின்
மின்னல் ஒளியும்
இலை இழந்த கிளையின்
துளிர்ப்பும்
தரிசான தரையின்
புல் விரிப்பும்
வற்றிய குளங்களின்
நிறை நீரும்
வறண்ட வயலின்
செழி நெல்லும்
நிறமிழந்த வானின்
வானவில்லும்
நாவறண்ட தவளைகளின்
ரீங்காரமும்
மாரிகாலத்தின் மகத்தான
அலங்காரம்

அ.அஜந்தன், கந்தர்மடம்



# மௌனத்தின் தேடல் - 130

## எதிர்பார்ப்பு

பட்டுப்புடைவை அணிந்து
பட்சிகளை அருகிருத்தி
அமர்ந்திருக்கும் பூம்பாவையே...
எம் இனம் விடிவுபெற்று
வெண்புறாக்கள் சுதந்திரமாய்
சிறகடிக்கும் காலத்தை
எதிர்பார்த்திருக்கின்றாயோ...?

த.தேனுஜா
புளியங்கூடல்

## ஏமாற்றம்

உன் வருகைக்கான
எதிர்பார்ப்புக்கள்
ஏமாற்றப்பட்டதனால்
இப்போதும்
இயங்க மறுக்கின்றது
இதயம் வருவாயென
வாசலில் காத்திருக்க
வைப்பது புதிதல்ல
படி தாண்ட எண்ணும்
பாவை உள்ளத்திற்கு

ம.வதனி,கொக்குவில்

## வண்ணத்துணி

வண்ணத்தூணில் சாய்ந்திருந்து
பெண்ணே எதைப்பற்றி
எண்ணுகிறாய்
மண்ணில் பிறந்தயாவருக்கும்
எண்ணரிய துன்பங்கள்
வருந்தானே- நீ
எண்ணிய இனியவாழ்வு
உனக்குத்
திண்ணமாய்க் கிடைக்கும்
உண்மை

துரை, தென்மட்டுவில்

## மயக்கமென்ன?

நிலாவான வட்டமுகத்தை
தொட்டுச் சென்ற...
புன்னகை காற்றில்
மயங்கிய – இந்த
மங்கையின்...
மனதை வாட்டும்
துன்பத்தை – அந்த
புழுக்களால் அறியமுடியுமா?

வீ.அருள்ராஜா
கொம்மாந்தறை

## சொல்வாயா?

மாதுளம்பூ நிறத்தழகி
வட்டநிலா முகத்தழகி
கயல்போன்ற கண்ணழகி
இளநகைப்புடனே
நாணித்தலைகுனிந்து
எண்ணங்கள் சிறகடிக்க
தனிமையில் நீயிருந்து
யாரைத்தான் தேடுகின்றாய்?

லீலா சிவவடிவேல்
இணுவில் மேற்கு

## பெண்ணின் துயரம்

யுத்தம் முடிந்து
மூன்று ஆண்டுகள்
கழிந்தும்...
தமிழ் இனத்திற்கு
ஏன்? இந்த அவலம்
வெளியில் சென்றவர்
உயிருடன் திரும்பி வருவாரா?
என்ற ஏக்கத்தில்
தமிழ்ப்பெண்!

[illegible]

## காத்திருப்பார் இரகசியம்

மேலைத்தேய
நாகரிக மோகத்தில்
ஊற்றெடுக்கும்
நங்கையருக்குள்
தமிழின் இலக்கணமாய்
கலாசாரத்தின் சிகரமாய்
ஓவியம்போல் இருக்கும்
பெண்ணே நீ
தேவலோக தேவதையா?

ஆ. இந்திரா, வதிரி

## காத்திருப்பு

யாருக்காக காத்திருக்கின்றாய்
காதலனைத் தேடியா
அல்லது தொலைந்துபோன
நல் உறவுகளைத் தேடியா?
காத்திருப்பு நிறைவேற
நாமும் காத்திருப்போம்

எம்.குலராஜ்
ப.மெ.மி.வி

## விடியலுக்காய்

தமிழில் உருவெடுத்து
மலரின் மணம் தொடுத்து
இதழில் சிரிப்போடு- ஒரு
தேவதையின் உருவம்
பூவான இவளை
பொக்கிஷமாய் காக்க
துடிக்கிறாள்
மன்னவன் வருகைக்காக

சு.அ.சுலக்ஷன்
மண்டைதீவு

## அடிமை

பெண்ணே உன் அடிமைத்தனம்
ஒழிக்கப்பட்டு நிம்மதியாய் வாழும்
இக்காலத்தில் நீ மீண்டும் ஏன்
சிந்திக்கிறாய் இக்கால சூழ்நிலையில்
மீண்டும் நீ அடிமை எனும் சிறையினுள்
தள்ளப்பட்டு விடுவாய் என்றா?

இ.சசிதா
சங்கரத்தை

## சிந்தனை

சுவரில்லா சித்திரமானாய் பெண்ணே;
கண் அவன் என்று சொல்லி கைபிடித்த
காதலன் உன்னை கைவிட்டுச் சென்றானோ?
புறாவை தூதுவிட 'சிந்திக்கின்றாயோ?

க.கமலா, திருநெல்வேலி

## அனைத்தும் நீயே!!!

இறைவன் படைத்த இலக்கியமா?
கவிஞன் படைத்த காவியமா?- இல்லை
துன்பங்கள் ஆயிரம் சூழ்ந்து வந்தாலும்
துவண்டுவிடாமல் சாதனை படைத்து...
தமிழ்ப்பெண்மையின் பண்பாட்டை- இந்
நூற்றாண்டிலும் கடைப்பிடிக்கும் ஓவியமா நீ

ச. அஜந்தா

## நீ வருவாயா?

காத்திருக்கிறேன் உனக்காக
காத்திருப்பு பலவருடமாக
தொடர்கிறது
காணவில்லையே உன்னை
எங்கு சென்றாய்!

த.சசிரேகா, கந்தர்மடம்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -131



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 22.11.2012 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நிர்மிளா, நெல்லியடி*

**வியாசரே!**

சினிமாவை பார்த்து சினிமா பைத்தியமா அலைவதா? சினிமா பார்த்து சிரித்து விட்டு போய்விடுவது நல்லதா?

***நிர்மிளா இதற்கு நல்ல உதாரணம் ஒன்று, அண்மையில் வெளியான துப்பாக்கி பட போஸ்டருக்கு விஜய் ரசிகன் ஒருவன் தனது இரத்தத்தால் அபிசேகம் செய்தானாம். இப்படிப்பட்டவர்கள் இருந்தால் இந்த உலகம் எப்படி உய்யும்.***

*சு.ஜெயரூபன், பருத்தித்துறை*

அன்பின் வியாசரே!

கடவுள் உங்கள் முன் தோன்றினால் அவரிடம் தாங்கள் என்ன வரம் கேட்பீர்கள்?

***மறுபிறவியில் நம்பிக்கையில்லை. இருப்பினும் மறுபிறவி ஒன்று இருந்தால் மனிதப் பிறவி வேண்டாம் சாமி என்றுதான் கேட்பேன்.***

*த.அனோஜா, மல்லாவி*

**அன்பின் வியாசரே!**

யுத்தகாலங்களில் தங்க நகைகளை அணிந்த தமிழர் இன்றைய காலகட்டத்தில் கவறிங் நகைகளை அணிவது விலை உயர்வாலா? திருடர்களிற்கு பயந்தா?

**விலை உயர்வுதான் காரணம். விலை உயர்ந்தால் திருடர்களுக்குத்தானே கொண்டாட்டம்.**

## கடவுள் உங்கள் முன் தோன்றினால் அவரிடம் தாங்கள் என்ன வரம் கேட்பீர்கள்?

*அபிராத், அரியாலை*

**வியாசர் அவர்களே!**

நீங்கள் மனைவிக்குப் பயந்து ஆண்டியாகப் போய்விட்டதாக உங்கள் அயல்வீட்டார் சொன்னார்களே உண்மையா?



**உஷ்... அயல் வீட்டானும் என் பின்னால் வருகிறான்.**

*ஜே. கவிதா, சுண்டுக்குளி,*

**அன்பின் வியாசரே!**

அதிகம் பொய் பேசுபவர்கள் ஆண்களா? பெண்களா?

**காதலிக்கும் போது ஆண்கள். திருமணத்திற்குப்பின் பெண்கள்.**

*த.கமலி, கோப்பாய்*

**அன்பின் வியாசரே!**

ஒரு பொய்யை அழுத்திக் கூறினால் அது உண்மையாகுமா?

**ஒரு பொய்யை ஆயிரம் தடவைகள் சொன்னாலும் அது உண்மையாகி விடுமாம்.**




*வி.கமலா, விஸ்வமடு*

**வியாசர் அவர்களே!**

எல்லோரும் விஞ்ஞானிகளாக இருந்தால் உலகம் எப்படி இருக்கும்?

**உலகில் வாழும் எல்லோரும் மனநோயாளிகளானால் எப்படியிருக்குமோ அதுபோல இருக்கும்.**

*துவேனி, கொக்குவில்*

**அன்பின் வியாசரே!**

நல்லவர்களுக்குத் தான் துன்பம், சோதனை அதிகம் என்கிறார்களே....! உண்மையா?

**உண்மைதான்! நீர் கேட்ட அனைத்தும் எனக்கும் உண்டு.**

*சோபி, ஏழாலை*

**அன்பின் வியா!**

இன்பத்தில் கூட வரும் உறவுகள் துன்பத்தில் ஏன் கூட வருவது கிடையாது.

**அந்தப் பொறுப்பை உறவுகள் இறைவனிடம் விட்டு விட்டார்கள்.**

*வி. விஜய், நாவாந்துறை*

**அன்பின் வியா!**

செவ்வாய்க் கிரகத்தைப் பார்க்க எனக்கொரு வழி சொல்லுங்களேன்?



**உமது சாதகத்தை எடுத்துப் பாரும்.**

*லோகிதா, மானிப்பாய்*

**அன்பின் வியாசரே!**

விஞ்ஞானிகள் இன்னும் கண்டு பிடிக்காதது எது?

**நீர் நினைப்பதை நான் அறியமுடியாமல் இருப்பது.**

*ராகிதா, தெல்லிப்பழை*

**அன்பின் வியாசரே!**

இறந்தவர்களை மீண்டும் உயிர்ப்பிக்கும் மந்திரத்தை நம்மவர்கள் கண்டு பிடித்தால் என்ன நடக்கும்?

***சிகிச்சையளித்த டாக்டர்களின் புட்டுக்கட்டுகள் வெளிப்பட்டு விடும்***

*விமல், அல்வாய்*

***அன்பு வியா!***

காதல் வேறு கல்யாணம் வேறு என்று சொல்வது உண்மையா?

***அட! இதில் என்ன சந்தேகம்.***

## ஒரு பொய்யை அழுத்திக் கூறினால் அது உண்மையாகுமா?

*சுகிர்தா, கந்தர்மடம்*

**அன்பின் வியாசரே!**

எண்ணெயும் தண்ணீரும் ஏன் ஒன்றாகக் கலப்பதில்லை?

**நம்ம நாட்டு வியாபாரிகளின் குணம் அறிந்துதான்.**

*அனோஜன், காரைநகர்*

கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டால் என்ன நடக்கும்?

***இப்ப மட்டும் என்னவாம்.***

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் கேள்விகளை**
**ஆசிரியர், வியாசர் பதில்கள்,**
**இல.3, 2ஆம் ஒழுங்கை,**
**பிரவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

குறிப்பு: 10 சொற்களுக்குட்பட்டிருக்கும் கேள்விகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

# புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு ஏற்ற வகையில் ஆஸி. சட்டங்கள் உள்ளன

(கொழும்பு)

புகலிடக்கோரிக்கையாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் சாதகமாகவே அவுஸ்திரேலிய சட்டங்கள் அமைந்துள்ளதாக அந்நாட்டு தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டொனால்ட் ஜேம்ஸ் ரன்டால் சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் வடக்கு பகுதிகளில் எவ்வித நோக்கமும் இன்றி பெருமளவிலான இராணுவத்தினர் சஞ்சரிப்பதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். தற்போதைய அரசாங்கத்தின் சட்டங்கள் புகலிடக் கோரிக்கையாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நல்ல தொழில்வாய்ப்பு பொருளாதார நன்மைகளை அடையும் நோக்கில் இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெற்றுக் கொள்ள முயற்சிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களின் பிழையான வழிகாட்டல்களை நம்பி இலங்கை மக்கள் உடைமைகளை விற்று அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமாக பிரவேசிக்கின்றனர் என தெரிவித்துள்ளார். (அ-2)

# நல்லிணக்க பரிந்துரைகள் செயற்படுத்தப்பட வேண்டும்

## பெரமுன அமைப்பின் செயலாளர் மனுத்தாக்கல்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள பரிந்துரைகளை செயற்படுத்துவதை தடுத்து நிறுத்துமாறு உத்தரவிட வேண்டும் எனக் கோரி, சிங்கள ஜாதிக பெரமுன என்ற அமைப்பின் செயலாளர் ஜயந்த லியனகே நேற்று முன்தினம் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

நாட்டின் தேசிய பிரச்சினைக்கு தீர்வாக 13ஆவது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்தின் கீழ் அதிகாரத்தை பரவலாக்க வேண்டும் என ஆணைக்குழு செய்த பரிந்துரையை நடைமுறைப்படுத்துவதை தவிர்க்கவேண்டும் என மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அமைய அதிகாரத்தை பரவலாக்குவதற்கு எதிராக புத்திஜீவிகள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளதுடன், அந்த திருத்தச் சட்டம் எதிர்கால ஈழ நாட்டுக்கு அடித்தளமாக அமையும் என அவர்கள் அனைவரும் சுட்டிக்காட்டியுள்ளனர் எனவும் மனுதாரர் கூறியுள்ளார்.

மனு தொடர்பில் வாதங்கள் மூலம் மேலும் கருத்துக்களை முன்வைப்பதற்காக எதிர்வரும் 30 ஆம் திகதி நீதிமன்றம் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)



# மரண அறிவித்தல்

## திருமதி சங்கரப்பிள்ளை சரஸ்வதி

வடமராட்சி கிழக்கு அம்பனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சரஸ்வதி 16.11.2012 அதிகாலை 2 மணியளவில் காலமாகிவிட்டார்

அன்னார் அமரர் சங்கரப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற தபாலூழியர்) மனைவியும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி (ஆசிரியர்) மீனாட்சிப்பிள்ளை (ஆசிரியர்) ஆகியோரின் மகளும், காலஞ்சென்ற வள்ளியம்மை, பாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), அன்னலட்சுமி (டென்மார்க்), அமரர் செல்வரத்தினம் (தபால் ஊழியர்), தர்மகுலசிங்கம் (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்), பத்மநாதன் (ஓய்வுபெற்ற நூலகர் J.P), பாலசுந்தரம் (கிராம அலுவலர் குடத்தனை வடக்கு, கட்டைக்காடு) ஆகியோரின் சகோதரரும் சிவராணி, சிவனேசன் (ஜேர்மனி), சிவனேந்திரன் (தபால் ஊழியர் குடத்தனை), சிவநாதன் (ஜேர்மனி), சிவகௌரி (பெரும்பாக உத்தியோகத்தர், அம்பன் புலோலி), சிவமாலதி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், பிரதேச செயலகம், வடமராட்சி கிழக்கு), சிவதாஸ் ஆகியோரின் தாயாரும் வேலும் மயிலும், ஸ்ரீறஞ்சனா (ஜேர்மனி), அன்புக்கரசி, பாமா(ஜேர்மனி), திருப்பதி, கேசவன் ஆகியோரின் மாமியாரும், பாஸ்கரன், சுபாகரன்(மலேசியா), சிவகரன், விபுலன(ஜேர்மனி), மிதுலன், குபிதா (பல்கலைக்கழக மாணவி, யாழ்ப்பாணம்), சஜந்தன், சயானி (ஜேர்மனி), சயந்தன் (ஜேர்மனி), சங்கீதன் (ஜேர்மனி), சுலக்சன், நிசாந்தன், றஜீவன், சரண்ஜன் ( அம்பன், A.M.G.M.S), கோபிகா, ஆகியோரின் பேத்தியும் டர்வின், சஸ்வின், திலக்ஷிகா, சஞ்சிகா ( அம்பன், A.M.G.M.S), தர்மிகன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2012) காலை 11 மணியளவில் அம்பன் மணல்திடல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரவு செலவுத்திட்டம் 2013 ஒரே பார்வையில்

08

20.2. இதனால் உள்நாட்டு பால் உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கான இறக்குமதி செய்யப்பட்ட பால்மா மீது சுங்க நிலையில் உயர்ந்த வரிகளை விதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இது ஒரு லீற்றர் பசும்பாலினை ரூபா 50 என்ற பண்ணை கொள்வனவு விலையில் கிடைக்கச் செய்வதுடன் ஏறக்குறைய 160 ஆயிரம் பாற்பொருள் பண்ணையாளர்களை ஊக்குவிக்கச் செய்கின்றது. விலங்குகளுக்கு செயற்கை சினைப்படுத்தல் தொடர்பான ஆராய்ச்சிகளில் சப்ரகமுவ பல்கலைக்கழகம் ஈடுபட்டிருப்பது ஊக்குவிக்கததக்கதாகும். நாளொன்றுக்கு 10 லீற்றர்களுக்கு அதிகமான பால் உற்பத்தியினை அதிகரிக்கச் செய்வதற்கு சிறிய பால் பண்ணையாளர்களுக்கு ஆராய்ச்சி அறிவும் வழங்கப்பட வேண்டியுள்ளது. பசும்பால் உற்பத்தி மற்றும் பாற்பொருள் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு தேசிய பால் சபை மற்றும் மில்கோ என்பன தமது தொழிற்சாலைகளை திகன, பொலனறுவை மற்றும் அம்பேவெலயில் ஏறக்குறைய 40 மில்லியன் ஐ.அ. டொலர் செலவில் விரிவாக்கியுள்ளன.

20.3. திவி நெகும முன்னெடுப்பானது வீட்டுக் கொள்ளைப்புற பொருளாதாரத்தில் கோழி வளர்ப்பினை பிரபல்யப்படுத்தியுள்ளது. கோழி குஞ்சுகள் மற்றும் பிற ஒத்துழைப்பு சேவைகளை பகிர்ந்தளித்தல், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியினை அதிகரிப்பதற்கு உதவியாக இருப்பது மாத்திரமின்றி மேலதிக குடும்ப வருமானத்தினையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இக்கைத்தொழிலில் பாரிய தயாரிப்பாளர்களுக்காக சிறந்த சந்தை சூழல் ஒன்றினை உருவாக்குதல், கோழிப் பண்ணை தொழில் மீது கட்டுப்பாட்டு விலை மாற்றப்பட்டிருப்பது என்பன உற்பத்திச் செலவினை கவனத்திற் கொள்வதற்காகும். இக்கைத்தொழிலானது ஏற்றுமதி மிகை யொன்றினை உருவாக்குமென்பதுடன் சுற்றுலா கைத்தொழிலின் வளர்ந்து வரும் தேவையை நிவர்த்தி செய்யும் அதேவேளை , உணவுப் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

21. மீன்பிடி நீரியல் வளங்கள்

21.1.மீன்பிடித்துறை அபிவிருத்தியானது, உணவுப் பாதுகாப்பினை ஊக்குவித்தல் வாழ்வாதார செயற்பாடுகளை அதிகரித்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றுக்காக எமது அரசாங்கத்தில் முன்னுரிமை அளிக்கப்படுகின்ற மற்றுமொரு விடயமாகும். அரசாங்க முதலீடானது, நவீன மீன்பிடி துறைமுக வலையமைப்பு, களஞ்சிய மற்றும் சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பு வசதிகளின் ஏற்பாடு, படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் மற்றும் கரையோ, ஆழ்கடல் மீன்பிடி மற்றும் உள்நாட்டு மீன்பிடிகள் அதேபோன்று நீரியியல் வள செயற்பாடுகள் என்பவற்றை பேணுவதற்காக செலவிடப்பட்டுள்ளது. சமுத்திர அடிப்படையிலான ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதற்கான முதலாவது படகினை சமுத்திரிக்கா இனை ஆரம்பிப்பதற்கு ரூபா 300 மில்லியனை அரசாங்கம் முதலீடு செய்துள்ளது. சிலாவத்துறை, தந்தரை, குருநகர் மற்றும் கமமட்டிய போன்ற நான்கு மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கும், மிரஸ்ஸ, ஹிக்கடுவ, பேருவளை, காலி மற்றும் அம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் அனைத்து நங்கூரத் தளங்களையும் மீன்பிடி நிலையங்களையும் புனரமைப்பு செய்வதற்கும் ரூபா 2 ஆயிரம் மில்லியனை வரவு செலவுத்திட்ட அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இந்த அபிவிருத்தி முன்னெடுப்புகளின் மூலம் ஏறக்குறைய 25 ஆயிரம் மீனவர்கள் நன்மையடைவர். இத்துறையில் ஈடுபட்டுள்ள மக்களின் வீடமைப்பு மற்றும் சமுதாய வசதிகள் அவர்களது வாழ்வாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்காக தரமுயர்த்தப்படும்.

21.2. அண்மைக்கால வரட்சி காரணமாக உள்நாட்டு மீன்பிடித்துறை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மீன் குஞ்சுகளின் உற்பத்தி மற்றும் விநியோகம் முன்னுரிமை செயற்றிட்டமாக ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். மீன் உற்பத்தியில் பதனிடல் செயற்பாடுகளில் கவர்ச்சிகரமான முதலீட்டுக்கு ஊக்குவிப்புகள் வழங்கப்பட வேண்டியுள்ளன. இந்த வகையில் இறக்குமதி செய்யப்பட்ட தகர்த்திலடைத்த மீன்களுக்கு உயர்ந்த வரிகளை விதிப்பதற்கும் உள்நாட்டு மீன் தகரத்தில் அடைக்கும் கைத்தொழிலினை ஊக்குவிப்பதற்கும்



மூலப் பொட்களுக்கான வரிகளை குறைப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.கருவாடு மற்றும் பிற பதனிடல் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு இறக்குமதிகள் மீது உயர்ந்த வரிகளை விதிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

மீன்பிடித்துறையில் அபிவிருத்தி குறிப்பாக கருவாடு மற்றும் தகரத்திலடைத்த மீன்கள் தயாரிப்பு அபிவிருத்தியானது வருடமொன்றிற்கு ஏறக்குறைய 150 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொண்ட இறக்குமதி செலவீனத்தை குறைப்பதற்கு காரணமாக அமையும்.

22. சமுத்திர பொருளாதார அபிவிருத்தி உபாயம்

22.1. கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது நாடு மிகச் சிறந்த சமுத்திர மற்றும் கடற்கரை வளங்களை கொண்டுள்ளது. எமது கடலடித்தளமேடை எமது நாட்டைவிட 27 மடங்கு அதிகமாகும். இது மிக அதிகமான கனிப்பொருட்கள், வாயு மற்றும் எண்ணெய் வளங்களை கொண்டுள்ளது என்ற வகையில், மிகவும் பெறுமதிமிக்க பொருளாதார சொத்தாக கருதப்படுகின்றது. யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்திச் சூழ்நிலையில் எமது பிரதான முன்னுரிமைகளில் ஒன்றாக சமுத்திர பொருளாதார அபிவிருத்தித் திட்டமொன்றினை விருத்தி செய்வதற்கு எமது சமுத்திர வளங்களின் முழுமையான பொருளாதார பெறுமதியினை முழுமையாக மதிப்பீடு செயலகமொன்றினை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். இச்செயலகமானது கடலடி கண்டமேடைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் திட்டங்களை செயற்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்படும். உத்தேச செயலகத்தினை உருவாக்குவதற்கு ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

23. பெருந்தோட்டப் பொருளாதாரம்

23.1. கௌரவ சபாநாயகர் அவர்களே, ஒரு காலத்தில் பாரியளவு பெருந்தோட்டப் பொருளாதாரமாகக் காணப்பட்டவை படிப்படியாக சிறு பற்றுநில பெருந்தோட்டங்களாக மாற்றமடைந்துள்ளன. 75 சதவீதமான தேயிலை உற்பத்தி மற்றும் 90 சதவீதமாக இறப்பர் மற்றும் தெங்கு பெருந்தோட்டங்கள் சிறு பற்றுநில சொந்தக்காரர்களுக்குரியனவாக காணப்படுகின்றன. சிறு பற்று நில பெருந்தோட்டங்கள் கறுவா, மிளகு, கொக்கோ மற்றும் ஏனைய பயிர்களையும் உள்ளடக்கியுள்ளன. இது சனத்தொகையில் அதிக சதவீதமானவர்களை சுயதொழிலை அடிப்படையாகக் கொண்ட செலவு குறைந்த பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுத்தியுள்ளது.

மேலும் அது மக்கள் தமது மூலதனத்தினை உருவாக்கிக் கொள்வதற்கு முடியுமான இலாபகரமான பொருளாதார சொத்துக்களையும் ஏற்பாடு செய்கின்றது. 2 ஆயிரத்து 500 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானத்தினைப் பெற்றுத் தருகின்றதும், 250 ஆயிரம் குடும்பங்கள் இத்துறையில் ஈடுபட்டுள்ளதுமான இத்துறையின் நிலையான முன்னேற்றத்தினை அடையும் வகையில் இந்த அனைத்து பயிர்களையும் ஒவ்வொரு வருடமும் முறையான பயிர்ச்செய்கையில் மேம்படுத்துவது அவசியமாகும்.

23.2. சிறு பற்றுநில சொந்தக்காரர்களுக்கிடையில் மீள் நடுகையினை ஊக்குவிப்பதற்காக 2013 இலிருந்து ஹெக்டேயர் ஒன்றுக்கு ரூபா 300 ஆயிரத்திலிருந்து ரூபா 350 ஆயிரமாக மீள் நடுகை மானியத்தினை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். புதிய பெருந்தோட்டங்களுக்கான மானியத்தினை ஹெக்டேயர் ஒன்றுக்கு ரூபா 150 ஆயிரத்திலிருந்து 250 ஆயிரமாக அதிகரிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். சில தேயிலை பெருந்தோட்டங்கள் மிகப் பழைமையானவை என்ற வகையில் புதிய பெருந்தோட்டத்திற்கு படிப்படியாக நகருகின்ற சிறு பற்றுநில சொந்தக்காரர்களுக்கான படிப்படியான மீள் நடுகை ஏற்பாடொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். பெருந்தோட்டக் கம்பனிகளினால் கொண்டிருக்கப்பட்டிருந்த பயன்படுத்தப்படாத நிலங்களை மீள ஒதுக்கீடு செய்வது என 2012 இல் அறிவிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவினைத் தொடர்ந்து 25 ஆயிரம் ஏக்கர் புதிய நிலங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

இக்காணிகளை குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 500 தொழில் முயற்சியாண்மை கொண்ட இளைஞர்களுக்கு மத்தியில் சிறு பற்றுநில பெருந்தோட்டப் பயிர்களை அபிவிருத்தி செய்வதற்காக 30 வருட குத்தகை அடிப்படையில் பகிர்ந்தளிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். அவர்களுக்கு காணிகளை தயார்படுத்துவதற்கும் நடுகை செய்வதற்குமான உதவிகள் வழங்கப்படும்.

தேயிலை சிறுபற்றுநில உடைமையாளர்கள் அவர்களது உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக தேயிலை பறிக்கும் தொழில்நுட்ப சாதனங்களை பிரபல்யப்படுத்துவதற்கு ரூபா 200 மில்லியனை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

23.3. கௌரவ சபாநாயகர் அவர்களே, பெருந்தோட்டக் கம்பனிகளின் ஒத்துழைப்புடன் பெருந்தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக நீண்டகால நிதி ஏற்பாடுகளை திரட்டிக் கொள்வதற்கு அரசாங்கம் சர்வதேச அபிவிருத்தி முகவர்களுடன் முயன்று வருகின்றது. எவ்வாறாயினும் இந்தக் கடன் வசதிகளை பெருந்தோட்டத்துறையில் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுகின்ற பெறுமதி சேர்ப்பு, ஊழியர்களின் நலன் மற்றும் ஊழியர்களினதும் சூழவுள்ள கிராமங்களினதும் நலன்புரியில் ஈடுபடுகின்ற கம்பனிகளுக்கு மாத்திரமே வழங்கப்படும்.

பெருந்தோட்டக் கம்பனிகள் தோட்ட முகாமைத்துவத்திற்கு பொறுப்பாக இருந்திருக்கின்றன என்ற வகையில் செயலாற்றுகை மதிப்பீடுகளை 1992 இற்குப் பின்னரான காலப்பகுதியிலிருந்து கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும். ஏற்புடையதான வாடகை நியதிகள் அதேபோன்று நீண்டகால நிதியேற்பாடுகளுக்கு வசதியளித்தல் என்பவற்றுடன் புதிய நிபந்தனைகளை விதித்தல் மற்றும் அவற்றினது செயலாற்றுகையினை மேம்படுத்துவதற்கு சரியான நடவடிக்கைகளை எடுத்தல் தொடர்பிலும் சிறந்த செயலாற்றுகையுடைய கம்பனிகளுக்கு விருது வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

மேலும் ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையானது, சேதன தேயிலை பயிர்ச்செய்கை மூலம் உற்பத்தி செய்யப்பட்டிருக்குமாயின் அத்தகைய தேயிலை ஏற்றுமதி மீது வருமான வரியினை 12 சதவீதமாகக் குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

23.4. கௌரவ சபாநாயகர் அவர்களே, இறப்பர் கைத்தொழிலானது உற்பத்தி, ஏற்றுமதி வருமானங்கள் மற்றும் பெறுமதி சேர்ப்பில் நியாயமானளவு முக்கியத்துவத்தினை வகிக்கின்றது. இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதியிலிருந்து வெளிநாட்டு செலாவணி சம்பாத்தியம் தேயிலை ஏற்றுமதி வருமானத்தினை விட விரைவான போக்கினைக் கொண்டுள்ளது. சிறிய பற்றுநில உடைமையாளர்களை இலக்காகக் கொண்டு மொனராகலை, அம்பாறை, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இறப்பர் செய்கையினை துரிதப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இறப்பர் பெருந்தோட்டத்துறையில் விளைச்சலை அதிகரிப்பதற்கு உயர் தரமுடைய நாற்றுப் பொருட்கள் அபிவிருத்தி செய்யப்படும். திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2.5 ஏக்கர் நிலத்தினை சொந்தமாகக் கொண்டுள்ள குடும்பங்களுக்கு மத்தியில் அவர்களது துணை வருமானத்தினை மேம்படுத்துவதற்காக இறப்பர் செய்கை பிரபல்யப்படுத்தப்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சித்தலைமை கூட்ட தீர்மானங்கள் வெளியில் பகிரங்கப்படுத்தப்படக் கூடாது

## சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் வெளியில் பகிரங்கப்படுத்தப்படக் கூடாது என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ சபையில் அறிவித்துள்ளார்.

இதனை மீறி செயற்படுவோரை இனிமேல் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு அழைப்பதா இல்லையா என்பது தொடர்பில் முடிவெடுக்க நேரிடும் எனவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தேசியப் பத்திரிகையொன்றுக்கு வழங்கியிருந்த தகவலொன்றை சுட்டிக்காட்டி ஆளுங்கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. அப்பத்திரிகைக்கு வழங்கியிருந்த தகவலில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பிலும் அரசாங்கம் அது தொடர்பில் மேற்கொண்டுள்ள நடவடிக்கை தொடர்பிலும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் சபாநாயகர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. அதனால் இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் விமர்சனங்கள் வெளிப்படுத்துவது ஆரோக்கியமானதல்ல.

அதனை விட கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பேசப்பட்டதை பகிரங்கப்படுத்துவது என்பது பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கு முரணானது. இதனைக் கருத்திற் கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவது அவசியம் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தாம் செயற்பட்டமை சரியானது என்ற வகையில் மீண்டும் மீண்டும் கருத்துக்களை முன்வைக்க அநுரகுமார எம்.பி. முயன்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாகர் ஆளும் கட்சியில் பலபேர் இருக்கையில் அதிலிருந்து கட்சித்தலைவர் கூட்டத்தில் தலைவர் அழைக்கப்படுகிறார். அதேபோன்று மூன்று பேரே உள்ள உங்கள் கட்சிக்கும் நாம் மதிப்பளித்து கட்சித் தலைவர் கூட்டத்திற்கு அழைக்கின்றோம். இதனைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும் எனவும் சபாநாயகர் மேலும் கேட்டுக் கொண்டார். (அ-2)

# பணம் திருடிய குற்றச்சாட்டில் பௌத்த துறவி கைதானார்

(கொழும்பு)

பலாங்கொட பிரதேசத்தில் ஆசிரியை ஒருவரின் கடன்அட்டையை திருடி ஏ.ரி.எம். இயந்திரம் மூலம் பணமெடுத்ததாக சந்தேகிக்கப்படும் பௌத்த துறவி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியையின் கடனட்டையை திருடி நான்கு சந்தர்ப்பங்களில் பணம் மீள எடுக்கப்பட்டுள்ளமை ஏ.ரி.எம். இல் பொருத்தப்பட்டிருந்த கமரா மூலம் பதிவாகியுள்ளது.

இதனை வைத்தே மேற்படி சந்தேக நபர் இனங்காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரை பொலிஸார் பலாங்கொட நீதவான் திருமதி ஜீ.ஏ.ஆர். ஆட்டிகல முன் ஆஜர்செய்த போது அவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும் படி உத்தரவிட்டார்.

இது தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# புலிக்கைதிகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பியுங்கள்

## புனர்வாழ்வு அமைச்சரிடம் வாசுதேவ கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலி கைதிகள் தொடர்பில் பூரணமாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரிடம் கோரியுள்ளார்.

தற்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல விடுதலைப்புலி உறுப்பினர்கள் பற்றிய விபரங்களையும் வெளியிடுமாறு அவர் கேட்டுள்ளார்.

அண்மையில் சிறைச்சாலைக்கு விஜயம் செய்திருந்த போது தமிழ்க் கைதிகள், அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் சில கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

இதன் பிரகாரம் யுத்தம் நிறைவடைந்து மூன்றாண்டுகள் கடந்துள்ள நிலையிலும் தமக்கு எதிராக வழக்கு தொடராமல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள்தாக சில கைதிகள் முறைப்பாடு செய்திருந்தனர்.

கைதிகள் தொடர்பில் துரிதகதியில் நடவடிக்கை எடுக்கும் நோக்கில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். (அ-2)

# ஆயிரம் வெலிக்கடை சிறைக்கைதிகள் மட்டக்களப்புக்கு இடமாற்றம்

## சிறைச்சாலைகள் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள மரண தண்டனைக் கைதிகள் ஆயிரம் பேர்கள் வரை மட்டக்களப்பு மாந்தீவுக்கு மாற்றப்படவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பில் வாவிகளுக்கு நடுவே அமைந்துள்ள இம்மாந்தீவு பிரதேசத்தில் தொழுநோயாளர்களுக்கான வைத்திய சாலை உள்ளது. இங்குள்ள கட்டடங்கள் பல பயன்பாடற்று கிடக்கின்றன.

இக் கட்டடங்களை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு பொறுப்பேற்று வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை கைதிகளை மாற்றம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் போதைப்பொருள் தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்ட கைதிகளும் மாந்தீவில் தடுத்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போதைப்பொருள் தொடர்பான குற்றச் செயல்களில் ஈடுபட்ட கைதிகளை கற்பிட்டியில் உள்ள தீவு ஒன்றில் தடுத்து வைக்க திட்டமிடப்பட்ட போதும் அங்கு கட்டட வசதிகள் இன்மையால் அந்தத்திட்டம் கைவிடப்பட்டதாக சிறைச்சாலைகள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# டெசோ கலந்துரையாடல் கூட்டம் சென்னையில்

இலங்கை தமிழர்களின் வாழ்வுரிமைக்காக சென்னையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி டெசோ மாநாடு இடம்பெற்றுள்ளது. அதில் இலங்கை தமிழர்களுக்கு அரசியல் தீர்வுகாண வேண்டும் என்பது உள்ளிட்ட 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த தீர்மானங்களை சமீபத்தில் தி.மு.க. பொருளாளர் ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. எம்.பிக்கள் குழு நியூயோர்க்கில் உள்ள ஐ.நா சபை துணை பொதுச் செயலர் ஜெனீவாவில் உள்ள ஐ.நா மனிதவுரிமை ஆணையகத்தலைவர் ஆகியோரிடம் டெசோ தீர்மானங்களை கையளித்து விட்டு சென்னைக்கு திரும்பினர்.

அடுத்த கட்ட நடவடிக்கைகள், போராட்டங்கள் குறித்து விவாதிக்கவும் டெசோ கலந்துரையாடல் கூட்டம் நாளை திங்கட்கிழமை சென்னையில் கூடுகிறது. (அ-2)

# சோயா அவரை இறக்குமதி செய்வதற்கு தடைவிதிப்பு

(கொழும்பு)

திரிபோஷா தயாரிப்புக்கு தேவையான சோயா, போஞ்சி இலங்கையில் போதியளவு இருப்பதால் சோயா அவரையை இறக்குமதி செய்வதற்காக தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க வேண்டாமென விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன திறைசேரிக்கு அறிவிக்கவுள்ளார்.

சோயா அவரையை விவசாயிகளிடமிருந்து கிலோ 110 ரூபாவுக்கு பெற்றுக் கொள்ளலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வெவளிநாடுகளில் இருந்து இதனை இறக்குமதி செய்யும் போது தீர்வையின்றி சோயா அவரை கிலோ 130 ரூபாவாகிறது.

இதில் இறக்குமதிக்கு தாம் வேலி போடுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

3 ஆயிரம் மெற்றிக்தொன் சோயா அவரை கையிருப்பில் உண்டு. இது நாட்டின் தேவைக்கு போதுமானது என்றும் அவர் கூறினார். அண்மையில் ஏற்பட்ட கடும் வரட்சி காரணமாக சோயா அவரை அறுவடைக்கு பாதிப்பு ஏற்பட்டது.

95 ரூபாவாக இருந்த சோயா அவரை 110 ரூபாவரை அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

மூன்று நெல் போகங்களுக்கு தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டால் விதை நெல் தட்டுப்பாட்டை தவிர்க்க முடியாது. இரு போகங்களுக்குமான விதை நெல்லை மட்டுமே களஞ்சியப்படுத்த இயலுமென்றும் அமைச்சர் கூறினார். (அ-2)



மன்னார் மறைமாவட்ட வருடாந்த மேய்ப்பு பணித்திட்டமிடல் மாநாடு அண்மையில் மடு தியான இல்லத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டின் நிகழ்வினை மன்னார் ஆயர் மேதகு இரா. யோசப் ஆண்டகை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் மாநாட்டில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு


105

# ஆங்கிலேயர் காலம்

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

### இராஜாதி இராஜசிங்கன்

ஆங்கிலேயரின் படையெடுப்பு ஒரு மழைக்காலத்தில் நடந்தேறியது. கண்டியில் மழைக்காலம் ஆரம்பித்தது. கொழும்பு- கண்டிப் பாதை



பிலிமத்தலாவை

துண்டிக்கப்பட்டது. போர் வீரர்களுக்கு உணவுப் பொருட்கள் அனுப்ப முடியாமல்போனது. அத்துடன் காட்டுச் சுரம் வீரர்களைப் பீடித்துக் கொண்டது. அதனால் 8000 வரையிலானவர்கள் இறந்துபோக நேர்ந்தது. கப்டன் பாபுட்டும் காட்டுச் சுரத்தால் பாதிக்கப்பட்டு கொழும்பு திரும்பினான். படை நடத்தி வந்த மக்டோவல் தன் பொறுப்பை மேஜர் டேவி என்பவனிடம் ஒப்படைத்துவிட்டு கொழும்பு திரும்பி போர்வீரர்களின் இக்கட்டை எடுத்துரைத்தான். உடனடியாகப் படைகளைத் திருப்பி



சேர் தோமஸ் மெயின்லாண்ட்

அழைக்க ஆள்பதி நோர்த்திடம் அனுமதி கோரினான். முதலில் மறுப்பளித்த நோர்த் பின்னர் இணங்கினான். இந்நேரத்தில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் ஆங்கிலேயரைச் சுற்றிவளைத்து, எஞ்சிய ஆங்கிலேய வீரர்களைக் கண்டியிலிருந்து வெளியேற விடுவதாயின் அவர்கள் வசமுள்ள அரசனாக்கப்பட்ட முத்துச்சாமியையும், அவன் தம்பி கந்தசாமியையும் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என படைத்தளபதி டேவிக்கு அறிவித்தான். வேறு வழியின்றி முத்துச்சாமியையும் கந்தசாமியையும் டேவி மன்னனிடம் ஒப்படைத்தான். அவர்கள் இருவரும் உடனடியாகச் சிரச்சேதம் செய்யப்பட்டனர். அதற்குப் பின்னரும் மன்னன் தன் வாக்குறுதியைக் கடைப்பிடிக்கவில்லை. ஆங்கிலேயப்படைவீரர்களைத் தாக்கினான். நோயுற்றிருந்த வீரர்களையும் கொலை செய்வித்தான். கைதாகிய ஆங்கிலேயர்களை இவ்விருவராகப் பிணைத்து, மூளை நொறுங்க அடித்துக் கொல்வித்தான். மேஜர் டேவியும் ஏராளமான வீரர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். மேஜர் டேவி சிறையிலேயே இறக்க நேர்ந்தது. ஆங்கிலேயரின் 1803 ஆம் ஆண்டுப் படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. அப்படையெடுப்பில் ஒரே ஒரு வீரன் மட்டும், பாண்ஸி என்பவன் இறந்தவன் மாதிரிக் கிடந்து தப்பி வந்து நோர்த்திடம் நடந்தவற்றை முறையிட்டான். ஆள்பதி நோர்த்தின் அவசர முடிவும் சாதகமற்ற மலைநாட்டின் காலநிலையும் தோல்விக்குக் காரணங்களாகின.

1803 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கும் கண்டிக்கும் நடந்த யுத்தத்தில் பிலிமத்தலாவை நடந்து கொண்ட முறை விக்கிரம இராஜசிங்கனுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது. தன்னைக் கொல்லச் சதித்திட்டம் தீட்டப்பட்டதையும் தெரிந்து கொண்டான். அதனால் உடனடியாக பிலிமத்தலாவையையும் அவனோடு ஆறு தலைவர்களையும் பிடித்துச் சிரச்சேதம் செய்வித்தான். ஆங்கிலேயப் படைவீரர்களையும் கிலிகொள்ள வைக்கும் அறிவித்தல் ஒன்றையும் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் வெளியிட்டான். ஆங்கிலேயனின் தலையொன்றைக் கொண்டு வருபவர்களுக்கு பத்து ரூபா வீதமும் ஆங்கிலேயப்படையிலுள்ள சுதேசிகளின் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு ஐந்து ரூபா வீதமும் சன்மானம் தரப்படும் என அறிவித்தான். அதனால் ஆங்கிலேயப் படையிலிருந்து சுதேசிகள் விலகிவிட நேர்ந்தது. மலாய வீரர்கள் மன்னன் பக்கம் சேர்ந்தனர்.

### எகெலப்பொலை

ஆள்பதி நோர்த்தின் பின்னர் சேர் தோமஸ் மெயிற்லான்ட் என்பவரும், அவருக்குப்பின்னர் 1812 இல் சேர் றொபேட் பிறவுன்றிக்கும் இலங்கையின் ஆள்பதிகளாக அமர்ந்தனர். மெயிற்லான்டின் காலம் அமைதியான காலமாக இருந்தது. அவரின் வேண்டுகோளுக்கிண ஸ்ரீங்க விக்கிரம இராஜசிங்கன் தன் சிறையிலிருந்த ஆங்கிலேயக் கைதிகளில் 300 பேரை விடுதலை செய் தான். 1812 இல் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் எதிர்பார்த்திருந்த காலம் கனிந்தது. அத்துடன் தனக்கு எதிராக பிலிமத்தலாவையுடன் இணைந்து சதி செய்ததாக கருதி, சதியில் சம்பந்தப்படாதிருந்த சிங்களத் தலைவர்கள் பலருக்குக் கடுந் தண்டனைகள் விதித்தான். அத்தலைவர்கள் வகித்த பதவிகளைத் தன் நாயக்க உறவினர்களுக்கு வழங்கி



ஃபிரட்டிக் நோர்த்

னான். அவர்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்தான். சில பிரதானிகளிடையே காணப்பட்ட முரண்பாடுகளைத் தன் நலனுக்குப் பயன்படுத்திக் கொண்டான்.

பிலிமத்தலாவையின் மகா அதிகாரிப் பதவிக்கு இன்னொருவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பிரதான பிரதானிகளுக்குரியதாகும். அதனால் பிரதானிகள் எகெலப்பொலை என்பவனை மகா அதிகாரியாகத் தெரிவு செய்தனர். அத்தெரிவில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனுக்கு உடன்பாடில்லை என்றாலும், பிரதானிகள் தெரிவு செய்ததால் அமைதியைக் காத்தான். அதேவேளை இரண்டாவது மகா அதிகாரி மீகஸ்தனை என்பவன் இறந்ததும் அந்த இடத்துக்கு எகெலப்பொலைக்குப் பகைவனான மொல்லிக்கொடை என்பவனை நியமித்தான். இவை காரணமாக ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் பிரதானிகளின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டான். மேலும் அரசசபையில் இருந்த அதிகாரம் என்ற பதவியை இரண்டிலிருந்து மூன்றாக்கினான். அதற்குத் தனக்குச் சொந்தமான ஒருவனை நியமித்தான். பிரதானிகளின் அதிகாரங்களைக் குறைக்க நடவடிக்கைகள் எடுத்தான். பெரும் செல்வாக்கோடிருந்த பிரதானிகள் செல்வாக்கை மட்டுப்படுத்த விரும்பினான். சபையில் இருந்த பிலிமத்தலாவை, எகலெப்பொலை ஆகிய பிரதானிகளின் உறவினர்களையும் ஆதரவாளர்களையும் பிரதானிகள் அந்தஸ்த்திலிருந்து நீக்கினான். வம்சாவளி மூலம் பதவி அளிக்கும் முறையை நீக்கினான். வயதில் குறைந்தோரை அதிகாரியாக்கினான். நாயக்க உறவினரைத் திசாவைகளாக்கினான். தனது மகன் முறையானவனும் இராஜாதி இராஜ சிங்கனின் மகனுமான மாம்பிட்டிய பண்டாரா என்பவனைக்கூட அரசுக்குத் துரோகம் செய்தான் எனக்குற்றஞ்சாட்டி மரண தண்டனை அளித்தான். இவற்றின் விளைவாக கண்டியிலிருந்து 500 உக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர நேர்ந்தது. இவற்றால் அதிருப்தியடைந்த பிரதானிகள் எகெலப்பொலையின் தலைமையில் ஒன்று சேர்ந்து ஸ்ரீ விக்கிர இராஜ சிங்கனைப் பதவியிலிருந்து அகற்றச் சூழ்ச்சி செய்தனர். சப்ரமுகாவாவில் அரசனுக்கெதிராகக் கலகம் ஒன்று ஏற்பட்டது. மொல்லிக்கொடை தலைமையில் அனுப்பி வைத்த படையால் கலகம் மன்னனால் முறியடிக்கப்பட்டதும் தப்பிச்சென்ற எகெலப்பொலை ஆங்கிலேயருடன் தொடர்பு கொண்ட



ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

தோடு, ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டான்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அமுதம்

சிவபுரி ஜமீன்தாருக்கு ஒரே மகன்! அவனை செல்லமாக வளர்த்தார். அவருடைய வயலில்



வேலை செய்யும் பெருமாளுக்கும் ஒரே பிள்ளை.

அவனுக்கும் ஜமீன்தார் மகனுக்கும் ஒரே வயது. ஜமீன்தார் தன் மகனுக்குப் பால், பழம், பிஸ்தா என்று ஊட்டி வளர்த்தார். ஆனால் அவனுக்கு அவை எதுவுமே பிடிக்காததால், சாப்பிடாமல் அடம்பிடித்து வந்தான். நாளடைவில் அவனுடைய உடல் இளைத்து விட்டது.

ஒருநாள் ஜமீன்தார் தன் மகனை வயலுக்குக் கூட்டிச் சென்றார்.

அங்கு ஜமீன்தார் பிள்ளையின் சம வயதான பெருமாளின் மகனைப் பார்த்ததும் என்ன தோன்றியதோ என்னவோ, ஜமீன்தாரின் மகனும் அவனுடன் உற்சாகத்துடன் விளையாட ஆரம்பித்தான்.

இடையில் பெருமாளின் மனைவி தன் மகனை அழைத்து அவனுக்கு ஏதோ ஒன்று குடிப்பதற்கு அளித்தாள்.

அதை ஆர்வத்துடன் குடித்த பெருமாளின் மகன் மீண்டும் விளையாடத் தொடங்கினான்.

அந்தப் பிள்ளை அருந்தும் பானத்தில்தான் ஏதோ விசேஷ சக்தி உள்ளது என்று எண்ணிய ஜமீன்தார் பெருமாளை அது என்ன? என்று கேட்டார்.

அதற்கு அவன் ஐயா! இது காலம் காலமாக என் முன்னோர்களும் நானும் பருகி வரும் அமுதம் என்றான்.

அன்று அத்துடன் அதைப்பற்றிய பேச்சை விட்டு விட்டாலும் ஜமீன் தாரின் மனத்தைப் பெருமாள் குறிப்பிட்ட அமுதம் குடைந்து கொண்டே இருந்தது. அதை தன் பிள்ளைக்கும் கொடுத்துப் பார்க்கலாமே என்று எண்ணம் இட்டார். ஒருநாள் பெருமாளின் குடிசைக்கே சென்ற ஜமீன்தார் அவனிடம் பெருமாள்! என் பிள்ளை என்ன சாப்பிடக் கொடுத்தாலும் சாப்பிடுவது இல்லை.

நீ உன் பிள்ளைக்கு குடிக்கத் தருகிறாயே அந்த அமுதத்தை எனக்கும் தா! என்ன

## அம்புலிமாமா கதைகள்

விலையானாலும் தருகிறேன் என்றார். அவரை வியப்புடன் பார்த்த பெருமாள் எசமான் அது உங்கள் பிள்ளைக்குப் பிடிக்காது! என்றான்.

நீ கொடு. நான் அவனை



குடிக்க வைக்கிறேன்! என்று ஜமீன்தார் சொல்ல, பெருமாள் அவரை சமையலறைக்கு கூட்டிச் சென்றான். அங்கு அடுப்பில் சட்டியில் கேழ்வரகு கஞ்சி கொதித்துக் கொண்டு இருந்தது.

அதைக்காட்டிய பெருமாள் இதுதான் எங்களைப் போன்ற ஏழைகளின் அமுதம். இதுதான் எங்களுக்கு சக்தியை தருகிறது. வேண்டுமானால் உங்கள் பிள்ளைக்கு கொடுத்துப் பாருங்கள் என்றான்.

அதற்குள் ஜமீன்தாருடன் வந்த அவர் பிள்ளை தானாகவே வலியவந்து அந்தக் கேப்பைக் கஞ்சியை ஆர்வத்துடன் ரசித்துக்குடித்தான். தன் வீட்டில் எதையுமே சாப்பிடப் பிடிவாதம் பிடித்த தன் பிள்ளை கேப்பைக் கஞ்சியை ரசித்துக்குடித்தது ஜமீன்தாருக்கு ஆச்சரியத்தை அளித்தது.

உடனே அன்றுமுதல் தன் பிள்ளைக்கும் கேப்பைக்கஞ்சி, புழுங்கலரிசிக்கஞ்சி, கூழ் போன்ற சத்து நிறைந்த உணவுகளை ஜமீன்தார் கொடுக்க ஆரம்பிக்க விரைவிலேயே அவரது மகன் உற்சாகமாகவும் ஆரோக்கியமாகவும் மாறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாத இராசி பலன்

# 16.11.2012 - 15.12.2012




**மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்**

**நினைத்தது நிறைவேறும் நேரம்!**

**நட்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அற்புத குணம் பெற்ற தனுசு இராசி நேயர்களே!**

விருந்தினர்களை உபசரிப்பதில் வல்லவர்கள் நீங்கள். மற்றவர்களிடம் எவ்வளவு தான் ஆலோசனைகள் கேட்டாலும், உங்கள் முடிவையே உறுதியான முடிவாக எடுத்துக்கொள்வீர்கள். உயர்நிலையில் இருப்பவர்களோடும் தொடர்பு வைத்துக் கொள்வீர்கள். சாதாரணமான நிலையில் இருப்பவர்களோடும் சகஜமாகத் தொடர்பு வைத்துக்கொள்வீர்கள். மற்றவர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவதில் வல்லவர்களாகவும் இருப்பீர்கள். சுக்ர பலத்தைப் பொறுத்தே உங்கள் வாழ்க்கை அமைகிறது.

உங்களுக்கு இந்த கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் விரய ஸ்தானத்தில் சூரியனும், சந்திரனும், இராகுவும் இணைந்து சஞ்சரிக்கப்பேகிறார்கள். இருந்தாலும் தனாதிபதி உச்சம் பெற்றிருப்பதால் பொருளாதாரத்தைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. செல்வாக்கு மேலோங்கும். நினைத்தால் நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க இயலும்.

இராசிநாதன் குரு வக்ரம் பெற்றிருப்பதால் ஆரோக்கியத்தில் மட்டும் அக்கறை தேவை. அடிக்கடி உடல்நிலை தொல்லைகள் வந்து அலைமோதும். தொழில், வியாபாரம் சம்பந்தமாக வரும் பயணங்களின் எண்ணிக்கை கூடும். காலையில் ஓரிடத்திலும், மதியம் ஓரிடத்திலும், மாலையில் ஓரிடத்திலும் பணியாற்றிக் கொண்டிருப்பீர்கள். இம்மாதம் நடைபெறப்போகும் இராகு, கேது பெயர்ச்சி உங்களுக்கு எல்லா வகையிலும் நன்மைகள் வழங்கும்.

குறிப்பாக, நீங்கள் எதை எதிர்பார்த்துக் காத்திருந்தீர்களோ, அது நடைபெற்று ஆனந்தம் வழங்கும். இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போகும் இராகு, உங்களுக்கு இமயம் அளவிற்கு உயர்வு தரப்போகிறார். அதே சமயத்தில் 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேது, பிள்ளைகளின் வழியில் மனக்கலக்கம் தரும் தகவல்களை கொண்டு வந்து சேர்க்கும். அதுமட்டுமல்ல, பூர்வீக சொத்துக்களில் நடைபெற்ற பஞ்சாயத்துக்களை முடிவிற்கு வரவிடாமலும் தாமதப்படுத்தலாம். எனவே, இராகு- கேதுகளுக்கு முறையா சர்ப்ப சாந்திகளை செய்வது நல்லது.

## தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும் விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்

**சுக்கிரனின் பெயர்ச்சியும் புதனின் பெயர்ச்சியும்!**

நவம்பர் 17 ஆம் திகதி துலாம் இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப்போகிறார். பகைக் கிரகமாக இருந்தாலும் இலாப ஸ்தானத்தில் பலம் பெறும்பொழுது வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். அன்னியதேச தொடர்பு கிட்டும். டிசம்பர் 12 இல் விருச்சிக இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கும்பொழுது விபரீத இராஜயோக அடிப்படையில் செயற்படும். திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிட்டும். வீடு மாற்றங்கள், வாகன மாற்றங்கள் பற்றிய சிந்தனை மேலோங்கும். இதற்கிடையில் புதனும், விருச்சிகத்தில் சேர்வதால் புதிய ஒப்பந்தங்களில் கையெடுத்திட்டு மகிழ்வீர்கள். மாமன் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

**நலம் தரும் இராகு, கேது பெயர்ச்சி!**

டிசெம்பர் 2 ஆம் திகதி துலாம் இராசியில் இராகுவும் மேட இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப்போகிறார்கள். இதன்விளைவாக உங்கள் எண்ணங்கள் பூர்த்தியாக வழிபிறக்கும். இளைய சகோதரத்துடன் இருந்த பகை மாறும். வியாபார விரோதங்கள் அகலும். மாற்று கருத்துடையோர் மனம் மாறி உங்கள் கூட்டு முயற்சிக்கு ஒத்துழைப்பு செய்வர். உறவினர்களுக்கு கொடுத்துதவிய பணம் மீண்டும் கைக்கு வந்து சேரும். பஞ்சம கேதுவின் ஆதிக்கத்தால் பிள்ளைகள் பிரச்சினைகள் உருவாகலாம். அவைகளை கண்காணித்து கொள்வது நல்லது.

**விரயாதிபதி உச்சம் பெறும்நேரம்!**

மாதக் கடைசியில் டிசெம்பர் 15 ஆம் திகதி செவ்வாய் மகரத்தில் உச்சம் பெறப்போகிறார். இதன்விளைவாக செலவுக்கேற்ற தொகை முன்னதாக வந்து கொண்டேயிருக்கும். காசு வைத்துக் கொண்டு காரியத்தை தொடங்க வேண்டியதில்லை. காரியத்தைத் தொடங்கிவிட்டால் காசு, பணம் தானாகவே வந்து சேரும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும்.

இம்மாதம் குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு குதூகலமான வாழ்க்கையை வரவழைத்துக்கொள்ளுங்கள்.

இம்மாதம் செயல் ஸ்தானத்தில் புதனும் சுக்கிரனும் பரிவர்த்தனை ஆவதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வந்து கொண்டே இருக்கும். வியாபாரத்தில் உங்கள் பெயரையும் இணைத்துக்கொள்ள குடும்ப உறுப்பினர்கள் சம்மதிப்பர். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. இராகு- கேதுக்களின் ஆதிக்கம் நன்மையை வழங்க அனுகூலம் தரும் நாளில் சர்ப்ப சாந்தியை செய்வது நல்லது.

# சிவல்புரி சிங்காரம்

**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதம்**

**ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய நேரம்!**

**எந்த நேரமும் எதைச் செய்தாலும் வெற்றி கிடைக்கும் என்பதை அறிந்து வைத்திருக்கும் மகர இராசி நேயர்களே!**

உழைப்பில் அதிக நம்பிக்கை வைத்திருப்பவர்கள் நீங்கள். விஞ்ஞானத்திலும் உங்களுக்கு ஈடுபாடு இருக்கும். அதே நேரத்தில் மெஞ்ஞானத்திலும் அதிக ஈடுபாடு இருக்கும். செலவாளியாக இருப்பீர்கள். சில நேரங்களில் சிக்கனத்தின் சிகரமாகவும் இருப்பீர்கள். நிதானத்தோடு நீங்கள் செயற்படுவதால்தான் நிலையான புகழை நீங்கள் வரவழைத்துக் கொள்ள முடிகிறது.

உங்களுக்கு இந்த கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, விரயாதிபதி குரு வக்ரம் பெறுகிறார். அதன் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் விரயங்கள் குறையும். விரோதங்கள் ,விலகும். குறையாக நின்ற பணிகள் இனி தொடரும். இதுவரை அர்ச்சனை செய்ததற்குரிய பலன்கள் இப்பொழுது உங்களுக்கு கிடைக்கும். பொருளாதாரநிலை உயரும்.

என்ன இருந்தாலும் இந்த மாதம் இராகு, கேதுக்களின் மாற்றம் வளர்ச்சியையும் தளர்ச்சியையும் மாறி மாறித்தான் கொடுக்கும். 4 இல் கேது சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது, சுகக்கேடுகளை உருவாக்கலாம். எனவே, ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள். அலைச்சலை குறைத்துக் கொள்ளுங்கள். குடும்ப ஸ்தானமாகவும் 4 ஆம் இடம் அமைவதால், குடும்ப உறுப்பினர்களுடன் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. அனுசரித்து செல்லாவிட்டால் அன்றாடம் பிரச்சினைகளில் சிக்கி தவிக்கும் சூழ்நிலை உருவாகலாம்.

இராகு- கேதுக்களுக்கு முறையாக பரிகாரம் செய்வதன் மூலமும் தோஷ நிர்த்திக்குரிய ஆலயங்களில் அடியெடுத்து வைப்பதன் மூலமும் நல்ல பலன்களை வரவழைத்துக் கொள்ள இயலும். மாதத் தொடக்கத்தில் செவ்வாய் 12 இல் மறைந்திருப்பதால் அங்காரக வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**சுக்கிர பெயர்ச்சியும் புதனின் பெயர்ச்சியும்!**

நவம்பர் 17 ஆம் திகதி சுக்கிரன் துலாம் இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். 5, 10 க்கு அதிபதி பலம்பெறும் இந்த நேரத்தில் பண வசதிகள் பெருகும். வீடு கட்டும் யோகம் ஒரு சிலருக்கு வந்து சேரும். பிள்ளைகள் வழியில் வரும் சுப காரிய பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம். தொழில் போட்டிகள் அகலும். டிசெம்பர் 12 ஆம் திகதி விருச்சிகத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும்பொழுது உத்தியோகஸ்தர்களுக்கு உயர்வு கிடைக்கும். தொழில் செய்வோர்கிளை தொழில் தொடங்கும் வாய்ப்பு கைகூடி வரும். இதற்கிடையில் டிசெம்பர் 5 ஆம் திகதி விருச்சிகத்தில் புதன் அஷ்டமாதிபதியுடன் கூடப்போவதால் ஆரோக்கியத்தில் திடீர் தாக்குதல்கள் ஏற்படலாம். பயணங்களை ஒத்தி வைப்பது நல்லது.

**இராகு- கேதுக்களின் சஞ்சாரப் பலன்!**

டிசெம்பர் 15 ஆம் திகதி மகர இராசியில் செவ்வாய் உச்சம் பெறப்போகிறார். இதன் விளைவாக கனவுகள் நனவாகப் போகின்றன. தாய்வழி உறவு புதுப்பிக்கப்படும். இளைய சகோதரத்தோடு இருந்த பகை மாறும். வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். சொத்துக்கள் வாங்க, விற்க உகந்த நேரமிது. துணிவும், தன்னம்பிக்கையும் கூடும்.

## சொத்துக்கள் வாங்க, விற்க உகந்த நேரமிது தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்




இந்த மாதம் இராமபிரான் வழிபாடு நன்மையை வழங்கும். இந்த மாதம் குரு பார்வையால் குழப்பங்களிலிருந்து விடுபடுவீர்கள். சுகஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கப் போவதால் வாகன மாற்றம் செய்வது நல்லது. வீட்டு பராமரிப்பு செலவு கூடும். எதையும் ஒரு முறைக்கு இருமுறை செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகும். கணவன்- மனைவிக்குள் விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் அன்னியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். சகோதர வர்க்கத்தினர் உங்களோடு இணைந்து செயற்படுவர். சர்ப்ப பரிகாரம் சந்தோஷத்தை வழங்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தமிழினப் படுகொலை நடத்திய இலங்கை அரசு, போர்க் குற்றங்களுக்கு எதிராக சர்வதேச நாடுகளின் கவனம் அடுத்த நிலையை நோக்கி நகர்ந்திருக்கிறது.

இலங்கையில் நடைபெற்ற இன அழிப்பின் மீது ஓர் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தும் மாநாடு கடந்த 7,8,9, ஆம் திகதிகளில் லண்டன் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடந்து முடிந்திருக்கிறது.

# ஈழ மக்களின் எதிர்காலம்!

பிரித்தானிய தமிழர் பேரவையும் தமிழர் பிரச்சினைக்கான இங்கிலாந்து அனைத்துக் கட்சி நாடாளுமன்ற குழுவும் இணைந்து இந்த மாநாட்டை நடத்தியிருக்கின்றன. மூன்று நாட்கள் தொடர்ந்து நடந்த இந்த மாநாட்டில் இங்கிலாந்து



லண்டன் வருவதற்கு தாமதமானதால் அவர்களால் கலந்துகொள்ள முடியவில்லை. இந்த ஆலோசனைக் கூட்டத்தில், மாநாட்டில் தாக்கல் செய்யவிருக்கும் தீர்மானத்தின் வரைவு நகல் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. அதில் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச சுயாதீனமான நீதி விசாரணையை நடத்த வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. இதன்போது பேசிய திருமாவளவன், கிருஷ்ணசாமி, அர்ஜுன் சம்பத் ஆகியோர், "இலங்கையில் நடந்திருப்பது இனப்படுகொலை. இலங்கை அரசு செய்திருக்கும் போர்க்குற்றங்களுக்கு ஐ.நா. சபைச்செயலாளர் பான் கி மூன் சர்வதேச விசாரணையை நடத்த முன்முயற்சி எடுக்க வேண்டும். இனப்படுகொலை என்பதையும் தீர்மானத்தில்

கட்சி பிரித்தானிய பாராளுமன்ற குழுத் தலைவர் லீஸ் கொட் ஆரம்பித்து வைத்தார். பிரித்தானிய தமிழர் பேரவையின் அனுசரணையோடு நடைபெறும் மாநாட்டில் உலகப் பரப்பில் பரந்து வாழும் பெரும்பாலான அனைத்து தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்தும் இனப் படுகொலை குறித்தும் அழுத்தமாக பேசினர்" என்றனர்.

மாநாட்டில் பேசிய மு.க. ஸ்டாலின், "ஈழத் தமிழர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் ஐ.நா. மன்றத்தின் மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்பதில்தான் இலங்கை தமிழர்களுக்கான அரசியல் தீர்வு அடங்கியிருக்கிறது. அத்தகைய பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்" என்றார். மிக முக்கியமான பேச்சாக மாநாட்டில் இது பார்க்கப் பட்டது.

"ஈழத்தமிழர்களின் எதிர்காலம் குறித்த போராட்டம், அகிம்சை வழி, ஆயுத வழி, சர்வதேசம் என 3 கட்டங்களாக இருக்கிறது. இரண்டு கட்டங்களைக் கடந்து 3-வது கட்டத்தில் ஈழப் பிரச்சினை நகர்ந்திருக்கிறது. அந்த வகையில் சர்வதேச அரங்கிற்குள் கொண்டு செல்லப்பட பொதுவாக்கெடுப்பு என்கிற யுக்திதான் அவசியமானது" என்கிறார்கள் ஈழத்தமிழர்கள்.


பா.ம.க. தலைவர் கோ.க.மணி

தமிழினத்துக்கு எதிரான போரில் இலங்கை அரசு நடத்திய போர்க் குற்றங்களை விவரித்த திருமாவளவன், "இலங்கையில் நடந்திருப்பது இனப்படு கொலைதான். அந்த போர்க்குற்றங்களுக்காக இலங்கைமீது சர்வதேச புலனாய்வு விசாரணை தொடங்க வேண்டும்" என்பதை வலியுறுத்தினர்.

தமிழர்களின் பேச்சுக்களை குறிப்பெடுத்துக் கொண்ட பிரித்தானிய நாடாளுமன்ற எம்.பி.க்கள் சிமோன் மெக்டோனால்டு, றோபெட் ஹெய்பண்ட், தொழிலாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவரான டெரோமிக் கோபான் ஆகியோர் "இலங்கையில் நடந்திருப்பது இனப்படு கொலைதான். 2009 இல் நடந்துள்ள இந்த இனப்படுகொலையைத் தடுக்க உலக நாடுகள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பது கவலைக்குரிய விடயம். அந்தப்போர்க் குற்றங்களுக்கு சர்வதேச புலனாய்வு விசாரணை நடத்த வேண்டும் என்பது அவசர தேவையாக இருக்கிறது" என்று வலியுறுத்தி பேசினார்.

மூன்று மணி நேரம் நடந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இங்கிலாந்து அனைத்து கட்சி நாடாளுமன்ற குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. மாநாடு முடிந்ததும் தமிழக வி.ஐ.பி.க்களிடம் கலந்துரையாடிய இங்கிலாந்து எம்.பி.க்கள் "இலங்கையின் இனச்சிக்கலுக்கு எவ்விதமான தீர்வை நோக்கி சர்வதேச சமூகம் நகர வேண்டும் என்பதை தெளிவாக விவரித்தீர்கள். இங்கு நடந்துள்ள நாடாளுமன்ற குழு மாநாட்டைப்போல இந்தியாவில் நடத்தியிருக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை ஏன் எடுக்கவில்லை" என்று கேள்வி எழுப்பினர். இதற்கிடையே மற்றொரு

யும் எதிரியாகப் பார்க்காதீர்கள். அவர்களோடு இணைந்து ஒரு லாபியை உருவாக்க வேண்டும்" என்றார்.



லண்டனில் தி.மு.க.வுக்கு கறுப்புக்கொடி காட்ட ஒரு முயற் சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், அப்படி எதுவும் நடக்காமல் இங்கிலாந்து காவற்றுறை பார்த் துக் கொண்டது. அதேபோல் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளாமல் வைகோவும் நெடுமாறனும் தவிர் த்த விவகாரமும் பெரிதாக வெடித் திருக்கிறது. இதுபற்றி பேசிய சாம் கிருஸ்ணா "வைகோவும் நெடுமாறனும் வராதது கவரைக்குரிய விடயம். வராததற்கான காரணங்கள் எங்களுக்கு தெரியவில்லை" என்றார்.

தாய்த்தமிழனத்தின் அரசியல் தலைவர்கள் தங்களின் உள்ளூர் அரசியல் கொள்கைகளை மையப்படுத்தியே ஈழப்பிரச்சினைகளையும் அணுகுகிறார்கள். அதனால்தான் 30 ஆண்டுகால விடுதலை போராட்டம் பின்னடைவைச் சந்தித்தது. இனியாவது ஈழப்பிரச்சினையில் தமிழக அரசியல் தலை

# ஐ.நா. மேற்பார்வையில் பொதுவாக்கெடுப்பு

அனைத்துக் கட்சி நாடாளுமன்ற குழுவின் 71 எம்.பி.க்களும் பிரித்தானிய தமிழர் பேரவையின் 20 பேரும், தமிழகம் உட்பட உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் 40 பேரும் இதில் கலந்து கொண்டனர்.

தமிழகத்திலிருந்து தி.மு.க சார்பாக ஸ்டாலின், டி.ஆர்.பாலு, டி.கே.எஸ்., இளங்கோவன், ராதாகிருஷ்ணன், பா.ம.க.வில் கோ.க.மணி, விடுதலைச் சிறுத்தைகள் திருமாவளவன், சி.பி.ஐ. டி.ராஜா, தா.பாண்டியன், புதிய தமிழகம் கிருஷ்ணசாமி, இந்து மக்கள் கட்சி அர்ஜுன் சம்பத், மே-17 இயக்கத்தின் திருமுருகன்காந்தி, நாம் தமிழர்

-நக்கீரன்-

கட்சி அய்யநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி எம்.பி. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் பல அமர்வுகள் மூலம் இலங்கையின் போர்க் குற்றங்கள் பற்றி விவாதிக்கப்பட்டன. முதல் நாளில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஜெனிவாவில் இருந்து ஸ்டாலினும் பாலுவும்

இணைக்க வேண்டும்" என்று திருத்தம் சொல்ல, அனை வரும் ஆமோதித்தனர். அதன்படி திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

அதேபோல "உலகத்தில் எத்தனையோ போர் நடந்திருக்கிறது. போரின்போது ம்போருக்கு பிறகும் யுத்தம் நடந்த பகுதிகளுக்கு சர்வதேச ஊடகங்கள் அனுமதிக்கப்பட்டன. ஆனால், இலங்கையில் மட்டும் அது இன்னமும் நடக்கவில்லை. அதனால், இலங்கையின் வடக்கு- கிழக்கு பிரதேசங்களில் சர்வதேச ஊடகங்களை அனுமதிக்க வேண்டும் என்பதையும் தீர்மானத்தில் சேர்க்கலாம்" என்று தா. பாண்டியன் திருத்தம் சொல்ல, அதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் இறுதி வடிவம் பெற்றது.

பிரித்தானிய தமிழர் பேரவையின் நிகழ்ச்சி ஏற்பாட்டு ஒருங்கிணைப்பாளர் கவிராஜ் மற்றும் பிரித்தானிய தமிழர் பேரவையின் பேச்சாளர் சாம் கிருஷ்ணாவிடம் தொடர்பு கொண்டு பேசியபோது, "இங்கிலாந்து நாடாளுமன்றத் தின் முக்கிய கட்டடத்தில் மாநாடு தொடங்கியது. இந்த மாநாட்டை தமிழர்களுக்கான அனைத்துக்

"இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் சேர்ந்து வாழ்வது சாத்தியமே இல்லை. அதனால் இலங்கை இனச்சிக்கலுக்கு ஒரே தீர்வு தமிழீழம்தான்" என்றார் அழுத்தமாக.

அர்ஜுன சம்பத், "இலங்கையை விட்டு உங்களுடைய பிரிட்டிஷ் அரசு அதிகாரத்தின்போது இலங்கையில் 3 ஆட்சிமுறை இருந்தது. அதில் இரண்டு ஆட்சி தமிழர்களிடமும் ஒரு ஆட்சி சிங்களவர்களிடமும் இருந்தன. ஆனால், இலங்கையை விட்டு நீங்கள் வெளியேறும்போது பெரும் பான்மையினரான தமிழர்களிடம் இலங்கையை ஒப்படைக்காமல் சிங்களவர்களிடம் ஒப்படைத்து விட்டுப் போனீர்கள். அதன்விளைவு இன்றைக்கு ஒன்றரை இலட்சத்துக்கும் மேலான தமிழர்களின் படுகொலை. மனித உரிமை பேசும் மண்ணில் இருந்து கேட்கிறேன்... நீங்கள் செய்த தவறுக்கு பிராயசித்தமாக தனி ஈழத்தை அங்கீகரிக்கும் முயற்சியை மேற்கொள்ளுங்கள்" என்றார். இத்தகைய கருத்துக்கள் இங்கிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களால் உற்று கவனிக்கப்பட்டன.

புறம் ஸ்டாலினை சூழ்ந்துகொண்ட புலம்பெயர்ந்த தமிழர்கள், போர் உச்சக்கட்டத்தில் இருந்தபோது தி.மு.க.




அமைதியாக இருந்தது பற்றி தங்களின் அதிருப்திகளை வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தனர். இதனால் பிரித்தானிய தமிழர் பேரவையினர் ஏற்பாடு செய்திருந்த விருந்து நிகழ்ச்சியை ஸ்டாலினும் பாலுவும் புறக்கணித்தனர். விருந்தின்போதும் பலரும் தங்களது கருத்துக்களை புலம்பெயர்ந்த தமிழர்களோடு பகிர்ந்து கொண்டனர். அப்போது திருமா. "காங்கிரசையும் தி.மு.க.வை

வர்கள் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்பதுதான் புலம்பெயர்ந்த தமிழர்களிடமும் இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் ஆதங்கமாக வெளிப்பட்டது என்கின்றனர்.

# வலியுறுத்தினார் மு.க.ஸ்டாலின்

இலங்கையில் நடந்த முப்பது ஆண்டுகால விடுதலைப் போராட்டத்தினை ஒரு பயங்கரவாத செயலாகவே கவனித்த சர்வதேச நாடுகள், அது பயங்கரவாதம் அல்ல. ஒரு இனத்திற்கான விடுதலைப் போராட்டம்தான் என தற்போது உணரத் தொடங்கியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஒரு பாதுகாப்பான நாடு என்பது சர்வதேசத்திற்கு தெரியும்

## புகலிட கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்ப இதுவே காரணம் என்கிறார் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

இலங்கை ஒரு பாதுகாப்பான நாடு என்பதை ஏற்றுக் கொண்டுள்ளதாலேயே இலங்கையில் இருந்து தஞ்சம் கோரிச் செல்வோரை சர்வதேச நாடுகள் திருப்பியனுப்ப நடவடிக்கை எடுத்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்ட இரண்டாவது வாசிப்பு மீதான ஆறாவது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நல்லுறவு மிகுந்த ஆரோக்கியத்துடன் தொடர்வதாகவும் இது சீனாவுடனான இலங்கையின் நல்லுறவை எவ்விதத்திலும் பாதிக்காது எனவும் குறிப்பிட்டார்.

பிரித்தானியா, சுவிட்சர்லாந்து உட்பட பல்வேறு நாடுகள் பெரும் எண்ணிக்கையான இலங்கையர்களை திருப்பியனுப்பியுள்ளன. இலங்கை பாதுகாப்பான நாடு என்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாலேயே அந்த நாடுகள் இலங்கையர்களைத் திருப்பியனுப்பி வருகின்றன.

இலங்கையில் சமாதானத்தையும் நிலைப்புத் தன்மையையும் உறுதிப்படுத்த அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகளை பல வெளிநாடுகள் வரவேற்று பாராட்டியுள்ளன. இலங்கை பாதுகாப்பான அமைதி நிலவும் நாடு என்பதையும் அந்நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

இதனாலேயே பல நாடுகளிலிருந்து இலங்கையர்கள் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். இவ்வாறு நாடு திருப்பும் நடவடிக்கைகளுக்கு எதிராக சில சக்திகள் அந்நாடுகளின் நீதிமன்றம் சென்றன. எனினும் அதனை ஏற்றுக் கொள்ளாத அந்நாடுகள் இலங்கையானது மக்கள் வாழ்வதற்கு ஏற்ற பாதுகாப்பான நாடு.

எனவே, சட்ட விரோதமாகத் தங்கியிருக்கும் இலங்கையர்கள் நாட்டுக்குத் திருப்பியனுப்பப்பட வேண்டும் என அறிவித்தன.

அதேபோல் சட்ட விரோதமாகப் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குச் செல்பவர்களைத் தடுப்பதற்கு அவுஸ்திரேலியாவுடன் இணைந்து நாம் செயற்பட்டு வருகின்றோம். புகலிடக் கோரிக்கை நடைமுறைகள் நிராகரிக்கப்பட்டவர்களை நாட்டுக்குத் திருப்பியனுப்புமாறு அந்நாட்டுக்கு நாம் கூறியுள்ளோம்.

இவ்வாறான கடும் நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் சட்ட விரோத புகலிடக் கோரிக்கையாளர்களைத் தடுக்க முடியாது என்பதையும் அவுஸ்திரேலிய அரசுக்கு நாம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

சட்ட விரோத படகுகளில் செல்பவர்களைத் தடுப்பதற்கும் கடல் மார்க்கமான கடத்தல்களையும் தடுப்பதற்கும் இலங்கை கடற்படையினர் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளை எமது பிராந்திய நாடுகள் வரவேற்றுள்ளன.

இலங்கை இந்தியாவுடன் கொண்டிருக்கும் உறவு தொடர்பில் லக்ஷ்மன் கிரியல்ல எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர், இலங்கை, இந்தியா உள்ளிட்ட பிராந்திய நாடுகளுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ளது. இந்தியாவுடன் இலங்கைக்குக் காணப்படும் உறவானது சீனாவுடனான நட்புறவுக்கு எவ்வகையிலும் பாதிப்பினை ஏற்படுத்தாது என்றார்.

30 வருடங்களுக்கு அதிகமாகத் தொடர்ந்து யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு சமாதானமும் நிலைப்புத் தன்மையும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் சூழ்நிலையில் இதனை மேலும் பலப்படுத்தும் வகையிலேயே பொருளாதார இராஜதந்திர நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கையின் நிதிக் கொள்கைகளை பல்வேறு சர்வதேச நாடுகள் பாராட்டியுள்ளன என்றார். (அ-2)

# நீதியரசருக்கு எதிரான தீர்மானத்தை பொதுநலவாய நாடுகள் கவனிக்கின்றன

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து பொதுநலவாய நாடுகள் அமைப்பு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் சர்வதேசம் கூர்ந்து அவதானித்து வருவதாக பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை பாதுகாக்க வேண்டும் என்பதில் தாம் கவனம் செலுத்தி வருவதாகவும் நாட்டின் ஜனநாயகப் பொறிமுறையை வலுப்படுத்த நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத்தன்மை முக்கியமானது என பொதுநலவாய நாடுகள் அமைப்பு கருதுவதாகவும் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

அத்துடன் அனைத்து உறுப்பு நாடுகளும் உலகளவில் ஜனநாயகத்தை மேம்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-11)




★ 1421-நெதர்லாந்தில் கடல் தடுப்புச் சுவர் ஒன்று இடிந்து வெள்ளம் பரவியதில் 10 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

★ 1477-இங்கிலாந்தில் அச்சியந்திர சாலையில் அச்சிடப்பட்ட முதலாவது நூலான Dictes Sayengis of the Philosophres வில்லியம் கக்ஸ்டன் என்பவரால் வெளியிடப்பட்டது.

★ 1493- புவேர்ட்டோ ரிக்கோ என்றழைக்கப்படும் நாட்டை முதன் முறையாகக் கொலம்பஸ் கண்ணுற்றார்.

★ 1626-புனித பீற்றர் பசிலிக்கா தேவாலயம் ரோம் நகரில் திறந்து வைக்கப்பட்டது.

★ 1803-கெயிட்டி புரட்சியின் கடைசிப் பெரும் போர் இடம்பெற்றது. இது கெயிட்டி குடியரசு என்ற மேற்கு அரைக்கோளத்தின் முதலாவது கறுப்பினக் குடியரசு அமைக்கப்பட வழிவகுத்தது.

★ 1863-டென்மார்க்கின் ஒன்பதாம் கிறிஸ்டியன் ஷ்லெஸ்விக் நகரம் டென்மார்க்குக்குச் சொந்தம் என அறிவிக்கும் சட்ட மூலத்துக்கு ஒப்பமிட்டான். இது 1864 இல் ஜேர்மன்- டென்மார்க் போர் ஏற்பட வழிவகுத்தது.

★ 1883-கனடாவும் ஐக்கிய அமெரிக்காவும் ஒரே நேர எல்லைகளை வகுத்துக் கொண்டன.

★ 1903-பனாமா கால்வாய்க்கு தனிப்பட்ட உரிமையை ஐக்கிய அமெரிக்காவுக்கு வழங்கும் உடன்பாடு பனாமாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டது.

★ 1909-நிக்கராகுவாவில் இரண்டு அமெரிக்கர்கள் உட்பட 500 புரட்சியாளர்கள் அரசுப்படையினால் கொல்லப்பட்டதை அடுத்து ஐக்கிய அமெரிக்கா இரண்டு போர்க்கப்பல்களை அந்நாட்டுக்கு அனுப்பியது.

★ 1918-லாத்வியா ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1926-ஜோர்ஜ் பேர்னாட் ஷா தனக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசுப் பணத்தை ஏற்க மறுத்தார்.

★ 1943-உக்ரேனில் லூவிவ் என்ற இடத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த 6 ஆயிரம் யூதர்கள் நாசிப் படைகளினால் கொல்லப்பட்டனர்.

★ 1978-கயானாவில் ஜிம் ஜோன்ஸ் என்பவரின் மக்கள் கோயிலில் இடம்பெற்ற கொலை மற்றும் தற்கொலை நிகழ்வுகளில் 270 குழந்தைகள் உட்பட 918 பேர் மரணமடைந்தனர்.

★ 1989-கோவெ செய்மதி விண்வெளிக்கு ஏவப்பட்டது.

**பிறப்புக்கள்**

★ 1923-அலன் ஷெப்பர்ட், விண்வெளிக்குச் சென்ற முதலாவது அமெரிக்கர் (இ.1998)

★ **1945-மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையின் 6 ஆவது ஜனாதிபதி**

**இறப்புக்கள்**

★ 1936-வ.உ.சிதம்பரம்பிள்ளை, கப்பலோட்டிய தமிழன் (பி.1872)

★ 1952-போல் எல்யூவார், பிரெஞ்சுக் கவிஞர் (பி.1895)

★ 1962-நீல்ஸ் போர், இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1885)

**மஹிந்த ராஜபக்ஷ**



பேர்சி மகேந்திர ராஜபக்ஷ அல்லது சுருக்கமாக மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் ஆறாவது ஜனாதிபதியும் வழக்கறிஞருமாவார். இவர் 1970 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு முதன் முதலாகத் தெரிவு செய்யப்பட்டார். 2004 ஆம் ஆண்டு 6 ஆம் திகதி முதல் பிரதம மந்திரியாக இருந்தார்.

இலங்கையின் ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதியாக 2005 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் திகதி அன்று பதவியேற்றார். இவர் இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவராவார்.

**குடும்ப வாழ்க்கை**

ஷிராந்தி ராஜபக்ஷ இவரின் மனைவியாவார். இவருக்கு 3 ஆண் பிள்ளைகள் உள்ளனர். நாமல் ராஜபக்ஷ, யோசித்தா ராஜபக்ஷ, ரோகித ராஜபக்ஷ ஆகியோராவர்.

**கௌரவ விருதுகள்**

பாலஸ்தீனத்துடனான ஒருமைப்பாட்டிற்கான இலங்கை சபையின் தலைவர். மல்வத்தை பீடத்தினால் ஸ்ரீரோகண ஜனரஞ்சக என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

# காரைநகரில் குழாய் கிணறுகள் அமைக்க 10 இலட்சம் ஒதுக்கீடு

(கொழும்பு)

காரைநகரில் குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக காரைநகர் பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவர் வீ.கண்ணன் தெரிவித்துள்ளார். காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் அதிகமாக தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் பொது இடங்களை நேரில் சென்று பார்வையிட்ட அவர் மேற்படி இடங்களில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இக் குழாய்கிணறுகள் மாகாண அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதித் திட்டத்தின் கீழ் 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 14 குழாய்க்கிணறுகள் கட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அரச ஊழியர்களுக்கான வாகனத் தடை நீக்கம்

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை விற்பனை செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் அரசாங்க ஊழியர்களுக்கு விசேடமாக வழங்கப்படும் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரத்தை மூன்று வருடங்கள் வரையில் விற்பனை செய்ய முடியாது. இந்த தடை உத்தரவு நேற்று முன்தினம் தொடக்கம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அரசாங்க ஊழியர்களுக்கு சொந்தமான வாகனங்களை வேறு நபர்களுக்கு சுலபமாக விற்பனை செய்ய முடியும்.

ஏற்கனவே அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டோரும் புதிய சட்டத்தின்படி வாகனங்களை விற்பனை செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் அராஜகத்தை ஐ.நா. கண்டுகொள்ளவில்லை

## மக்கள் கொல்லப்பட இதுவே காரணம் என்கிறார் ரோஹித



ஐக்கிய நாடுகள் அமைப்பின் மெத்தனப் போக்கினால் பெருமளவு பொதுமக்கள் உயிரிழக்க நேரிட்டது என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த பொகொல்லாகம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் அமைப்பு உரிய முறையில் தமது கடமையை செய்திருந்தால் பெருமளவான பொதுமக்கள் உயிரிழப்புக்களை தடுத்திருக்கலாம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பொதுமக்களை மனித கேடயங்களாக பயன்படுத்திக் கொண்டதாக குற்றம் சுமத்தியுள்ளார். 2007 ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த உத்தியை பயன்படுத்திக் கொண்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த தந்திரோபாயம் பற்றி ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிந்திருந்த போதிலும் உரிய நடவடிக்கையை எடுக்க தவறியது.

தமிழீழ விடுதலைப்புலிகள் சட்டவிரோதமான முறையில் பொதுமக்களை தடுத்து வைத்திருக்கின்றார்கள் என்ற அரசாங்கத்தின் முறைப்பாட்டை ஐக்கிய நாடுகள் அமைப்பு கவனத்திற் கொள்ள தவறியது. தமிழீழ விடுதலைப்புலிகள் ஐக்கிய நாடுகள் பணியாளர்களை கடத்திச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் எவ்ரும் அதற்கு கண்டனம் வெளியிடவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)



கொழும்பு துறைமுகத்தில் ஐந்நூறு மில்லியன் ரூபா பெறுமதியான போதைப் பொருட்களுடன் 8 கொள்கலன்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இக்கொள்கலன்கள் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. சுங்க அதிகாரிகளால் கைப்பற்றபட்டவை 80 ஆயிரம் கிலோகிராம் நிறை கொண்டவை எனவும் இந்திய தயாரிப்பிலான பான்பராக் வகை போதைப் பொருட்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# சமுர்த்தி வங்கி பணத்தில் அரசாங்கம் கை வைக்காது

## பிரதியமைச்சர் யாப்பா தெரிவிப்பு

சமுர்த்தி வங்கிகளில் சமுர்த்தி உதவியாளர்கள் மூலம் வைப்பிலிடப்படும் பணம் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதுடன் அரசாங்கம் அதில் கை வைக்கமாட்டாது என பிரதியமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஐ.தே.க. எம்.பி. சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே பிரதியமைச்சர் இதனைத் தெரிவித் தார்.

இது தொடர்பில் பிரதியமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

வைப்பிலிடுதல் ஊக்குவிக்கப்பட்டு வருவதுடன் அவர்கள் சுயதொழில் செய்வதற்காக மீள அதனைக் கோரும் போது 100 வீதம் அதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

அதேபோன்று சமுர்த்தி உதவி பெறத் தகுதியுள்ளோர் எவரையும் அத்திட்டத்திலிருந்து நீக்குவது அரசாங்கத்தின் நோக்கமல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டு வரை சமுர்த்தி வங்கிகள் மூலம் சமுர்த்தி உதவியாளர்களால் 343 மில்லியன் ரூபா சேமிக்கப்பட்டுள்ளது. அவர்களின் மருத்துவத் தேவைகள், பிள்ளைகளின் கல்வி மேம்பாடு உட்பட முக்கிய விடயங்களுக்காக அவர்கள் இந்தப் பணத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனை அவர்களது உறவினர்கள் அநாவசிய காரணங்களுக்காக கோரும் பட்சத்தில் இப்பணத்தை மீள வழங்கக் கூடாது என்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது.

சமுர்த்தி உதவியாளர்களின் தொகை மற்றும் அவர்களின் வைப்புப் பணம் சம்பந்தமாக பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்படுகின்ற போதும் அரசாங்கம் இது விடயத்தில் மிக கவனமாகச் செயற்படுகிறது. (அ-2)

# விடுதலை தொடர்பான நிபந்தனைகள் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை

## சரத் பொன்சேகா கவலை

(கொழும்பு)

விடுதலை தொடர்பான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்வது தொடர்பிலான பேச்சுவார்த்தைகளை பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் மேற்கொண்டிருந்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது சிவில் உரிமைகளை மீள வழங்குதல், இராணுவ கௌரவங்களை மீள அளித்தல் உள்ளிட்ட சில நிபந்தனைகளை தாம் விதித்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிபந்தனை தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சவார்த்தை நடத்தியதாகவே டிரான் அலஸ் தம்மிடம் தெரிவித்தார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இந்த நிபந்தனைகள் இதுவரை பூர்த்திசெய்யப்படவில்லை. தம்மிடமிருந்து பறிக்கப்பட்ட அனைத்தையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீளளிக்க வேண்டும். இராணுவப்பதவிகள், பதக்கங்கள், ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்தையும் மீள அளிக்க வேண்டும்.

தமக்கு விதிக்கப்பட்ட அனைத்து தண்டனைகளையும் வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு கோரியிருந்ததாக குறிப்பிட்டுள்ளார். இந்த நிபந்தனைகளின் அடிப்படையிலேயே டிரான் அலஸ் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

தம்மை விடுதலை செய்வதற்காக டிரான் அலஸ் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளதாகவும் சில நிபந்தனைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலைமை ஏற்பட் டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# ஆஸியிலிருந்து மேலும் 8 அகதிகள் நாடு திரும்பினர்

படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு சென்று புகலிடம் கோரிய 8 இலங்கை அகதிகள் சுயவிருப்பில் மீண்டும் நாடு திரும்ப இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதன்படி நவுறு முகாமில் உள்ள 5 பேருடன் சேர்த்து 8 இலங்கை அகதிகள் நேற்று முன்தினம் இரவு அவுஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய குடிவரவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடு திரும்பும் முடிவை இவர்கள் தனிப்பட்ட ரீதியில் மேற்கொண்டதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நவுறு தீவுக்கு அனுப்பப்பட்ட இலங்கை அகதிகள் தொடர்ந்தும் சுயவிருப்பில் நாடு திரும்ப முன்வருகின்றமை அவுஸ்திரேலியா ஆட்கடத்தல்காரர்களை ஊக்குவிக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது என அவுஸ்திரேலிய குடிவரவு திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-2)

# காவலாளி கொலை

கம்பளை நகர் சுதந்திரம மாவத்தையில் உள்ள காப்புறுதி நிறுவனம் ஒன்றின் காவலாளி இனந்தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது. இது குறித்து கம்பளை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. காமினி சேன ராஜபக்ஷ என்ற 50 வயதுடைய நபரே கொலை செய்யப்பட்டவராவார்.

இவரது சடலம் சம்பவ இடத்திலேயே வைக்கப்பட்டுள்ளது. கம்பளை நீதவான் மரண விசாரணைகளை ஆரம்பித்துள்ளார். (அ-2)

மணமகன், மணமகள்
1000 பதிவுகளை நோக்கி



கல்யாணமாலை
KALYANA MALAI
( சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(பழைய எக்ஸ்போ எயார் விமான சேவை அலுவலகம்)
எனும் முகவரியில் இயங்குகிறது



சமய, சமூக வேறுபாடின்றி பதிவுகள் நடந்தவண்ணமுள்ளன.
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே...!
செவ்வாய்க்கிழமைகளில் விடுமுறை
குறிப்பு: பதிவை மேற்கொள்ளும் போது சாதகம், போட்டோ என்பன அவசியம்திருமண தரகர்கள் பதிவு செய்ய முடியாது.
தொடர்பு:-021 720 1005
E-mail: kalyanamalai.jaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தீனத்தை தனிநாடாக்க ஐ.நா.சபையில் வாக்கெடுப்பு?

பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கும் பிரேரணை ஐ.நா.சபையில் வாக்கெடுப்புக்கு வருகின்றது.

இந்நிலையில் பாலஸ்தீனத்தின் 156 போராளிகளின் தளங்கள் மீது இஸ்ரேல் வான்வெளித்தாக்குதலை மேற்கொண்டதில் சிறுவர்கள் உட்பட பாலஸ்தீனியர்கள் பலியானதாக கூறப்படுகின்றது. மேலும் ஹமால் இயக்க இராணுவத்தலைவர் அகமட் அல் ஜபரி உம் இன்னும் இரு வீரர்களும் பலியாகியுள்ளனர்.

இதேவேளை ஆபரேசன் பில்லார் ஆஃப்டிஃ பென்ஸ் எனப்படும் ஹமாஸ் இயக்கத்தினரின் தாக்குதலில் இதுவரை மொத்தம் 245 ரொக்கெட்டுக்கள் இஸ்ரேலின் மீது பாய்ந்துள்ளன.

இதற்கிடையில் எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கும் பிரேரணை ஐ.நா. சபையில் வாக்கெடுப்புக்கு வருகின்றது.

எனவே பாலஸ்தீனம் மீது தாக்குதலை இஸ்ரேல் அதிகப்படுத்துவது மத்திய கிழக்கில் மறுபடியும் அமைதியின்மையை கொண்டு வருவதற்கே என உலக நாடுகள் கருதுகின்றன.

மேலும் பராக் ஒபாமா மீண்டும் ஜனாதிபதியானதால் இஸ்ரேலுக்கு அமெரிக்காவின் ஆதரவும் குறைந்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பாக்.இராணுவ வீரருக்கு மரணதண்டனை விதிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சக வீரரை கொலை செய்த குற்றத்திற்காக இராணுவ வீரர் ஒருவக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் சர்கொதா மாவட்டத்தில் உள்ளது ஷாஹிவல் பகுதி. இங்கு வசித்த இராணுவ வீரர் ஹவில் தார் காதி உசைன் என்பவர் கடந்த 2008 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் அவருடன் பணிபுரிந்த சக வீரர் முகமது உசைன் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்து வந்த நீதிமன்றம் கடந்த 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முகமது உசைனுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இதனையடுத்து ஜனாதிபதி இராணுவ தலைவருக்கு முகமது உசைன் அனுப்பிய கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இதனை தொடர்ந்து மியான்வாலி சிறையில் நேற்று முன்தினம் காலை முகமது உசைன் தூக்கிலிடப்பட்டார்.

பின்னர் அவரது உடலை உறவினர்களிடம் சிறை அதிகாரிகள் ஒப்படைத்தனர். (அ-2)

## ஜப்பான் பாராளுமன்றம் கலைப்பு; எதிர்வரும் டிசெம்பரில் தேர்தல்

ஜப்பான் நாட்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்டு டிசெம்பர் மாதம் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் ஜனநாயக கட்சி தலைமையிலான கூட்டணி ஆட்சியில் உள்ளது. அணுசக்தி நிலையங்களை மூடுதல், சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு உரிய நிவாரணம் அளிக்காதது உள்ளிட்ட பிரச்சினைகளால் எதிர்க்கட்சியினர் தொடர்ந்து புகார் கூறி வந்தனர்.

நாளுக்கு நாள் பிரச்சினை வலுத்து வந்ததால் ஜப்பான் பிரதமர் யோஷி ஹிகோ நோடா பாராளுமன்றை கலைக்கப்போவதாக எச்சித்தார். இதன்படி நேற்று முன்திணம்பாராளுமன்றின் கீழ்சபை கலைக்கப்பட்டது. அடுத்த மாதம் 16 ஆம் திகதி தேர்தல் நடக்கவுள்ளது. இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது. (அ-2)

## இந்தியாவுடன் உறவை நீடிக்க ஜப்பான் விருப்பம்

இந்தியா மற்றும் ஜப்பான் இடையே கனிம இறக்குமதி மற்றும் சமூக பாதுகாப்பு ஆகிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

பிரதமர் மன்மோகன் சிங் தனது ஜப்பான் பயணத்தை இரத்து செய்துள்ள நிலையில் அந்நாட்டின் தலைநகர் டோக்கியோவில் ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சர் கோசிரோ ஜெம்பா மற்றும் ஜப்பானுக்கான இந்திய தூதர் தீபா வாத்வா இடையே இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்த ஒப்பந்தத்தின்படி இந்தியாவிலிருந்து ஆண்டுக்கு 4 ஆயிரம் தொன் கனிமங்கள் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படும். தற்போது இந்த கனிமங்கள் சீனாவிலிருந்து ஜப்பான் இறக் குமதி செய்து வருகிறது. இதன்மூலம் சீனா இறக்குமதியை தவிர்த்து இந்தியாவுடன் உறவை நீட்டிக்க ஜப்பான் விரும்புகிறது. மேலும் இந்த கனிமங்கள் மூலம் மொபைல் போன்களுக்கான உதிரிப் பாகங்கள், ஹைபிரிட் காகள் மற்றும் ஏவுகணைகளை கண்காணிக்கும் அமைப்பு உள்ளிட்ட பொருட்களை தயாரிக்க முடியும்.

அடுத்ததாக சமூக நல ஒப்பந்தத்தின்படி இரு நாடுகளிலும் தங்கி வேலைபார்த்து வரும் 30 ஆயிரம் தொழிலாளர்கள் பயன்பெறுவர். (அ-2)

## இந்திய மீனவர்களை விடுவித்தது பாகிஸ்தான்

பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட குஜராத் மீனவர்கள் 15 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு குஜராத் மாநிலத்தை சேர்ந்த 15 மீனவர்கள் பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடித்ததாக அந்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர்கள் பாகிஸ்தானின் கராச்சி சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த ஞாயிறன்று விடுதலை செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. இதையடுத்து 9 மாத சிறைவாசத்திற்கு பின்பு விடுதலை செய்யப்பட்டு நேற்று முன்தினம் குஜராத் திரும்பினர். (அ-2)


மீண்டும் மலரும்

'பரமேஸ்வரா வித்தியாலயம்'

2012.11.19



மெஞ்ஞானியும் அதியுயர்ந்த சமூக சீர்திருத்தவாதியும்
இலங்கையின் மாபெரும் தலைவருமாகிய
சேர்.பொன்னம்பலம் இராமநாதனுக்கு
நினைவு தினப் பரிசு

நிகழ்ச்சி நிரல்

காலை : 7.30 - 8.30
யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் பூசை/வழிபாடு
காலை : 8.45
சேர்.பொன் இராமநாதனின் திருவுருவ அலங்காரப் பூசை
காலை : 9.00- 10.00 யாழ்.பல்கலைக்கழகத்தில் கூட்டம்

தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில்
யா/திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை
'பரமேஸ்வரா வித்தியாலயம்' எனப் பெயர் சூட்டல்

பிரதம அதிதி:
திரு.சி.சத்தியசீலன் செயலாளர், மாகாணக் கல்வி அமைச்சு
வடக்குமாகாணம்.

பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர்களும் ஏனைய நலன் விரும்பிகளும் தவறாமல் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு இத்தால் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

பரமேஸ்வராக் கல்லூரி, ப.மா.ச (இ த.பேரின்பநாயகம், தலைவர்.



பெயர் சூட்டும் விழா

அழைப்பிதழ்




யா/ திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு

யா/பரமேஸ்வரா வித்தியாலயம்

எனப் பெயர் சூட்டும் நிகழ்வு

காலம் : 19.11.2012 (திங்கட்கிழமை)
நேரம் : முற்பகல் 11 மணி
இடம் : யா/திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

தலைவர் : திரு.ந.விஜயசுந்தரம் (அதிபர்)

பிரதம விருந்தினர் : திரு.ச.சத்தியசீலன் (செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாணம்)

சிறப்பு விருந்தினர்கள் :
- திரு.ப.விக்கினேஸ்வரன் (பிரதிச் செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாணம்)
- திரு.வை.செல்வராசா (மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்)
- திரு.எஸ்.உதயகுமார் (வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
- திரு.ச.பேரின்பநாயகம் (ஓய்வுபெற்ற பிரதிப்பொலிஸ்மா அதிபர், தலைவர் - ப.மா.சங்கம், யா/பரமேஸ்வராக் கல்லூரி, கொழும்பு)

கௌரவ விருந்தினர்கள் :
- திரு.எஸ்.மாணிக்கராசா (கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்)
- திரு.கனக.நமநாதன் (சட்டத்தரணி, தலைவர் - ப.மா.சங்கம், யா/பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்)
- திரு.ச.முத்துலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், தலைவர்- இந்து வாலிபர் சங்கம், திருநெல்வேலி)
- திரு.வ.குலத்துங்கன் (செயலாளர் - ப.மா.சங்கம் , திருநெல்வேலி இ.த.க.பாடசாலை)

நிகழ்ச்சிகள்
- இறைவணக்கம்
- மங்கள விளக்கேற்றல்
- மங்கள இசை
- பெயர் சூட்டல் : பிரதம விருந்தினர்
- வரவேற்புரை : திரு.த.கணநாதலிங்கம் (ஓய்வு பெற்ற பணிப்பாளர் சுங்கத் திணைக்களம்) சிரேஷ்ட உபதலைவர், ப.மா.சங்கம் - யா/பரமேஸ்வராக் கல்லூரி .கொழும்பு
- ஆசியுரை : நல்லை ஆதீன குருமுதல்வர்
- தலைமையுரை
- விருந்தினர் உரை
- நன்றியுரை திரு.த.ஆனந்தநடராஜா (பா.அ.சங்கம் - யா/திருநெல்வேலி இ.த.க.பாடசாலை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம், (இ பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# துப்பாக்கி

## திரை விமர்சனம்

கேப்டன் விஜயகாந், ஆக்ஷன் கிங் அர்ஜீன் பாணியில் இளையதளபதி விஜய் ஓர் நேர்மையான இராணுவ வீரராக, இந்திய தேசத்தை காக்க களம் இறங்கி இருக்கும் படம்தான் துப்பாக்கி!

ஆனால் கேப்டன் ஆக்ஷன் கிங் பாணியில் அரைத்த மாவையே... இல்ல, அழித்த தீவிரவாதிக ளயே மீண்டும் மீண்டும் அழிக்காமல், எய்தவன் இருக்க அம்பை நோவ தேன்,... எனும் எக்காலத்திற்கும் ஏற்ற பழமொழிக்கேற்ப, ஸ்லிப்பர் செல்ஸ் எனப்படும் தீவிரவாதத்தில் ஈடுபடும் கூலிகளை மட்டுமன்றி அவர்களது பாஸையே பந்தாடுவதும், இந்திய இராணுவத்தில் சக வீரர்களுக்கே தெரியாமல் உளவுப்பிரிவிலும் முக்கிய பொறுப்பில் இருப்பதும் அந்த பொறுப்பை பயன்படுத்தி லீவிற்கு ஊருக்கு வரும் விஜய், மும்பையின் பல்வேறு இடங்களை தாக்க வரும் தீவிரவாதிகளை மிலிட்டரி நண்பர்கள் உதவியுடன் ஒற்றை ஆளாக ஒழித்து கட்டுவதுடன் ஒன்மேன் ஆர்மியாக செயல்பட்டு அவர்களது தலையாக செயல்படும் மூளையின் தலைமையிடத்தையும் ஒற்றை துப்பாக்கி, கொஞ்சம் வெடிமருந்துகளுடன் தகர்த்தெறிவதும் தான் துப்பாக்கி படத்தின் புதுமை!

இராணுவ வீரராக விஜய், புதிய கெட்-அப்பில் கச்சிதமாக பொருந்தி நடித்திருக்கிறார். கேம்பில் சக வீரர்களோடும் சொந்த ஊர் திரும்பியதும் பொலிஸ் நண்பன் சத்யனோடும் விஜய் பண்ணும் காமெடிகள் கலாட்டா. நாட்டை காட்டிக் கொடுக்கும் அதிகார துரோகிகள் முன் 2 துப்பாக்கிகளை வைத்து இது லோக்கல் இது என்னோடது. இந்த லோக்கல் துப்பாக்கியால் நீயா சுட்டுக்கிட்டா, அது தற்கொலை, உன் பிள்ளைக்கு வேலை பொண்டாட்டிக்கு பென்ஷன் எல்லாம் கிடைக்கும். அதுவே நான் சுட்டு செத்தா உன் குடும்பமே நடுத் தெருவுக்கு வரும்... என்று பன்ச் டயலாக் பேசியபடி அவர்களை தீர்த்து கட்டுவதில் அதிரடி விஜய் அலட்டல் இல்லாமல் தெரிகிறார் பலே பலே! அதேமாதிரி காஜல் அகர்வாலிடம் எனக்கு தம் அடிக்கிற பொண்ணுங்களைத் தான்பிடிக்கும் என கலாய்க்கும் இடங்களில் ரொமான்டிக் விஜய்யும் தூள் பரத்துகிறார்.

விஜய் மாதிரியே காஜல் அகர்வாலும் காதல் அதிரடியாக பெண் பார்க்க யூனிபார்முடன் வரும் விஜய்யை பிடித்திருக்கிறது, பிடிக்கவில்லை என தொடர்ந்து கலாய்ப்பதில் தொடங்கி கவர்ச்சி கடலில் மூழ்கி முத்தெடுப்பது வரை... ரசிகர்களை தன் வலைக்குள் வீழ்த்தி விடுகிறார்.

சத்யனுக்கு சரிசமமாக காமெடியில் களை கட்டும் ஜெயராம், மும்பை பொலிஸாக, விஜய்யின் நண்பனாக வரும் சத்யன், வில்லன் வித்யூத் ஜம்வால் எல்லோரும் கச்சிதம்!

துப்பாக்கி படத்தின் மற்றுமொரு ஹீரோ சந்தோஷ் சிவனின் ஒளிப்பதிவு என்றால் மற்றொரு வில்லன் ஹாரீஸ் ஜெயராஜின் இசை என்று சொல்லி ஆக வேண்டும்! என்னாச்சு ஹாரீஸ்க்கு எந்த ஒரு பாடலும் மனதில் நிற்கவில்லையே?!


ஆக்ஷன் படங்கள் என்றாலே லாஜிக் மீறல்கள் இல்லாமலா...? ஏகப்பட்டது இருக்கிறது! அதிலும் இந்திய இராணுவத்தில் இருக்கும் ஓர் இளம் இராணுவ வீரர், சொந்த ஊரான மும்பைக்கு லீவிற்கு வருவதும், வந்த இடத்தில் அந்த ஊர் பொலிஸ்க்கு சட்டபடி தெரிவிக்காமலே, மொத்த தீவிரவாத கூட்டத்தையும் ஒழித்து கட்டுவதும் நம்பமுடியாத கதை தான்



என்றாலும், மும்பை தாக்குதலுக்கு முன் இப்படியும் நடந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே! என்று யோசிக்க வைக்கும் விதத்தில் இயக்குனர் ஏ. ஆர். முருகதாஸ் ஜெயித்திருக்கிறார். ஆக மொத்தத்தில் மிலிட்டரி மேஜிக் படமான துப்பாக்கி நிச்சயம் வெற்றி துப்பாக்கி!!




# நயன்தாராவின் புது அவதாரம்



ஸ்ரீராமராஜ்ஜியம் என்ற தெலுங்கு படத்தில், சீதை வேடத்தில், பவ்யமாக நடித்த நயன்தாரா, தற்போது ராணாவுடன் நடித்துள்ள, கிருஷ்ணம் வந்தே ஜெகத்குரும் என்ற படத்தில், கிளாமராக நடித்துள்ளார். இப்படம், ஓங்காரம் என்ற பெயர் மாற்றத்துடன் தமிழுக்கும் வர உள்ளது. இது பற்றி நயன்தாரா கூறும் போது, ஸ்ரீராமராஜ்ஜியம் படத்தில் சீதை வேடம் என்பதால், அந்த கேரக்டருக்கு ஏற்ப, மாறி நடித்தேன். ஆனால் சாதாரண மாடர்ன் கேரக்டர்கள் என்கிற போதும், முழுசாக போர்த்திக் கொண்டு நடித்தால், ரசிகர்களிடம் எடுபடாது. அதனால்தான் ராணாவுடன் நடித்த படத்தில் கதைக்கும் காட்சிக்கும் அவசியப்பட்ட இடங்களில் சற்று கிளாமராக நடித்தேன். மற்றப்படி, ஓவராக கிளாமர் காண்பிக்கவில்லை. தமிழிலும், அஜித்துடன் நடிக்கும் படம், ஆர்யாவுடன் நடிக்கும், ராஜாராணி படம் ஆகியவற்றில், ரசிக்கதத் தூண்டும் வகையில் கிளாமராக நடித்து வருகிறேன் என்கிறார்.

# கமலை அதிர்ச்சியடைய வைத்த விஜய்யின் துப்பாக்கி?



ஏ. ஆர். முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள துப்பாக்கி படம் தீவிரவாதிகளை மையப்படுத்தி உருவாக்கியுள்ளது. இதுபோலதான் கமல் இயக்கியுள்ள விஸ்வரூபம் படமும் உருவாகியுள்ளதாம். கதையோட்டம் வெவ்வேறு பாதைகள் என்றாலும் சேருமிடமும், கதையின் மையமும் ஒரே மாதிரியான தீர்வைத்தான் பிரதிபலிக்கின்றனவாம். அதிலும் துப்பாக்கி படத்தில் 12 ஸ்லிப்பர் செல்களையும் 12 பேர் சென்று சுட்டு வீழ்த்துவது போன்றொருகாட்சியும் கமல் படத்தில் உள்ளதாம். அதனால் துப்பாக்கி படத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளாராம் கமல். இதனால் தற்போது மொத்த படத்தையும் முடித்துவிட்ட அவர், அடுத்து என்னசெய்வதென்ற ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார். வேற மாதிரியான காட்சிகளை படமாக்கலாமா? என்று யோசித்துக்கொண்டிருக்கிறார். ஆனால், அவர்கள் 12 பேர் வெவ்வேறு இடங்களில் சென்று தானே ஸ்லீப்பர்செல்களை சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள். ஆனால் விஸ்வரூபத்தில் நாம் ஒரே பஸ்சுக்குள் அத்தனை பேரையும் சுட்டு வீழ்த்துவது போன்று தானேபடமாக்கியிருக்கிறோம். அதனால் காட்சியமைப்பு வேறு மாதிரியாகத்தானே இருக்கிறது என்று கமலின் டீமைச் சேர்ந்தவர்கள் கூறி வருகிறார்களாம். அதனால் முதலில் தடுமாறிய கமல், இப்போது எந்த வித மாற்றமும் செய்யவேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறாராம்.

# தபுவுக்கு இப்போது தான் காதல் வந்திருக்கிறதாம்



இதுநாள் வரை கல்யாணம் செய்து கொள்ளாமல் இருந்த தபுவுக்கு இப்போது காதல் வந்திருக்கிறதாம். அதுவும் வெளிநாட்டுக்காரருடன் பிரபல ஹாலிவுட் இயக்குனர் இந்திய பின்னணியில் இயக்கி வரும் படம் லைப் ஆப் பை. பெரும் பகுதி படப்பிடிப்பு பாண்டிச்சேரியில் தான் நடக்கிறது. இந்தப் படத்தில் முக்கிய கேரக்டரில் நடிக்கிறார் தபு.

ஏற்கனவே சில ஹாலிவுட் படங்களில் தபு நடித்திருந்தாலும் இந்தப் படம் தனக்கு பெரிய புகழை பெற்றுத் தரும் என்று நம்புகிறார். அந்த வாய்ப்பை கொடுத்த ஆங்லீயுடன்தான் எப்போதும் காணப்படுகிறார் தபு. படப்பிடிப்புகள் முடிந்து விட்டாலும் ஆங் லீ இந்தியாவில் தங்கியிருக்கும் காலத்தில் அவருடன்தான் நேரத்தை செலவிடுகிறார். ஆங் லீயும் எந்த நிகழ்ச்சியில் பேசினாலும் தபுவை பேரழகி என்றும் கனவு கன்னி என்றும் புகழ்ந்து தள்ளுகிறார். [illegible] பாலிவுட்டிலும் ஹாலிவுட்டிலும் [illegible].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விவகாரத்தில் தலையிடாத நாடுகளுடன் உறவை பேணுகிறோம்

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜெனீவாவில் எமக்கெதிராகக் கை உயர்த்திய நாடுகளுடன் கைகோர்த்துச் செல்ல வேண்டிய அவசியம் இலங்கைக்கு கிடையாது என அமைச்சர் விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

**பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது,**

இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடாத நாடுகளுடன் உறவுகளைப் பலப்படுத்திக் கொண்டு முன் செல்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

வங்குரோத்து நிலையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி வெளிநாட்டுத் தலையீடுகளை நாட்டுக்குள் ஏற்படுத்தி அரசியல் இலாபம் தேட முனைகிறது. வெள்ளையர்களை வைத்துக் கொண்டு இலங்கையின் பொருளாதாரத்திற்கான திட்டங்களை வகுத்த ஐ.தே.க. போன்று செயற்பட வேண்டிய தேவை எமது அரசாங்கத்துக்குக் கிடையாது.

பொருளாதார நோக்கு மற்றும் நிதிக் கொள்கை பற்றி விரிவாக ஆராய்ந்தே வரவு செலவுத் திட்டத்தை நாம் பார்க்க வேண்டும். ஆனால், எதிர்க்கட்சியினர் தமது பொருளாதாரக் கொள்கையில் இருந்தவாறு விவாதங்களை முன்வைக்கின்றனர்.

இந்த மகிந்த சிந்தனை மூலம் மக்களுக்கு வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்றும் வகையிலேயே இவ்வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை அறிந்து கொண்டே விவாதிக்க வேண்டும்.

ஜனாதிபதி அண்மையில் சீனா சென்றிருந்தபோது இலங்கையின் உற்பத்திகளை தமது சந்தைக்குக் கொண்டு வர வேண்டுமென கூறப்பட்டது.

சீனா ஒருபோதும் இலங்கையின் விடயத்தில் தலையிடுவதில்லை.

இதனை அந்நாடு பல தடவைகள் வலியுறுத்தியுள்ளது. சீனா இலங்கையை விழுங்கிவிட்டதாக முன்வைக்கப்படும் கூற்றுக்களில் உண்மை இல்லை. உள்நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடாத நாடுகளுடனேயே கூடுதலான தொடர்புகளைப் பேணி வருகின்றோம்.

இந்த நாட்டு மக்கள் வழங்கிய ஆணைக்கு அமையவே நாட்டின் பொருளாதாரத்தையும் நிதிக் கொள்கையையும் அரசாங்கம் முன்னெடுக்கும்.

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் பூர்த்தியடைந்திருக்கும் நிலையில் பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டே நிதிக் கொள்கைகள் அமுல்படுத்துகின்றன.

அபிவிருத்தியை நோக்கி அரசாங்கம் செல்லும் பயணத்தைப் புரிந்து கொள்ளாதே எதிர்க்கட்சிகள் அதனை விமர்ச்சிக்கின்றன. எனவே, எதிர்வரும் காலத்திலாவது இதனைப் புரிந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன் என்றார். (அ - 2)

## மக்களின் வருமான வழிகள் உறுதி செய்யப்படவில்லை

### யோகேஸ்வரன் எம்.பி

மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வருமான வழிகள் உறுதி செய்யப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களுக்கு வீடுகள் நிர்மாணிப்பதை விடுத்து அரசாங்கம் வடக்கு, கிழக்கில் இராணுவத்தினருக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்து வருகின்றது.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு எவ்வித நிவாரணங்களும் கிடையாது. மக்கள் வேலையில்லா பிரச்சினையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீள்குடியேற்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக் கூடிய திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை.

வடக்கு, கிழக்கு சமய தளங்களை அபிவிருத்தி செய்ய 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டமை, பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு அளிக்கத் தீர்மானித்துள்ளமை வரவேற்கப்பட வேண்டியது என யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (அ - 2)

# சப்புகஸ்கந்த வாயு கசிவு தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட வாயு கசிவு குறித்து விசேட விசாரணை நடத்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

விமான எண்ணெய் தயாரிப்பு பகுதியில் பணியில் இருந்தவேளை ஏற்பட்ட வாயு கசிவால் அதனை சுவாசித்து பாதிக்கப்பட்ட 9 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதில் இருவர் பலியானதோடு மேலும் 7 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வாயு கசிவு இடம்பெற்ற பகுதி வழமை நிலைக்குத் திரும்பியுள்ள சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய பணிப் பாளர் நீல் ஜயசேகர தெரிவித்தார்.

விபத்தில் பலியான இருவரது இறுதிக் கிரியைகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொள்ளவுள்ளது.

அத்துடன் சிகிச்சை பெற்று வருவோருக்கும் கூட்டுத்தாபனம் உதவிகளை செய்யவுள்ளது. (அ - 2)

# மதங்களை இழிவுபடுத்தும் பேஸ்புக் முடக்கப்படும்

(கொழும்பு)

மதங்களை இழிவுபடுத்தும் வகையிலான பேஸ்புக் கணக்குகளை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை கணனி அவசர சேவைப் பிரிவு தெரிவித்துள்ளது.

மதங்களை இழிவுபடுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட பேஸ்புக் கணக்குகள் தொடர்பில் பேஸ்புக் தலைமைக் காரியாலயத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் குறித்த கணக்குகளை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின் முக்கிய மதத் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், அரசியல்வாதிகள் ஆகியோருக்கு இழிவு ஏற்படும் வகையில் சில பேஸ்புக் கணக்குகளில் தகவல்கள் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் ஏற்கனவே முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. எதிர்காலத்தில் இவ்வாறு தனிப்பட்ட நபர்களையும், மதங்களையும் இழிவுபடுத்தும் பேஸ்புக் இணையக் கணக்குகள் முடக்கப்படும் என இலங்கை கணனி அவசர சேவைப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ - 2)



யாழ். எயிட் நிறுவனத்தின் ஏற்பாட்டில், யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கான பல்வேறு வகையான உதவிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதில் உதவிப் பொருட்களை பெற்றுக் கொண்ட மாணவர்கள் விருந்தினர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.

(படம் :- எஸ்.ஆர்.கரன்)

# ரூபவாஹினிக்கு 131 மில்லியன் நட்டம்

(கொழும்பு)

கார்ல்டன் நிறுவனத்திற்கு விளையாட்டு நிகழ்ச்சி தொடர்பான ஒளிபரப்புக்களை வழங்கியதனால் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு பாரியளவு நட்டம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்யும் உரிமை கார்ல்டன் தொலைக்காட்சி வலையமைப்பிற்கு வழங்கியதன் காரணமாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு 131 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசாங்க நிறுவனமொன்று பாரியளவில் நட்டத்தை அடைந்துள்ளதாகவும் இது குறித்து கவனிக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ - 2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூடங்குள அணுமின் நிலையத்திற்கு எதிராக நேற்று யாழில் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

கூடங்குளம் அணு உலை மின்நிலைய அபாயத்திற்கு எதிராக புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ்.மத்திய பேருந்து நிலையம் முன்பாக மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது அக்கட்சியினால் இலங்கைக்கு ஏற்படப் போகும் பாதிப்புக்களை வெளிப்படுத்தும் துண்டுப் பிரசுரம் ஒன்று பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கையின் வடக்கு, வடமேற்கு, மேற்குக் கரையோரங்களிலும் திருகோணமலையிலும் கண்டியிலும் காலியிலும் கூட கதிர் வீச்சைக் கண்காணிக்கும் கருவிகள் 12 மில்லியன் ரூபா செலவில் நிறுவப்பட உள்ளன. இது அணு உலை ஒன்றின் கதிர்வீச்செல்லையினை நன்கு எடுத்துக் காட்டும் செய்தியாகும்.

கூடங்குளம் அணு உலையின் அன்றாட இயக்கத்தினால் ஏற்படக் கூடிய புற்றுநோய் உட்பட பாதிப்புக்களும் விபத்தொன்று நேரும் பட்சத்தில் ஏற்படக் கூடிய அழிவுகளும் 220 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள இலங்கை மக்களுக்குப் பாரிய அச்சுறுத்தலாகும்.

கூடங்குளம் மின் நிலையம் அமைந்துள்ள பகுதி, நில நடுக்கம், எரிமலை வெடிப்பு, சுனாமி போன்ற அபாயங்களைக் கொண்டுள்ள இடமாகும்.

கடற்கரை ஓரமாக அமைந்துள்ள அணு உலைகளைக் குளிர்விக்க கடல் நீரே பயன்படுத்தப்படவுள்ளது. உரிய முற்காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று இந்திய அரசு உறுதியளிக்கின்றதாயினும் ஊழலும் கவனக் குறைவும் மலிந்த நாடொன்றில் எவ்வளவு அக்கறையுடன் நீண்ட காலத்தில்




இம் முன்னேற்பாடுகள் கவனிக்கப்படும் என்பது கேள்விக்குறியாகும்.

கடல் நீரில் கதிரியக்கம் கலக்கும் பட்சத்தில் இலங்கையின் வடக்கு, வடமேற்கு மீன் வளம் கதிரியக்கப் பாதிப்புக்குள்ளாகும். இது மீன்பிடித் தொழிலினை அடியோடு ஒழிப்பதுடன் இந்த இடங்களில் பிடிக்கப்படும் மீன்களை உண்பவர்களுக்கு புற்றுநோய் உட்பட்ட பாரிய சுகாதாரக்கேடுகளை உருவாக்கும்.

கூடங்குளம் அணு மின்நிலையத்தின் கழிவான கொடிய புளூட்டோனியத்தினை ரஷ்யாவுக்கு மீள எடுத்துச் செல்வதாகவே தொடக்க கால ஒப்பந்தம் இருந்ததெனினும் தற்போது அவ்வொப்பந்தம் கைவிடப்பட்டு கொடிய கழிவுகளை இந்தியாவே கையாள வேண்டும் என்று ஆகியிருக்கிறது. இக்கழிவினைப் புதைத்து வைக்கப் பாதுகாப்பான இடமாக மன்னார் வளைகுடாப் பகுதி தெரிவு செய்யப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கசிகின்றன. இத்தகவல் உண்மையாக இருக்கும் பட்சத்தில் இலங்கை மக்கள் தீவிர அச்சுறுத்தலுக்கு உள்ளாவார்கள்.

இவ்வாறு புதைக்கப்படும் கொடிய புளூட்டோனியம் கழிவு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு கதிரியக்கத்தினை வெளியேற்றிய வண்ணமிருக்கும். இது எப்போது வேண்டுமானாலும் வெடிக்கக் காத்திருக்கும் அணுகுண்டு ஒன்றினை மடியில் கட்டிக் கொண்டிருப்பதற்குச் சமமாகும்.

எனவே, கூடங்குளம் அணுமின் நிலையத்தால் இலங்கை மக்களுக்கு ஏற்படப் போகும் கொடிய பாதிப்புக்களைத் தடுத்த நிறுத்த வேண்டும்.

அத்துடன் பன்னாட்டு முதலாளிகளின் நலன் காப்பதற்காக மக்களின் வாழ்வாதாரத்தைப் பலி கொடுக்கும் அணுமின் நிலையங்களை எதிர்த்து முறியடிக்க வேண்டும்.

கூடங்குளம் அணுமின் நிலைத்துக்கெதிராக எழுச்சியுடன் போராடும் இடிந்தகரை, கூடங்குளம் மக்களுக்கு எமது ஆதரவினை உரத்துச் சொல்ல வேண்டும்.

தமிழகத்தில் போராடும் மக்களுக்கு ஆதரவாக வடக்கு, வடமேற்கு இலங்கையின் மீனவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் உட்பட்ட அனைத்து இலங்கை மக்களும் ஒன்றுபட்டு எழுச்சி கொள்ள வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அங்கு குழுமி நின்ற ஆதரவாளர்களால், கூடங்குளம் அணு உலை மக்களுக்குப் பேரழிவு, அணு உலை வடக்கு மக்களுக்கு பெருநாசம், அணுஉலை கதிரியக்கம் புற்று நோயைக் கொண்டு வரும், ரஷ்ய, ஜப்பான் அணு உலை வெடிப்பால் மக்களுக்கு பேராபத்தும் உயிரிழப்பும் இந்திய மத்திய அரசே அணு உலையை உடனே நிறுத்து போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

(அ - 2)

# கனகராயன் குளம் சந்தை தொடர்பில் பிரதேச சபை கவனம் செலுத்த வேண்டும்

## மக்கள் கோரிக்கை

வவுனியா வடக்கு கனகராயன்குளம் பொதுச்சந்தை பயன்பாடு இன்றி காணப்படுவதாகவும் இது தொடர்பில் வவுனியா வடக்கு பிரதேச சபை கவனம் செலுத்தி அதனை இயங்கச் செய்ய வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல இலட்சம் ரூபா செலவில் சேவாலங்கா நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட இச் சந்தை கட்டடத் தொகுதியானது மக்கள் பாவனைக்கு உட்படாது மூடப்பட்டுள்ளமையினால் அது சேதமடையும் நிலையில் உள்ளது.

அதனை சீரமைத்து மக்கள் பாவனைக்கு விடுவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வவுனியா வடக்கு பிரதேச சபையின் உபதலைவர் தெரிவிக்கையில்,

இச்சந்தை மக்கள் பாவனையின்றி காணப்படுவது உண்மையெனவும் அதற்கான நடவடிக்கையை பிரதேச சபை மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.

(அ - 2)

# கொடூர யுத்தத்தின் தாக்கம்

## 65 ஆயிரம் பேரை மனநோயாளராக்கியது

## சுகாதார அமைச்சு அதிர்ச்சித் தகவல்

கடந்த 30 வருடங்களாக நாட்டில் இடம் பெற்ற கொடிய யுத்தம் காரணமாக பலர் மனநோயாளிகளாக்கப்பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் வடக்கு, கிழக்கில் 65 ஆயிரம் பேர் வரை மனநோயாளிகளாக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு உத்தியோகபூர்வமாக தகவல் வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றில் யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயமூர்த்தி நேற்றைய தினம் எழுப்பிய கேள்விக்கு பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க பதிலளிக்கும்போதே இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த 30 வருடங்களாகத் தொடர்ந்த யுத்த நடவடிக்கைகளின்போது வட மாகாணத்தில் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

இவர்களுக்கு எங்கே சிகிச்சை அளிக்கப்படுகின்றது? இவர்களையும் விசேட தேவையுடையவர்களாகக் கருதி நிவாரணங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என விநாயமூர்த்தி கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதி சுகாதார அமைச்சர்,

மனநோயாளிகள் 62ஆயிரத்து 674 பேர் ஏற்கனவே சிகிச்சை பெற்றுள்ளனர். தற்போது 2 ஆயிரத்து 556பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆயிரத்து 271 பேரும் மன்னார் வைத்தியசாலையில் 407 பேரும் வவுனியாவில் 878 பேரும் உள்நோயாளர்களாக சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஏற்கனவே யாழ்.போதானா வைத்தியசாலையில் 25ஆயிரத்து 976 பேரும் ஏனைய பிரதேச வைத்தியசாலைகளில் 18 ஆயிரத்து 361 பேரும் மன்னாரில் 4 ஆயிரத்து 981 பேரும் வவுனியாவில் 9ஆயிரத்து 355 பேரும் கிளிநொச்சியில் 2ஆயிரத்து 514 பேரும் முல்லைத்தீவில் ஆயிரத்து 287 பேரும் என 62 ஆயிரத்து 474 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேலும், தனியார் தொண்டு நிறுவனங்களுக்கும் இவ்வாறு மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து வருகின்றது என தெரிவித்தார்.

(அ - 2)

# 2020 ஆம் ஆண்டுக்குள் எரிசக்தி வளத்தை மேம்படுத்த திட்டம்

## மின்வளத்துறை அமைச்சின் ஆலோசகர் தெரிவிப்பு

இலங்கைக்கு இந்தியாவால் 4 ஆயிரம் மெகாவோட் மின்சாரத்தை வழங்க முடியும். ஆனால், தற்போது உள்ள நிலையில் இலங்கையால் 2 ஆயிரம் மெகாவோட் மின்சாரத்தை மட்டுமே பெற்றுக் கொள்ள வசதி உள்ளது என இலங்கையின் மின்சாரத்துறை அமைச்சின் ஆலோசகரான அசோகா அபயகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேச புவி வெப்பநிலை மற்றும் பருவநிலை மாற்றம் காரணமாக ஏற்படும் பாதிப்புக்கள் குறித்த கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கைத் தீவில் 94 சதவீத பகுதிகளில் மின்சார வசதி தடையின்றிக் கொண்டு செல்ல கட்டமைப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. தற்போது அதிகரித்து வரும் கட்டமைப்புக்கள், புதிய வளர்ச்சி இவற்றின் தேவைக்குத் தகுந்த அளவில் மின்சாரம் தேவைப்படுகிறது. இதற்கு மரபு சாரா மின்சார உற்பத்தியை இலங்கை நாடவுள்ளது.

காற்றலைகள், சூரியசக்தி மின் உற்பத்தி, கடல் நீர் அலைகளில் இருந்து மின்சார உற்பத்தி இவற்றில் கவனம் செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2020ஆம் வருடத்துக்குள் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி வளத்தை இலங்கையில் மேம்படுத்துவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் இதற்குத் தேவையான ஆரம்ப கால முதலீடு குறித்து கவனம் கொண்டுள்ளதாகவும் [illegible] அளவில் இருப்பினும் [illegible]வைப் பார்க்கும்போது இந்தத் திட்டத்துக்கு கூடுதல் முதலீடு பெரியதல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கில் உலக நாடுகள் பலவற்றிலும் இருந்து வந்திருந்த அறிஞர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இதன்போது யுஎன்டிபி சிறப்பு ஆய்வாளர் பட்சையா காட்டே கூறுகையில்,

ஆசிய வளர்ச்சி வங்கி சர்வதேச நாடுகளின் மற்றும் மண்டலங்களின் மின்துறை உற்பத்திக்கான ஒத்துழைப்புக்கு உதவுகின்றது.

இந்தியா, நேபாளம், வங்கதேசம், இலங்கை ஆகியவை இது விடயத்தில் தாய்லாந்து, மியன்மார், லாவொஸ் ஆகியவற்றின் வழியைக் கற்றுக் கொண்டு உலகளாவிய ஒத்துழைப்புக்கு உதவ வேண்டும் என்றார்.

(அ - 2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தானியத்தை வாங்கும் முன் கோணியை தயாராக வைத்திருப்பவன் புத்திசாலி.
-பர்ரோஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் அபிவிருத்திபற்றி பேசுங்கள்

எதற்கு எடுத்தாலும் விமர்சனம், விதண்டா வாதம், எதிர்ப்பு என்ற நடைமுறை எங்கள் மனங்களை இறுகப்பற்றிவிட்டன.

இதிலிருந்து விடுபடாதவரை எங்கள் எழுச்சி என்பது சாத்தியப்படப் போவதில்லை என்பது தெளிவு.

அரசியல் ரீதியில் தமிழ்த் தரப்புக்கள் வேறுபட்டிருந்தாலும் தமிழர்கள் என்ற அடிப்படையில் பொது விடயங்களில் இணக்கப்பாடும் ஒற்றுமையும் இருத்தல் அவசியம்.

ஆனால், எங்களிடம் ஒற்றுமையென்ற பேச்சுக்கே இடமில்லாமல் போயிற்று. ஒற்றுமையீனம்தான் எங்கள் வீழ்ச்சிக்கு காரணம் என்பதை உணர்ந்து கொண்ட பின்பும் ஒற்றுமைப்படாமல் இருப்பதென்பது சுய இலாப அரசியல் நோக்குடையதேயன்றி இனப்பற்றுடையதல்ல என்பது தெளிவு.

விடுதலைப் புலிகளுடனான போருக்கு முன்னதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தென்பகுதியில் தனக்கிருக்கக் கூடிய அரசியல் எதிர்ப்புகளை வெற்றிகொண்டார்.

வாசுதேவ நாணயக்கார முதல் டியூ குணசேகரவரை அனைவரையும் தனது நண்பர்களாக்கினார்.

ஜே.வி.பியில் இருக்கக் கூடிய முக்கிய பிரசாரகாரரான விமல் வீரவன்சவை தன்பக்கம் இழுத்துக்கொண்டு அக்கட்சியை இயங்கு நிலையற்றதாக்கினார்.

அதேநேரம் ஐக்கியதேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை வெளித்தெரியாதவாறு தனது பக்கம் வைத்துக்கொண்டு ஐக்கிய தேசியக்கட்சியின் பலவீனத்தை தொடர்ந்து பேணிக்கொள்ளுதல் என்றவாறு அரசியல் காய் நகர்த்தலை செய்து வருகிறார்.

இதுவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்குக் காரணம் எனலாம்.

ஆனால் தமிழ் தரப்புகள் பாராளுமன்ற கன்ரீனில் கைகொடுத்து அளவளாவிக் கொள்வர்.

தேவையாயின் சொந்த விடயங்களுக்கும் பரஸ்பரம் உதவி பெற்றுக்கொள்வர்.

ஆனால், அபிவிருத்திக் குழுக் கூட்டம் என்றால் உச்ச ஸ்தாயியில் வாதிட்டுக்கொள்வர். இதனால் அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் இலக்கைஅடையமுடியாமல்–மக்களின்பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்காமல் நகர்ந்து செல்கிறது.

எனவே, தமிழ் தரப்புகள் வாய்ச்சாடல் செய்வதை விடுத்து தமிழ் மக்களுக்கு ஏதேனும் செய்தாக வேண்டும் என்ற நோக்கில் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

# இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அனைத்துக் கட்சிகளையும் கூட்ட வேண்டும்

## பா.ம.க. தலைவர் கோரிக்கை



(சென்னை)

இலங்கைத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முதலமைச்சர் ஜெயலலிதா அனைத்துக் கட்சிக்கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி கூறினார்.

ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு சென்னை திரும்பிய பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சென்னைக்கு நேற்று முன்தினம் திரும்பிய அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கையில் மனித உரிமைகளை மீறி ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பதற்கான ஆதாரங்களை பா.ம.க. மற்றும் பசுமை தாயகம் சார்பில் கொடுத்துள்ளோம். பன்னாட்டு நீதி விசாரணை தேவை என்றும் வலியுறுத்தினோம்.

இலங்கை கடற்படையினரால் இதுவரை 500க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் எடுத்துக் கூறினோம். இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு முனைப்போடு செயற்படுவோம் என்று ஐ.நா மன்றத்தினர் உறுதியளித்துள்ளனர்.


பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் என்னிடம் நீங்கள் தமிழ் நாட்டுக்குபோய்என்ன செய்யப்போகின்றீர்கள் எனக் கேட்டனர். உடனே நான் தமிழ் நாட்டைச் சேர்ந்த நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இலங்கை தமிழர் பிரச்சினையில் தமிழ்நாட்டில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என்று கூறினார்கள்.

அடுத்தபடியாக இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வுகாண தமிழக முதல் அமைச்சரை அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டும்படி வற்புறுத்த வேண்டும் என்றும் கூறினார்கள். இந்தக் கூட்டத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சி களும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழ் நாடு ஒரே குரலில் ஒலிக்கிறது என்ற நிலைமையை உருவாக்க வேண்டும். இதற்கு பா.ம.க. முயற்சிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

இது மட்டுமல்லாமல் முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையில் அனைத்துக் கட்சியினரும் டில்லி சென்று பிரதமர், சோனியாகாந்தி ஆகியோரைச் சந்தித்து அனைத்துக் கட்சிக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வழங்க வேண்டும். அப்போது இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்றும் கூறினார்கள் என்றார். (எ-11)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### சிவனடிக்கன்பு செய் அனைத்துஞ் சிவமே



சிவனடிக்கன்பு செய்குவர் பெரியர்
சிவனடிக்கன்பு செய்கிலர் சிறியர்
சிவனடிக்கன்பு சிறப்பினை யளிக்கும்
சிவனடிக்கன்பு சீவன் முத்தியே

சிவனடிக்கன்பு தீவினை ஒழிக்கும்
சிவனடிக்கன்பு தெளிவினை அளிக்கும்
சிவனடிக்கன்பு சித்தம் களிக்கும்
சிவனடிக்கன்பு சின்மயமாக்குமே

# எதிர்காலத்தை எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தை எம்மில் வளர்ப்போம்

இன்றைய நற்செய்தியில், இயேசு தனது இரண்டாவது வருகையைப் பற்றிக்கூறுகிறார். ஆனால் இங்கே இயேசு இன்னும் அவரின் முதல் வருகையின் பணியை முழுவதுமாக முடிக்கவில்லை. அந்நாட்களில் வேதனைகளுக்குப் பின்பு கதிரவன் இருண்டுவிடும், நிலா ஒளி கொடாது. விண்மீன்கள் வானத்திலிருந்து விழுந்த வண்ணம் இருக்கும், வான்வெளிக்கோள்கள் அதிரும். இவை நிகழ்வதை காணும் போது மானிடமகன் கதவை நெருங்கி வந்து விட்டார் என நீங்கள் அறிந்து கொள்கிறீர்கள்.

## பரமபிதா காட்டிய பாதை


இது இன்றுவரை ஒரு முடிவில்லாத பிரச்சினை. இயேசு எங்கே? அவர் என்ன சொன்னார் என்பதை கவனித்தால்; இவை நிகழ்வதை காணும் போது மானிட மகன் கதவை நெருங்கிவந்துவிட்டார். அவர் வந்த ஒரு திகதியையும் உறுதியாகச் சொல்லவில்லை. சீடர்களுக்கு எந்தவொரு தடயமோ அல்லது தமது இரண்டாம் வருகைக்கான எந்தவொரு சரியான குறியீடும் கொடுக்கவில்லை. ஏனெனில், அவருக்கும் அது தெரியாது!

கிறிஸ்தவத்தின் அடிப்படை நம்பிக்கைகளில் ஒன்றுதான் இயேசுவின் இரண்டாம் வருகை. முதல் வருகையின்போது, மனித உருவெடுத்து, தொடர்ந்து பாடுபட்டு, மதித்து, உயிர்த்த இறைமகன் இயேசு இரண்டாம் முறையாக மீண்டும் வருவார். அந்த வருகையின்போது அவர் நடுவராக உலகைத் தீர்ப்பிடுவார் என்பதுவே இரண்டாம் வருகையின் பொருள். இதைநாம் ஒவ்வொரு நாளும் திருப்பலியிலும், விசுவாசப் பிரமாணத்திலும், இன்னும் வேறு பல வேளைகளிலும் அறிக்கையிடுகிறோம்.

இந்த விசுவாச அறிக்கையை எப்படி வாழ்வில் பயன்படுத்துவது என வினாவினால், அது ஒரு நல்லகேள்விதான். நடுவராக இயேசு மீண்டும் வரவிருக் கின்ற அந்த இரண்டாம் வருகை உலக முடிவில் தான் இருக்கும். உலகமுடிவு எப்போது என்று மனுமகனுக்கே தெரியாது என்று இயேசுவும் கூறிவிட்டார். எனவே, நம்மைப்பொறுத்தவரை, உலக முடிவு என்பதுநம் ஒவ்வொருவரின் முடிவுதான். அதாவது, நமது இறப்புதான் நாம் இறக்கின்றபோது நடுவராம் இயேசு நம்மை சந்தித்து நம்மைத்தீர்ப்பிடுவார். அந்த தீர்ப்பின் வேளைக்காக நாம் எப்போதும் ஆயத்தமாக இருக்கவேண்டும். ஒவ்வொருநாளும், ஒவ்வொரு நிமிடமும் நாம் இறைவனுடைய பிரசன்னத்தை உணர்ந்து வாழ்வதும், நமது பணிகளை நேர்மையாக, நேர்த்தியாக ஆற்றுவதுமே இரண்டாம் வருகைக்கான நமது தயாரிப்பு.

இந்த உலகில் நிலவுகின்ற அநீதிகளும் அட்டூழியங்களும் ஒருநாள் முடிவுக்கு வரும் எனவும், குறைகளும் குற்றங்களும் மலிந்த நம்வாழ்வு ஒரு நாள் ஒளிமயமானதாக விளங்கும் எனவும் நமக்கு அவர் அறிவுறுத்துகிறார். ஆனால், அந்த நிறைவுக்காலம் எப்போதுவரும்? இக்கேள்விக்கு இயேசு பதிலளிக்க மறுத்துவிட்டார். இந்த நிறைவுக்காலம் எமக்கு எதிர்காலத்தில்தான் வரும் என்கிறார் இயேசு.

இன்று நம்மில்எத்தனைபேர் எதிர்காலத்தைத் தெரிந்து கொள்ளும் முயற்சியில்ஈடுபடுகிறோ? எப்படி அதை அறிய ஆசைப்படுகின்றோம். கத்தோலிக்கர்கள் என மார்புதட்டிக் கொண்டும் பங்குத் தளங்களில் உள்ள பக்திக்குழுக்களில் விவிலியத்தை தூக்கிக்கொண்டு வேதம் ஓதியபின் நல்ல சாத்திரக்காரரை நாடிச் சென்று, கேட்டு தம் வாழ்வையும் மட்டுமல்லாது தம் அன்பர்களின் வாழ்வையும் பாழாக்குபவர்கள் பற்றி நாம் அறிவோம்.



எனவே, எதிர்காலத்தைத் தெரிந்து கொள்வதில் காட்டும் ஆர்வத்தில் ஒரு பகுதியையாவது அந்த எதிர்காலத்தை எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்ப்பதில் செலவிட்டால், எவ்வளவோ பிரச்சினைகளைச் சமாளிக்கலாம்; வெல்லலாம்.

**ம.பிரான்சீஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

எதிர்காலம் என்பதில் பிரச்சினை கூட்டமாகச் சேர்த்துவந்தாலும், அந்தக்கூட்டத்தின் மத்தியில் நல்லவைகளை, நல்லவர்களை பார்த்து கைகுலுக்கிக்கொள்ளும் பக்குவம் நாம் பெறவேண்டும். இதை ஒரு உருவகத்தில் சொல்லவேண்டுமெனில் எதிர்காலம் மலைபோலக் குவிந்த ஒரு குப்பையாக தெரிந்தாலும் அந்தக் குப்பையின் நடுவிலும் வைரங்கள் மின்னுவதை நம் கண்கள் பார்க்கும் போது, குப்பை மறைந்துவிடும், வைரங்கள் மட்டும் தெரியும். குப்பைகளை விலக்கி, குண்டுமணிகளை, வைரங்களைப் பார்க்கும், வைரங்களைச் சேர்க்கும் மனப்பக்குவத்தை நாம் வளர்த்துக்கொள்ள இறைவன் துணையை நாடுவோம்.

இந்த உலகத்தின் இறுதிக்காலம் பற்றி சிந்திக்க இந்த ஞாயிறு வாசகங்களான தானியேல், மார்க்கு நற்செய்தியின் இறைவார்த்தைகளை, பகுதி களை கேட்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# U.K.வி.க. கிரிக்கெட் போட்டி; ஞானம்ஸ் அணி வெற்றி



யூ.கே விளையாட்டுக்கழகத்தினால் புட்டளை இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தப்பட்ட அணிக்கு 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் ஞானம்ஸ் விளையாட்டுக்கழகமும் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகமும் மோதின. இப்போட்டி கடந்த 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் 12 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டினையும் இழந்தது. பதிலுக்கு 13 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் 1.1 பந்துப் பரிமாற்றத்தில் எவ்வித விக்கெட்டினையும் இழக்காது வெற்றி பெற்றனர். இதில் ஞானம்ஸ் அணிக்காக 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்த சேந்திரன் போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

# கிரிக்கெட் போட்டி சமநிலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி சமநிலையில் முடிவுற்றது.

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திற்குட்பட்ட பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினருக்கிடையில் மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்குமான போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மதுஸன் 31 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 21 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. தொடர்ந்து பலோர் ஒன் முறையில் தமது இரண்டாவது இனிங்ஸினையும் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் இரண்டாவது இனிங்ஸில் 7 விக்கெட்டுக்களை இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டம் முடிவுக்கு வந்தது.

# பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்துப் போட்டி

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுச் சங்கம் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணியினருக்கிடையிலான காற்பந்தாட்ட போட்டிகள் எதிர்வரும் 6,7 ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகளுக்கான நிரல் தயாரிப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# சண்டிலிப்பாய் கோட்ட காற்பந்துப் போட்டி; சென்.ஜோசப், மானிப்பாய் இந்து வெற்றி







யாழ். சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் 14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் சென்.ஜோசப் மகா வித்தியாலயமும் 16 மற்றும் 18 வயதுப் பிரிவினர்களுக்கான போட்டிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் வெற்றி பெற்றன.

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

14 வயதுப் பிரிவினருக்கான இறுதிப்போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம் மோதியது.


தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம் முதல் பாதி ஆட்டத்தில் ஒரு கோலைப்போட்டது. இரண்டாவது பாதி ஆட்டத்திலும் அவ்வணி ஒரு கோலைப் போட்டது. இறுதியில் சென்.ஜோசப் மகா வித்தியாலயம் 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

16 வயதுப் பிரிவினருக்கான இறுதிப்போட்டியில் மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயத்தை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி மோதியது. முதல் பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 2 கோல்களை போட்டது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் மேலும் ஒரு கோலை மானிப்பாய் இந்துக் கல்லூரி போட்டது. இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

18 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மோதியது. முதல் பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அடுத்தடுத்து 2 கோல்களைப் போட்டது. இந்நிலையில் பதிலுக்கு ஒரு கோலைப் போட்ட ஹென்றியரசர் ஆட்டத்தில் விறுவிறுப்பை ஏற்படுத்தியது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஒரு கோலைப் போட்டது. சிறிது நேரத்தில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் ஒரு கோலைப் போட்டது. சிறிது நேரத்தில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் ஒரு கோலைப் போட்டது. இருந்தும் மீண்டும் ஒரு கோலைப் போட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றியை உறுதி செய்தது. இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 4:2 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா ஆதிக்கம் ; தடுமாறுகிறது இங்கிலாந்து



இந்தியா அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் பாலோன் ஆகி இங்கிலாந்து அணி திணறி வருகிறது.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி முதலில் நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று வருகிறது. இதன் முதல் டெஸ்ட் போட்டி அகமதாபாத் தில் நடைபெற்று வருகிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 8 விக்கெட்டுக்கு 521 ஓட்டங்கள் எடுத்த போது டிக்ளே செய்தது.

ஷேவாக் 117 ஓட்டங்களையும் புஜாரா ஆட்டமிழக்காமல் 206 ஓட்டங்களும் எடுத்தனர். இங்கிலாந்து சார்பில் சுவான் 5 விக்கெட்டும் பீட்டர்சன், படேல், ஆண்டர்சன் தலா ஒரு விக்கெட்டுகளும் கைப்பற்றினர்.

இதனையடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணியின் காம்ப்டன் 9 ஓட்டங்களில் வெளியேறினார். அடுத்து களமிறங்கிய டிராட் ஓட்டங்களின்றியும் ஆண்டர்சன் 2 ஓட்டங்களிலும் ஆட்டமிலிந்தனர். நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிபில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 3 விக்கெட்டுக்கு 41 ஓட்டங்கள் எடுத்திருந்தது.


அணித்தலைவர் குக் 22 ஓட்டங்களுடனும் பீட்டர்சன் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தை தொடர்ந்து இங்கிலாந்து அணியின் பீட்டர்சன் 17 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 191 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளை யும் இழந்தது.

அதிகபட்சமாக குக் 41 ஓட்டங்களும் பிரியர் 48 ஓட்டங்களும் எடுத்தனர். பந்துவீச்சில் இந்திய அணியின் பிரக்யான் ஓஜா 5 விக் கெட்டும். அஷ்வின் 3 விக்கெட்டும் வீழ்த்தினர். இதனையடுத்து இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் பாலோனைத் தொடர்ந்து விளையாட தொடங்கியது.

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 111 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

தொடக்க வீரர்களான களமிறங்கிய அணித்தலைவர் அரைசதம் கடந்து 74 ஓட்டங்களும் நிக் காம்டன் 34 ஓட்டங்களும் எடுத்துள்ளனர்.

# இலங்கையின் பந்து வீச்சில் சுருண்டது நியூசிலாந்து



இலங்கை அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 221 ஓட்டங்களில் சுருண்டது.

இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது.

நேற்று தொடங்கிய முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்க வீரராக களமிறங்கிய கப்டில் 11 ஓட்டங்களும் மெக்கலம் 68 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்

பின்பு களமிறங்கிய பிளின் 53 ஓட்டங்களும் வான் விக் 28 ஓட்டங்களும் எடுத்தனர். மற்ற வீரர்கள் இலங்கையின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 221 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக ரங்கன ஹேரத் 5 விக்கெட்டும் எரங்கா 3 விக்கெட்டும் குலசேகர 2 விக்கெட்டும் கைப்பற்றினர்.

இதனையடுத்து இலங்கை அணி தனது முதல் ஆட்டத்தை தொடங்கியது. தொடக்க வீரராக களமிறங்கிய கருணாரத்ன ஓட்டங்களின்றி ஆட்டமிழந்தார்.

இலங்கை அணி முதல் நாள் ஆட்டநேர முடிபில் 1 விக்கெட் இழப்பிற்கு 9 ஓட்டங்கள் எடுத்துள்ளது. சுராஜ் ரந்தீவ் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளார்.

# புலிகளின் பிர...

பாரிஸ் பொலிஸார் விநாயகத்தை கைது செய்துள்ளனர்.

ஐரோப்பாவில் செயற்பட்டு வந்து புலிகளின் வலையமைப்புகளில் விநாயகத்தின் வலையமைப்பு மிகவும் வலுவானது.

பரிதி கொலையுடன் இலங்கை அரசாங்கத்தை தொடர்புபடுத்த புலிகள் முயற்சித்ததாக சிங்களப் பத்திரிகை தெரிவித்தது.

பரிதி கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட மூன்றாம் நபர் விநாயகம் என்பது குறிப்பிடத்தக்கது.

விநாயகம் 2009ஆம் ஆண்டு போர் இடம்பெற்ற காலத்தில் ஐரோப்பாவிற்கு தப்பிச் சென்று புலிகளின் வலையமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் எனச் சிங்களப் பத்திரிகை செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

# தமிழில் பேசி...

ஆண்டு காலமாக இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் இருந்துவரும் உறவினைக் கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இசை நிகழ்ச்சிக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

எதிர்வரும் காலத்தில் இவ்வாறான நிகழ்வுகளை இலங்கையில் நடத்துவதற்கான உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம் எனவும் தெரிவித்தார். (எ-6)

# இராணுவத்தில் தமிழ்ப் பெண்...

சேர்த்துள்ளதாகவும் தங்களுக்கு ஆயுத பயிற்சி வழங்கப்படமாட்டாது என்று அதிகாரிகள் தெரிவித்ததாகவும் இராணுவத்தில் இணைந்துள்ள பெண்கள் தெரிவித்தனர்.

சிங்கள மொழிப் பயிற்சி உட்பட மூன்று மாதப் பயிற்சியின் பின்னர் தமது கிராமத்திலேயே தொழில் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

குடும்ப வறுமை, தொழிலின்மை என்பன காரணமாகவும் 30 ஆயிரம் ரூபாய் மாதாந்த சம்பளம் மற்றும் வசதிகள் தரப்படும் என கூறியிருப்பதனால் தாங்கள் இதில் சேர்வதற்கு முன் வந்துள்ள போதிலும் இராணுவப் பயிற்சியென்றால் தங்களுக்கு விருப்பமில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இராணுவத்தில் இணைந்து கொண்டவர்களில் ஒருவீதமேனும் ஆர்வத்துடன் இணைந்து கொள்ளவில்லை எனவும் கூறப்படுகிறது.

தமிழ் இளம் பெண்கள் வேலை வாய்ப்புக்காக இராணுவத்தில் அதுவும் தேசிய இராணுவத்தில் இணைவதை ஒரு சாதகமான நிலையாகவே தான் நோக்குவதாக தெரிவித்த பாரதிபுரம் அருட்தந்தை டிக்ஷன், கடந்த காலங்களில் இவ்வாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் வேறு நிலைமைகளில் தமது பிள்ளைகளைப் பிரிந்த பெற்றோர் இந்தச் சந்தர்ப்பத்திலும் பிள்ளைகளைப் பிரிந்தபோது கண்ணீர் விட்டு அழுததைக் கண்டதாகக் கூறினார்.

முதல் தடவையாக நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் இராணுவத்தில் இணைவதற்கு முன்வந்தமையானது அரசாங்கத்தின் நல்லிணக்க நடவடிக்கையின் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது என்று இந்த நிகழ்வு குறித்து செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த கிளிநொச்சி மாவட்ட ஆயுதப்படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தெரிவித்தார்.

அதேவேளை தமிழர்களுக்கான ஏனைய விடயங்கள் எதுவும் இதுவரை சரியாக பூர்த்தியாகாத நிலையில் இராணுவத்துக்கு மாத்திரம் பெண்கள் சேர்க்கப்படுவதை சில தமிழ் பெண்கள் அமைப்புக்கள் சந்தேகத்துடன் பார்க்கின்றன.

அதுவும் குறிப்பாக கடந்த காலங்களில் பெண் போராளிகள் விடயத்தில் இராணுவம் தவறாக நடந்துகொண்டதாகக் கூறும் அவர்கள் அப்படியான இராணுவத்தில் சரியான மாற்றங்கள் எதுவும் வராமல் அதற்கு முன்னதாகவே பெண்கள் சேர்க்கப்படுவது குறித்து கரிசனையும் தெரிவித்துள்ளனர். (எ-11)

# இறுதி யுத்தத்திற்கு...

பின்னர் அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கையுடன் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்ட எழுத்து மூல அறிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கும் இடத்து ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 676 பேர் கணக்கில் அடங்கவில்லை என்றும் அக்குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை 2009 முற்பகுதியில் முல்லைத்தீவு பிரதேசத்தில் 3 இலட்சத்து 60 ஆயிரம் பொதுமக்கள் இருந்தாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் 2010ஆம் ஆண்டில் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் வழங்கிய தகவல்களின்போது குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் 2009 யூன் மாதக் காலப் பகுதியில் வன்னியில் இருந்து 2 இலட்சத்து 89 ஆயிரத்து 915 பேர் மாத்திரமே வெளியேறியுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலக தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன என்றும் அவ் அறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-11)

# 109 தமிழ்ப் பெண்கள்..

இராணுவத்தில் நியமனங்களைப் பெற்றுக் கொள்ளும் முகமாக வட மாகாணத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் பெண்கள் தமது பெற்றோருடன் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இலங்கை இராணுவத்தின் தொழிற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள இவர்கள் இராணுவ மகளிர் படையின் 6 ஆவது படையணியின் கீழ் செயற்படவுள்ளனர்.

குறித்த பெண்களுக்கு இராணுவ ஆயுதப் பயிற்சி வழங்கப்படமாட்டாதெனவும் இராணுவத்தில் உள்ள 105ற்கும் மேற்பட்ட தொழிற்றுறைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும் மேஜர் ஜெனரல் உதய பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

35 ஆயிரம் ரூபாய்க்கும் மேற்பட்ட சம்பளமும் மேலதிக கொடுப்பனவும் இலவச சீருடை போக்குவரத்து வசதி திருமணத்தின் பின்னரான விடுமுறை சலுகை பிள்ளைகளை தேசிய பாடசாலைகளில் இணைத்தல் வீட்டுக் கடன் உள்ளிட்ட பல வசதிகளும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கிலிருந்து தமிழ் யுவதிகளை இராணுவத்தில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் கடந்த வாரங்களில் இடம்பெற்ற நிலையிலேயே குறித்த 109 பேரும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் 2 ஆயிரம் தமிழ் பேசும் அதிகாரிகளை பொலிஸ் பிரிவில் இணைத்துக் கொள்ளும் செயல் திட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து பெரும்பாலானவர்கள் இணைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதைத்தவிர வடக்கு மற்றும் கிழக்கில் சிவில் பாதுகாப்புப் படையில் நிலவும் தொழில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 5 ஆயிரம் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களை இணைக்கும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு இணைத்துக்கொள்ளப்படுவோர் விவசாய திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவர்.

இதன் முதற்கட்டமாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து ஆயிரத்து ஐந்நூறு புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தது. (எ-11)

# கிணற்றுக்குள்...

மாட்டுக்குத் தண்ணீர் வைப்பதற்காக கிணற்றடிக்குச் சென்றுள்ளார்.

ஆனால் இவரை அதிக நேரம் காணாததால் உறவினர்கள் தேடியுள்ளனர்.

பிற்பகல் 2.30 மணியளவில் இவரது சடலம் கிணற்றுக்குள் இருப்பது கண்டுபிடிக்க ப்பட்டது.

உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு சடலமானது நேற்று இரவு 7.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

# பால் தாக்கரே...

மற்றும் கணையத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தாக்ரே பாதிக்கப்பட்டிருந்தார். பிற்பகல் 3.00 மணிக்கு மாரடைப்பு ஏற்பட்டு உயிர் பிரிந்துவிட்டதாக அவரது மருத்துவர் ஜலில் பார்கர் செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

அவரது உடல்நிலை கடந்த சில நாட்களாக மோசமடைந்து வந்த நிலையில் மும்பையில் உள்ள அவரது இல்லத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகக் கூறப்பட்ட நிலையில் அவரது உடல்நிலையில் மெல்ல மெல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாக நேற்றிரவு வரை சிவசேனைத் தலைவர்கள் கூறிவந்தனர்.

தாக்கரே மறைவை ஒட்டி மும்பை நகரம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. 20 ஆயிரம் பொலிசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மிகவும் அவசியம் ஏற்பட்டால் மட்டுமே பொதுமக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டும் என்று மும்பை மக்களை பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

பால் தாக்கரேவின் இறுதிச் சடங்கு இன்று மாலை நடைபெறும் என்றும், இறுதி ஊர்வலம் காலை 10 மணிக்குத் தொடங்கும் என்றும் செய்திகள் கூறுகின்றன. (எ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

L.L. NO. 2490

# DOHA QATAR நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

உங்கள் வாழ்வுக்கு ஒளியூட்டுமுகமாக இலங்கை அரசாங்கத்தினாலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினாலும் அங்கீகரிக்கப்பட்ட **Air Trust** வெளிநாட்டு முகவர் நிறுவனத்தினால் இம்மாதம் 17ஆம் திகதி *Green Grass Hotel* யாழ்ப்பாணத்திலும், 18 ஆம் திகதி *Star Rest* கிளிநொச்சி பரந்தனிலும் காலை 09.00 மணியிலிருந்து 05.00 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கீழ்க்காணும் தகுதியுடையவர்கள் உடன் நேரில் வரவும். (C1478)

குறிப்பு: டிக்கட், பியீரோ உட்பட விசா கிடைத்தவுடன் மொத்தக் கட்டணமாக ரூபா 60 ஆயிரம் மட்டுமே அறவிடப்படும். **House Maid** (வீட்டுப் பணிப்பெண்களுக்கு 06 மாத சம்பளம் முற்பணமாகவும் மற்றும் அனைத்து செலவுகளும் முற்றிலும் இலவசமாக செய்து அனுப்பிவைக்கப்படும்.

| JOB | QTY | SALARY (Q.R) |
|---|---|---|
| மேஷன் (Mason) | 75 | 1,200-1,500 |
| இலக்ரிஷியன் (Electrician) | 20 | 1,200-2,000 |
| கார்பெண்டர் (Carpenter) | 28 | 1,200-1,500 |
| பெயின்டர் (Painter) | 18 | 1,000-1,200 |
| கம்பிக் கூடு கட்டுபவர்கள் (Steel Fixer) | 32 | 900-1,000 |
| உதவியாளர்கள் (Helpers) | 112 | 900-1,000 |
| சுத்திகரிப்பாளர்கள் (Cleaners) | 96 | 800-900 |
| சமையல்செய்பவர்கள் (Cook) | 05 | 1,000-1,200 |
| கணக்காளர் (Accountant) | 08 | 1,200-2,000 |
| சாரதிமார்கள் (Drivers) | 55 | 1,200-1,600 |
| A/C Technician | 16 | 1,200-2,000 |
| Welders | 12 | 1,200-2,000 |
| Marketing | 12 | 1,200-,4,000 |

1 QR = Rs. 36.75

சலுகைகளும் விதிமுறைகளும்
**இலவசம்** தங்குமிடம் போக்குவரத்து மருத்துவ வசதி
மேலதிக நேரம் உண்டு. நாளாந்த வேலை நேரம் 8 மணித்தியாலங்கள்

17ம் திகதி: Green Grass Hotel, #33, Aasirwatham Lane, Hospital Road, Jaffna.
18ம் திகதி: Star Rest, Kandy Road, (Paranthan) Kilinochchi.

பதிவுகளுக்கு விரையுங்கள்
**AIR TRUST**
OVERSEAS MAN BOWER CONSULTANT
#985, 1ST FLOOR MARADANA RD, BORELLA, COLOMBO -08
011 - 2676777, 075 0650084


# மற்றொரு விசாரணைக் குழு பான் கீ மூனால் நியமிப்பு

இலங்கைக்கு தண்டனை கொடுக்கும் முயற்சியாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் மற்றொரு விசாரணைக் குழுவை நியமித்துள்ளதாக திவயின தெரிவித்துள்ளது.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட உள்ளக அறிக்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான பொறுப்பு இந்தக் குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் போர் குற்றம் தொடர்பாக பான் கீ மூன் நியமித்துள்ள இரண்டாவது குழு இதுவாகும். ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் இந்தத் தீர்மானம் ஒரு தலைப்பட்சமான, இலங்கையை போர்க் குற்றவாளியாக்கும் முயற்சி என திவயின கூறியுள்ளது.

பான் கீ மூன் நியமித்துள்ள ஐ.நா அதிகாரி சார்ள்ஸ் பெட்ரியின் 128 பக்கங்களைக் கொண்ட அறிக்கையில் புலிகளின் தலைமைத்துவத்தை கொலை செய்துள்ளதாகவும் இதற்கு சாட்சியங்கள் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது என திவயின கூறியுள்ளது. (எ-11)


மாபெரும் விசேட விலைக்கழிவு

**Jet D Express Courier Service**

விரைவு
பாதுகாப்பு
உத்தரவாதம்



உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய (அ-1553)

| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 kg 1100/= | |
| Canada | Over 5 kg 1200/= | |
| Norway | Over 5 kg 1100/= | |
| Italy | Over 5 kg 1100/= | |
| France | Over5kg 1000/= | Over11kg 750/= |
| Germany | Over5kg 1000/= | Over 11kg 850/= |
| London | Over 5kg 1000/= | Over 11kg 750/= |
| Australia | Over 5kg 1000/= | Over 11g 850/= |
| Netharland | Over 5kg 1000/= | Over 11kg 850/= |
| Swiss | Over 5kg 1100/= | Over 11kg 950/= |
| Denmark | Over 5kg 1100/= | Over 11kg 850/= |

Note: 25kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு



உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக் கொள்ளலாம்.

Note : * கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும் வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

இவ 27, முதலாம் மாடி, நவீன சந்தை. (தனம்ரெக்ஸ் மேல்) யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 221 9150, 0772187 301

No: 77E. Manning Place, Wellawatta, Colombo 06, T.P:- 0112363873 0776509909


# மரண அறிவித்தல்



பிறப்பு: 1958.12.30 இறப்பு: 2012.11.12

## கந்தையா தேவதாஸ்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தேவதாஸ் அவர்கள் 12.11.2012 அன்று கனடாவில் காலமானார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (18.11.2012) கனடாவில் இடம்பெறும்.

**தகவல்: சுப்பிரமணியம் குடும்பத்தினர் (சிறிய தகப்பன்)**
இல.788 ஆறுமுகன் வீதி
கண்ணன் கோயிலடி
வட்டக்கச்சி. (C-1555)


# உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் கனேடிய நிறுவனத்தின் இரண்டாவது பிரிவான Direct Marketing International கம்பனிக்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

- Customer Care
- Adminstration
- Management Trainies
- Supervisor

பயிற்சியின்போது (12,000 - 15,000) பெறமுடியும்

**தகைமைகள் :**

- O/L, A/L
- பயிற்சிக் காலம்: 6 Months to one year
- தங்குமிட வசதி இலவசம்
- வயதெல்லை ; (17-35)

தொடர்புகளுக்கு:
0778602777, 0771906728, 0217200867 (அ-1551)


# தேருநர் இடாப்புத் திருத்தம் - 2012

2012 ஆம் ஆண்டிற்குரிய வாக்காளர் இடாப்புத் திருத்த செயற்பாடுகள் நிறைவு பெறும் கட்டத்திலுள்ளது.

அதன்படி,

1. BC படிவத்தை அல்லது UE படிவத்தை அல்லது உரிய கோரிக்கைப் படிவத்தைப் பூர்த்தி செய்து முறைப்படி ஒப்படைத்த உங்களுக்காக,

அக்டோபர் 31 ஆந் திகதி வரையான மக்களுக்கான காட்சிப்படுத்தல் காலப்பகுதியினுள் அகற்றப்படவுள்ள பட்டியல் (A List) சேர்க்கப்படவுள்ள பட்டியல் (B List) என்பவற்றைப் பரிசீலனை செய்த பின்னர் உங்கள் அல்லது உங்கள் குடும்பத்தவரின் பெயர்கள் விடுபட்டிருந்த போது அல்லது குறைபாடிருந்த போது அவற்றை நிவர்த்தி செய்யும் முகமாக உரிய கோரிக்கைப் படிவத்தைப் பூர்த்தி செய்து ஒப்படைத்த உங்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலகத்திலிருந்து உங்கள் இருப்பை மற்றும் தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அழைப்பொன்று அனுப்பி வைக்கப்படும். அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தில் உரிய இடத்தில் உரிய தகவல்களுடன் சமுகமளிக்கவும்.

**இது உங்கள் அல்லது உங்கள் குடும்பத்தவர்களின் பெயர்களை 2012 ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பில் சேர்த்துக்கொள்வதற்காக கிடைத்த ஓர் இறுதி சந்தர்ப்பம் என்பதால் இதனை நழுவ விடாதீர்கள்.**

உங்கள் அல்லது உங்கள் குடும்பத்தவர்களின் பெயர்கள் 2012 ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பில் சேர்த்துக்கொள்ளப்படாது போனால்,

01. 2013 ஆம் ஆண்டின் தேர்தல்களின் போது வாக்களிக்கும் உங்கள் வாக்குரிமையை இழக்க நேரிடும்.

02. உங்கள் வசிப்பிடத்தை உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடிய ஒரு முக்கியமான ஆதாரமொன்றை இழக்கலாம்.

அது மாத்திரமல்ல,

- உங்கள் பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்க்கும் போது சிக்கல்களை எதிர்நோக்கலாம்.
- அரச தொழில் வாய்ப்புக்களுக்காக விண்ணப்பிக்கும் போது அதில் முட்டுக்கட்டைகள் ஏற்படலாம்.
- பல்கலைக்கழக மானியங்களைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்கலாம்.

மிக முக்கியமானது:- இரண்டு இடங்களில் பதிவை மேற்கொள்வதானது தண்டனைக்குரிய குற்றமென்பதால், உங்களுக்குரிய இடத்தை மாத்திரம் தெரிவு செய்யவும். மிகச்சரியான தேருநர் இடாப்பினைப் பூர்த்திசெய்யவும் வேண்டிய ஒத்துழைப்பையும் வழங்க மறவாதீர்கள்.

B Creations

**மேலதிக தகவல்களுக்கு எம்மை அழையுங்கள்.**

**0783 831 199 - 0758 086 565**

ப.்.வ்ரல், 12/3, றொபற் ரெறஸ், றொபற் குணவர்தன மாவத்தை, கொழும்பு - 06.

**தொலை பேசி 011 2514441/2 - தொலை நகல் 011 2514443**

ப.்.வ்ரல் (C-1552)

Activity supported by the Canada Fund for Local Initiatives
Activité réalisée avec l'appui du Fonds canadien d'initiatives locales
Canada

# மரண அறிவித்தல்



## கந்தையா சந்திரபாலன்

யாழ். வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் வற்றாப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி உணவக உரிமையாளர் கந்தையா சந்திரபாலன் (வடை ஐயா) அவர்கள் 12.11.2012 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தங்கரத்தினத்தின் அன்பு மகனும் அமராவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னத்துரை பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சசிகரன் (பிரான்ஸ்), சசிகலா (வட்டக்கச்சி), சசிரேகா (பிரான்ஸ்), சசிரூபா (விசுவமடு), சசிரூபன் (பிரான்ஸ்), லதனா (பிரான்ஸ்) சத்தியா, பரந்தாமன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுபாஜினி, சுதாகரன், செல்வரூபன் (சதா), தயாதேவன், பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமனும் சற்குணபாலன், ரூபராணி, தங்கராணி காலஞ்சென்ற தேவராணி, விஜயபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாதம், அமுதலிங்கம் (ராசா), மல்லிகாதேவி ஆகியோரின் மைத்துனரும், தாருசன், விதுசன், கஜீபனா, தானுஜா, சஜீதா, தானுசா, ஜெனார்த்தனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.11.2012 அன்று வற்றாப்பளையில் இடம்பெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

வற்றாபளை, முள்ளியவளை, முல்லைத்தீவு. (C-1554)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோடு யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org